www.tamilarangam.net

அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 05-08-1994

உள்ளே...


- தேர்தலும் தமிழர் இனப்பிரச்சினையும்
- இலங்கையில் நிலவும் அனைத்து பிரச்சினைகளுக்கும் ஐ.தே.கவே காரணம்
- சிறீலங்காவின் ஜனநாயக அரசியலில் ...
- அமைதிக்கு அப்பாலும்...
- தமிழீழ உட்கட்டுமானம்
- சிறுகதை - தடைக்கற்கள்


# பண்டத்தரிப்பில் இராணுவ தரைநகர்வு விடுதலைப் புலிகளால் தடுத்து நிறுத்தம்

## □ யாழ், ஊறணி வைத்தியசாலைகளை சிறீலங்காப் படைகள் தாக்கின

சிறீலங்கா அரசாங்கம் தனது படைகளை தரைநகர்த்துவதற்கான முயற்சிகளிலும், தமிழீழ மக்களின் குடியிருப்புக்கள் மீது குண்டு -செல் வீசும் செயல்களிலும் தொடர்ந்து ஈடுபடத் தொடங்கியுள்ளது. ஆயினும், தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாமல் படையினர் பின்வாங்கித் திணறி வருகின்றனர்.

பண்டத்தரிப்பில் இருந்து இராணுவத் தரைநகர்வுக்கு முயற்சித்த சிறீலங்கா இராணுவ அணியினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலில் இரண்டு சிறீலங்கா இராணுவ உயர்அதிகாரிகளினதும், மூன்று சிறீலங்கா இராணுவத்தினரினதும் படுகாயங்களுடன் பின்வாங்கிச் சென்றுள்ளதாகச் சிறீலங்காப் படைகளின் தலைமையகம் கொழும்பில் அறிவித்துள்ளது. ஆயினும், சிறீலங்கா இராணுவத்தினருக்கு இழப்புக்கள் அதிகமாக இருக்குமென்று சர்வதேச செய்தியாளர்கள் கருதுகின்றனர்.

நேரடியாக விடுதலைப் புலிகளுடன் மோத முடியாத சிறீலங்காவின் கூலிப்படைகள், பொதுமக்கள் குடியிருப்புகளைப் பரவலாகத் தாக்கி வருகின்றனர் எனத் தெரிய வருகின்றது. வல்வெட்டித்துறையில் விமானங்கள் குண்டு வீசியதில் மூன்று பொதுமக்கள் உயிரிழந்ததுடன், 15 பொதுமக்கள் காயங்களுக்கு உள்ளானதாகவும் தெரிய வருகின்றது. காலை 9 மணி முதல் மதியம் 2 மணிவரை விமானங்கள் குண்டுவீச்சில் ஈடுபட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இப்பரவலான குண்டு வீச்சுக்களின்போது, ஊறணி வைத்தியசாலை தாக்குதலுக்கு இலக்கானதாகவும் நோயாளர் தங்கியிருந்த பகுதிகள் சேதத்துக்கு உள்ளானதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மண்டைதீவில் இருந்து யாழ். வைத்தியசாலை நோக்கி ஏவப்பட்ட செல் வீச்சு ஒன்று, வைத்தியசாலையின் முன்றலில் விழுந்ததெனவும் ஆயினும், அது வெடிக்கவில்லை என்றும் செய்திகள் கூறுகின்றன.

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...




இலண்டனில் நடைபெற்ற 83 ஆடி இன அழிப்பு நினைவுக் கூட்டத்தில் கருத்துரை வழங்கிய, பல்வேறு விடுதலை அமைப்புக்களின் பிரதிநிதிகள். (இப் பிரதிநிதிகள் ஆற்றிய கருத்துரைகளின் தொகுப்பு நடுப்பக்கத்தில் தரப்பட்டுள்ளது).

# தமிழீழத்தின் இருக்கை நிலையை சிறீலங்கா உயர் நீதிமன்றம் ஏற்பு

## சர்வதேச மன்றுக்கு விவகாரம் பாரப்படுத்தப்பட்டது

தமிழீழத்தின் இருக்கை நிலை (Existence)யை சிறீலங்காவின் உயர்நீதிமன்றம் ஏற்றுள்ளது. சிறீலங்கா அரசாங்கம் யாழ்ப்பாண மாவட்டத்திலும் தேர்தலை நடாத்த விடுத்துள்ள அறிவிப்பானது அடிப்படை உரிமை மீறல் ஆகும். ஆகையினால் அதனைத் தடை செய்ய வேண்டுமெனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் வாதாடிய சட்டத்தரணி அபயக்கோன் என்பவர், "யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் நீதிமன்றங்களும் சட்டக்கோவைகளுமே நீதித்துறையில் நடைமுறையில் உள்ளன. தேர்தல் அதிகாரி என சிறீலங்கா அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட யாழ்ப்பாண சிறீலங்கா அரச அதிபர்கூட அங்கு செயலாற்ற முடியாதுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது சிறீலங்காவினால் தமிழீழத்திற்கான சட்டவாக்கம், சட்ட அமுலாக்கம், நிர்வாகம் எனும் மூன்று வலுக்களையும் செய்ய முடியாத நிலை காணப்படுவதினால், அங்கு சிறீலங்காவின் இறைமை இழக்கப்பட்டு தமிழீழத்தின் இறைமை செயற்படத் தொடங்கிவிட்டது என்பதையே அவரின் வாதம் சுட்டிக் காட்டியது.

இதற்குப் பதிலளித்த சிறீலங்காவின் உயர்நீதிமன்ற நீதிபதி குலதுங்கா, "அங்கு (தமிழீழத்தில்) சிறீலங்கா அரசாங்கத்தின்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

# சிறீலங்காவின் சிங்களக் கட்சிகள் ஒரேவிதமான போக்கையே காட்டுகின்றன

சிறீலங்காவின் சிங்களக் கட்சிகள் அனைத்தும், வழமை போல் சிங்கள பௌத்த பேரினவாத உணர்வையே தமது தேர்தல் பிரச்சார மேடைகளில் முழங்கி வருகின்றன. சிறீலங்கா ஜனாதிபதி விஜேதுங்கா, "நாட்டைப் பிளவுபட விடமாட்டோம். பொதுசன ஐக்கிய முன்னணியினர் முஸ்லீம் காங்கிரசுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து, வடக்கு -கிழக்குப் பிரிப்பை ஏற்றுக்கொண்டதன் மூலம் ஐக்கிய இலங்கை பிளவுபடுவதை அனுமதித்துவிட்டனர். நாம் ஆட்சிக்கு பலமுடன் வந்தால் மட்டுமே, ஐக்கிய இலங்கையின் கீழ் பிரச்சினைக்கு முடிவுகட்டுவோம்" என முழங்கி வருகின்றார். அதேவேளை, ஐக்கிய தேசிய கட்சிப் பிரமுகரான விக்கிரமசூரிய, "பொதுசன ஐக்கிய முன்னணியினர் மாகாண எல்லைகளை மாற்றி அமைப்பதன் மூலம், தீர்வு காணப்போவதாகக் கூறுவதன் மூலம், முஸ்லீம்களுடன் சேர்ந்து நாட்டைப் பிரிக்க ஆயத்தமாகிவிட்டனர். பொதுமேடையில் பொதுசன ஐக்கிய முன்னணி தமிழர் தாயகக் கோட்பாட்டை ஏற்கவில்லை என பகிரங்கமாகக் கூறவேண்டும்" என சவால் விட்டு வருகிறார்.

அதேநேரத்தில், பொதுசன ஐக்கிய முன்னணியின் மூத்த தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கா, "சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதன் மூலம் நியாயமான அளவு அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்படுத்துவோம்" எனக் கூறியுள்ளார். சந்திரிகா பண்டாரநாயக்கா "ஐக்கிய இலங்கையின் கீழ் வடக்கையும் தெற்கையும் இணைப்போம்" எனக் கூறிவருகின்றார். இவைகளைப் பார்க்கையில் பொதுசன ஐக்கிய முன்னணியும், தமிழர் பிரச்சினை என்ற வடிவில்கூட, தமிழர் அபிலாசைகளை அணுக மறுத்து முன்னையது போலவே, சிறுபான்மை பெரும்பான்மை கோசங்களை

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

# சிறீலங்காப் படையினர் 4 வயது குழந்தையை மிருகத்தனமாகத் தாக்கினர்

## ■ வேதனை தாங்காது தாய் தற்கொலை

சிறீலங்காவின் விசேட அதிரடிப்படையினர், அக்கரைப்பற்று பனங்காட்டு கிராமத்தில் ஒரு நான்கு வயதுக் குழந்தையையும், அக்குழந்தையின் தந்தையையும் மிருகத்தனமாகத் தாக்கியுள்ளனர். இதனைக் கண்டு மனம் துடித்த தாய் குமாரவேலு பார்வதி (வயது 34) நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டுள்ள பரிதாபச் சம்பவம், மட்டக்களப்பு அக்கரைப்பற்று பனங்காட்டுக் கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு உணவு கொடுத்ததாகக் கூறியே, இந்தக் கொடுமையான செயலை சிறீலங்காப் படையினர் தென்தமிழீழத்தில் நடத்தியதாக உயிர் தப்பிய குமாரவேலு கூறியுள்ளார்.

### பெண்பித்தர்களாக சிறீலங்காப் படையினர்

அத்துடன் அக்கரைப்பற்று பன்னங்குடாப் பகுதியில், நள்ளிரவு நேரங்களில் சுற்றி வளைப்பு நடவடிக்கை என்ற பெயரில் வீடுகளை முற்றுகையிடும் சிறீலங்கா இராணுவத்தினர், தமிழ்ப் பெண்களுடன் தான்தோன்றித்தனமான முறையில் நடந்து கொள்வது வழமையாகிவிட்டது. இதுவே திருமதி குமாரவேலு பார்வதியின் உளஅச்சத்துக்குக் காரணமாகி, அவரைத் தற்கொலை செய்ய வேண்டிய நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது எனவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# போர்த்துக்கலில் இருந்து வரலாற்று ஆவணங்களை மீளப்பெற முயற்சி

## □ பிரசல்சில் பேச்சுவார்த்தை

போர்த்துக்கல் அரசாங்கத்தின் ஆவணக் காப்பகங்களிலும், நூதனசாலைகள், நூலகங்கள் என்பவற்றிலும் உள்ள, இலங்கைத் தீவு சம்பந்தமான வரலாற்று ஆவணங்களைத் திருப்பிப் பெறும் முயற்சியில் சிறீலங்கா அரசாங்கம் இறங்கியுள்ளது.

முதன் முதலில் தமிழர் தாயகப் பிரதேசங்களைக் கைப்பற்றியவர்கள் போர்த்துக்கேயராவர். இதனால் தமிழர்களுடைய தாயகம், தமிழர்களின் வரலாறு, தமிழர்களின் நாட்டினத் தன்மை என்பவற்றின் பூர்வீகச் சான்றுகள் போர்த்துக்கல் ஆவணக் காப்பகங்களிலேயே உள்ளன. இவற்றைத் திருப்பிப் பெற்று வரலாற்றுத் தடயங்களையும் சான்றுகளையும் அழித்து ஒழிக்கும் முயற்சிகளில் சிறீலங்கா அரசாங்கம் இறங்கியுள்ளது.

கடந்த வாரத்தில் பிரசல்ஸ்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தமிழீழ விருப்பு

"மக்களுக்காக மக்களால் உருவாக்கப்படும் மக்களின் அரசாங்கம்" என சனநாயகம் என்பதற்கு ஆபிரகாம் லிங்கம் விளக்கம் கொடுத்தபோதிலும், நடைமுறையில் எந்த ஒரு நவீன சனநாயக அரசினது பிரதிநிதித்துவ அமைப்பு முறையும், இந்த விளக்கத்தைச் சரிவரப் பூர்த்தி செய்யவில்லை என்பது 'போல் சீகாட்' (Paul Sieghart) போன்ற ஆய்வாளர்களின் முடிவு. சனத்தொகை ரீதியாக அதிக எண்ணிக்கையானவர்கள், குறைந்த எண்ணிக்கையானவர்கள் மேல் கொடுங்கோன்மையைத் தோற்றுவிக்கவும் சனநாயகம் வழிசமைத்து விடுகிறது என்கிறார் போல் சீகாட். இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக இலங்கைத் தமிழர்கள் வரலாறு திகழ்கிறது. அத்துடன் பெரும்பான்மை மக்களின் அபிப்பிராயத்தை மூடிமறைத்து, சிறுகுழுக்களின் அபிப்பிராயத்தை மக்களின் அபிப்பிராயம் என மகுடமிடுவதற்கும், சனநாயகம் பயன்படுத்தப்படுவதை இவர் சுட்டிக்காட்டுகிறார். இன்று தமிழீழ மக்கள் சிறீலங்கா அரசை ஆக்கிரமிப்பாளனாகக் கருதி 16. 08. 1994 திகதித் தேர்தலை ஆயுத பலாத்காரத்தின் மூலம் சிறீலங்கா நடத்தும் அடிப்படை மனித உரிமை மீறலாக மனங்கொள்கின்ற அதேநேரத்தில், சிறீலங்கா தனது இராணுவ அணியின் துணை அணிகளாகவும் தனது பாராளுமன்ற நிர்வாகத்தின் பக்கத் துணைவர்களாகவும் திகழும், சிறுகுழுக்களான தமிழர்களை முழுத்தமிழீழ மக்களினதும் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளாகக் காட்ட முற்படுவது, போல் சீகாட் கூறும் இரண்டாவது வகைக்கு சிறந்த உதாரணமாகக் காணப்படுகிறது.

ஆகவே தான் சனநாயகம் என்றால் என்ன என்பதை தெளிவுபடுத்துவதற்கு புதிய கோட்பாடு ஒன்றின் தேடலை, சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தினூடாக போல் சீகாட் விளக்குகிறார். "மக்களுடைய விருப்பமே ஒரு அரசாங்கத்தினுடைய அதிகாரத்தின் அடிப்படை. வயது வந்தோர் அனைவரும் சமத்துவமான முறையில் சுதந்திரமாக, இரகசிய வாக்களிப்பு மூலம் தமது விருப்பை வெளிப்படுத்தக்கூடிய வகையில் குறித்த கால இடைவெளியில் நடைபெறும் தேர்தல் மூலம் இந்த மக்கள் விருப்பு வெளிப்படுத்தப்படல் வேண்டும்" என்கிறது சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின் 21(3) ஆவது பிரிவு.

இதில் கூறப்பட்டுள்ள 'மக்களுடைய விருப்பு' என்பதே சனநாயகம் எனும் தத்துவத்தின் ஆணிவேர் என்கிறார் போல் சீகாட். இதன் அடிப்படையில் இலங்கைத் தீவில் உள்ள தமிழ்மக்கள் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணப்படாத இன்றைய நிலையில், தேர்தல் ஒன்று தமிழீழப் பிரதேசத்தில் நடைபெறுவதை விரும்ப மாட்டார்கள். எனவே "நாம் தேர்தலை அனுமதியோம்" எனும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் கருத்து சர்வதேச சட்ட ரீதியானதும் அவசியமானதுமான அறிவிப்பாக உள்ளது.

தென்னிலங்கை தேர்தல் பிரசாரத்தைப் பார்க்கையில் அங்கு சனநாயகம் நிலைபெறல் வேண்டும் என்பதை விட, தத்தமது வெற்றி உறுதியாக வேண்டும் என்பதே நடைமுறையாக உள்ளது. இதனாலேயே தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் ஏற்கப்பட்டது முதல் இன்று வரை பதினொரு அரசியல் படுகொலைகளை உள்ளடக்கிய 800 வன்செயல்கள் பதிவாகியுள்ளன. இப்போது தென்னிலங்கை அரசியல்களம் தான் பயங்கரவாதத்தின் விளைச்சல் நிலம் என்பது உலகிற்குத் தெளிவாகி வருகிறது. அத்துடன் பௌத்த சிங்கள பயங்கரவாதம் தமிழர்களுக்கு ஒருபோதும் நியாயமான தீர்வைத் தரப்போவதில்லை என்பதை தேர்தல் விஞ்ஞாபனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

எனவே தமிழீழ மக்களின் 'தேர்தல் பகிஸ்கரிப்பு' என்பது அர்த்தமுள்ள செயற்பாடாக உள்ளது. மேலும் இடம்பெயர்ந்து வாழும் தமிழர்களில் ஒரு சதவீதமானவர்கள் கூட வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கவில்லை. இது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மட்டுமல்ல, தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் சுயவிருப்பின் பேரில் தேர்தலை நிராகரிக்கிறார்கள் என்பதை உறுதி செய்துள்ளது. ஆகவே தமது சுயநிர்ணய உரிமையை பிரயோகித்து தங்களது எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கான தேசநிர்மாணப் போக்கை சர்வதேச சமூகம் அங்கீகரித்து, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் நேரடியாகப் பேச்சுக்களைத் தொடங்கி நியாயமான -நீதியான அமைதி ஏற்பட உதவ வேண்டும் என்பதே தமிழீழ மக்களின் விருப்பு. இதற்கு ஆதாரமாக 1990 ஆம் ஆண்டு புதிய ஐரோப்பாவுக்கான பாரிஸ் சாசனமும், மனித பரிணாமத்திற்கான கொப்பென்ஜன் மகாநாட்டு முடிவுகள் ஆவணமும், "சுதந்திரத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் இனத்திற்கு வெளிச் சுயநிர்ணய உரிமை (External Selfdetermination) உண்டு எனவும், இந்த இனத்துடன் அது வாழுகின்ற நாட்டினது அரசாங்கத்தின் இறைமையை மீறி சர்வதேச அமைப்புக்கள், நாடுகள் தொடர்புகொண்டு அவ்வினத்தின் சுயநிர்ணய உரிமையை ஒழுங்குபடுத்த உதவலாம்" என வலியுறுத்துகிறது என்பதை சுட்டிக் காட்ட வேண்டியவர்களாக தமிழர்கள் உள்ளனர். ■

# மேலும் 30 வகைப் பொருட்கள் வடபகுதிக்கு எடுத்துவரக் கட்டுப்பாடு

தடைசெய்யப்பட்ட பொருட்களையும் மற்றும் தடைசெய்யப்படாத பொருட்களையும் யாழ். குடாநாட்டுக்கு எடுத்து வருவதற்கு, இவ்வருடம் ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் புதிய ஒழுங்குமுறைகள் அமுல் படுத்தப்பட்டுள்ளன. தடைசெய்யப்படாத பொருட்களை அத்தியாவசிய சேவைகள் ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியுடன் எடுத்துவர அனுமதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்படாத பொருட்களை வழமைபோல், தேசியப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை தலைமைச் செயலகத்தின் அனுமதியுடன்தான் யாழ். குடாநாட்டுக்குக் கொண்டுவரலாம் என்று யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகருக்கு பாதுகாப்பு அமைச்சு அனுப்பியுள்ள சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளது. ஏப்ரல் 11 ஆம் திகதியிட்டு பாதுகாப்பு அமைச்சு, யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ள அந்தச் சுற்று நிருபத்தில், முன்பு தடைசெய்யப்பட்ட பொருட்களுடன், மேலதிகமாகத் தடைசெய்யப்பட்ட 30 பொருட்களின் விசேட பட்டியல் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. 1991 டிசம்பர் 9, அரச வர்த்தமானி இலக்கம் 692 இல் தடைசெய்யப்பட்ட பொருட்களுடன், மேலதிகமாக இந்த முப்பது வகையான பொருட்களும் தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விசேட பட்டியலின் பிரகாரம் ஏற்கனவே தடைசெய்யப்பட்ட பொருட்களுடன், மேலதிகமாகத் தடைசெய்யப்பட்ட பொருட்களின் விபரம் பின்வருமாறு: வீடியோ கமரா, வீடியோ கசட், கணனி, கமரா, படச்சுருள், தகரத்தில் அடைக்கப்பட்ட உணவு வகைகள், பிஸ்கட், சொக்லட், தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய், படகு மற்றும் கண்ணாடி இழைப்படகுகள் திருத்துவதற்கான பசை, ஸ்பிரிட், பி. வி. சி. குழாய், படகு வெளியிணைப்பு இயந்திரம், கன்வெஸ் துணிவகைகள், நீர் மூழ்கு சாதனங்கள், ரபர் பாண்ட் / பலூன் / பிளாஸ்டிக் மழைச்சட்டைகள், சூரிய ஒளிச் சாதனம், எனாமல் பெயின்ற், அன்ரிகுறோசிவ் பெயின்ற், எமல்கலர் பெயின்ற் (கடும் நிறங்கள்), அரிசி ஆலை உதிரிப்பாகங்கள், வயர்ச் சுருள், சைக்கிள் செயின், ஓடியோ கசட், சம்பூ (எல்லா ரகமும்), ஆணிவகைகள், மண்ணெண்ணெய் / எஞ்சின் ஒயில், சைக்கிள், ஜெனரேட்டர் / நீர்ப்பம்பி மற்றும் (உதிரிப்பாகங்கள்), நெருப்புப் பெட்டி மற்றும் வேறு சந்தேகத்துக்குரிய பொருட்கள். ■

# இராணுவக் காவலரண்களில் பாலியல் வன்முறை

திருகோணமலையில் [illegible]றீலங்காப் படையினரால் அ[illegible] பட்டு வரும் புதிய இ[illegible] காவலரண்கள் பாலிய[illegible] முறைக் களங்களாகவும் [illegible] படுத்தப்பட்டு வருகின்ற[illegible]

கடற்கரைச்சேனை, ந[illegible] சந்தை ஆகிய பகுதிக[illegible] காட்டுப் பகுதிகளுக்கு [illegible] வெட்டச் செல்லும் தமிழ்[illegible]கள் பலர், அங்கு புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் காவலரண்களுக்கு படையினரால் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இக்காவலரண்களில் வைத்து, இப்பெண்கள் தொடர்ச்சியான பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதனால் இப்பெண்கள் அக்காவலரண்களிலேயே இறந்தும் விடுகின்றனர் என்று, அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ■

# கைதான 22 பேரை விடுவிக்க உரிமை மீறல் வழக்கு

கடந்த ஆண்டு கிழக்கு மாகாணத்தில் காரணம் ஏதுமின்றி, படையினரால் கைதாகி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாது, மட்டுநகர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 22 தமிழ்க் கைதிகள் தமது விடுதலைவேண்டி, பிரதம நீதியரசருக்கு விண்ணப்பித்ததன் பேரில், சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமை மீறல் நிலையம், மேற்படி 22 கைதிகள் சார்பிலும் அடிப்படை உரிமைமீறல் வழக்குத் தாக்கல் செய்ய, கைதிகளின் கையெழுத்தை அவர்களின் சத்தியக் கடதாசியில் பெற்றுள்ளது.

இந்த 22 பேரில், அதிக காலம் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர், பி. சத்தியசீலன் 27. 01. 1993 இல் கைதானார். மிகக் குறைந்த காலம் இருப்பவர் 04. - 01. 1994 இல் கைதான கே. மிருகண்டன். 22 பேரில் காத்தான்குடியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை கிருபேந்திரன் (வயது 17) தமது சத்தியக் கடதாசியில் தமக்கு ஏற்பட்ட சித்திரவதைகளை விபரித்துள்ளார். அதில், "எனக்கு 17 வயது. ஆறுபேர்கொண்ட குடும்பத்தைக் கூலி வேலை செய்து, நானே காப்பாற்றி வந்தேன். 18. 04. 1993 இல் நண்பகல் நான் காத்தான்குடி நகரில் இருந்தேன். அப்போது மட்டுநகர் பொலிஸ் பாதுகாப்பு ஒன்றிணைப்புப் பிரிவு சார்ஜண்ட் கதிர்காமன் உட்பட பல அதிகாரிகள் வந்து, என்னைக் காரணம் எதுவும் கூறாமல் கைது செய்தனர். என்னை மட்டுநகர் பொலிசைச் சேர்ந்த காட்டு இலாகா கட்டிட முகாமிற்குக் கொண்டுசென்றனர்.

எனக்கு அறிமுகமில்லாத அதிகாரிகள் என்னை நிர்வாணமாக்கினர். பெற்றோல் நிரப்பப்பட்ட பொலித்தீன் பையை எனது தலையில் போட்டு கழுத்தில் கட்டினர். நான் மயங்கினேன். பின் என்னைத் தண்ணீர்த் தொட்டி ஒன்றினுள் போட்டு மூழ்கடித்தனர். நான் மீண்டும் மூர்ச்சை இழந்தேன். இந்தச் செயல்களினால், இப்போதும் சுவாசிப்பது கடினமாக உள்ளது. எனது உறுப்புகளில் நைலோன் கயிறுகளைக் கட்டி இழுத்தனர்.

அந்தக் காட்டு இலாகாவில் 8 மாதங்கள் தடுத்து வைத்தபின்னர், பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கு மாற்றி, இன்றுவரை தடுத்துவைக்கப்பட்டுள்ளேன். எனக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகள், பொலிசாரால் குரூரமாக மேற்கொள்ளப்பட்டன. நான் முன்னர் குற்றங்கள் புரிந்தவனல்ல, எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ■

# சித்தாண்டியில் இரு குழந்தைகள் எறிகணைக்குப் பலி

தென் தமிழீழத்துச் சித்தாண்டியில், முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த, 3 வயது முத்துலிங்கம் ஜெயகாந்தினியும், 5 வயது முத்துலிங்கம் கருணாநந்தியும் எறிகணையில் அடிபட்டு, துடிதுடித்து இறந்தனர்.

ஏறாவூர் சிறீலங்காப் பொலிஸ் பகுதியிலுள்ள, மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமிலிருந்து, ஏவப்பட்ட எறிகணைகளே, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இந்த இரு சின்னஞ்சிறு சிறுமியர்களையும் பலிகொண்டுள்ளது.

இதுபற்றிப் பொதுமக்கள் எழுப்பிய ஆட்சேபனைக்கு, "புலிகள் இயக்க முகாம் இப்பகுதியில் அமைக்கப்படுகின்றது, எனக் கிடைத்த தகவலின் பேரிலேயே இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் நடாத்தியதாக" அலட்சியமான பதிலை சிறீலங்காப் பொலிசார் வழங்கியுள்ளனர். உண்மைக்குப்புறம்பான காரணத்தைக்கூறி, சிறீலங்காப் பொலிசார் சிறீலங்கா இராணுவத்தின் இன அழிப்புச்செயலை நியாயப்படுத்தியதால், இப்பகுதி மக்கள் அதிர்ந்துபோயுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ■

# மரநிழலில் வாழும் அகதிகளுக்கு மீன்பிடிக்கவும் சிறீலங்கா இராணுவம் தடை

தென்தமிழீழத்தைச் சேர்ந்த முறுத்தானைக் கிராமத்திலிருந்து சிறீலங்காவின் அரச பயங்கரவாதத்தால் இடம்பெயர்ந்த 170 குடும்பங்கள், பூவாக்காடு வயற்பிரதேசத்தில் இலுப்பைப் புல் குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். பகல்முழுவதும் இவர்களுக்கு மரநிழல்களே தஞ்சம் அளிக்கின்றன.

இவர்கள் தங்களது வயிற்றுப் பசியைப் போக்க பூவாக்காடு ஆற்றில் மீன்பிடித்தும், ஆற்றைக் கடந்து சென்று அயற்கிராமங்களில் கூலி வேலை செய்தும் வந்தனர்.

கடந்த வாரம் இந்த அகதி மக்கள் பூவாக்காடு ஆற்றில் மீன் பிடிப்பதையும் ஆற்றைக் கடப்பதையும் தடை செய்வதாக, சிறீலங்கா இராணுவத்தினர் இம்மக்களிடம் அறிவித்துள்ளனர். இதனால் சர்வதேச யுத்தச் சட்டங்களுக்கு முரணான வகையில் பயணக் கைதிகளாக்கப்பட்டுவிட்ட இம்மக்கள், அன்றாடம் வயிற்றுப்பசியால் வாடுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறீலங்கா அரசியல் சாசனம் உயிர் உரிமையைக் கொண்டிருக்கவில்லை

## ☐ சர்வதேச மன்னிப்புச் சபை கருத்து

சிறீலங்காவின் அரசியல் சாசனத்தின் சமகால அடிப்படை உரிமைகள் அத்தியாயம், உயிர் உரிமையைக் கொண்டிருக்கவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபை பகிரங்கக் கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

அத்துடன் சிறீலங்காவின் பாதுகாப்புப் படையினர், தண்டனை அச்சமின்றி செயற்பட்டு வருவதை உடன்நிறுத்த, சிறீலங்கா நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அக்கடிதம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளது.

சர்வதேச மனிதாபிமான தரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும், சர்வதேச தரத்திற்கு சிறீலங்காவின் அரசியல் சாசனம் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. ■

# "வரி மூலம் பெறும் ஆயுதங்களை புலிகள் எடுத்துச் செல்கின்றனர்"

### ■ சு.க. பொதுச்செயலர் தர்மசிறி சேனநாயக்கா

"அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றைக் கொண்டுவரும் பொருட்டு, அரசியல் தீர்வொன்றை முன்வைக்காது, யுத்த தீர்வையே நாடுகின்றது" என, சுதந்திரக் கட்சிப் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

வெரித்தாஸ் சிங்களச் சேவைக்கு அளித்த விசேட பேட்டியொன்றில், அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், "அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையினால், வடக்கு - கிழக்கு மக்கள் மட்டுமன்றி ஏனைய கிராமப்புற மக்களும் கஸ்டங்கள், துன்பங்களுக்கும் அழிவுகளுக்கும் முகம்கொடுக்கும் நிலை காணப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு யுத்தத்தை அதிகாரிகள் இன்று ஓர் வாணிபமாகக் கருதி செயற்படுவதினால், இந்த அரசாங்கத்தினால் ஒரு நாளும் இவ் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாது.

அரசாங்கம் தனது நடவடிக்கையால் பலவீனம் அடைந்திருப்பதினால், விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல்களை மேற்கொண்டு, பல இலட்சக்கணக்கான ஆயுதங்களைப் பறித்துச் செல்கின்றனர். இதனால் விடுதலைப் புலிகள் பலம் அடைகின்றனர். இனப்பிரச்சினைக்கு யுத்தத்தினாலேயே தீர்வொன்றைக் காணமுடியும் எனக்கருதும் அரசாங்கம், யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்காக பாதுகாப்பு வரியை அறவீடு செய்கின்றது. ஆனால், இவ்வாறு வரி அறவீட்டின் மூலம் பெறப்படும் ஆயுதம் விடுதலைப் புலிகளின் கைக்குச் செல்வதன் மூலம், அரசாங்கத்தின் நிலையை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்" எனவும் அவர் தெரிவித்துள்ளார். ■

# 1964 இல் சிங்கள அரசால் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு இதுவரை நட்டஈடு இல்லை

சிறீலங்காவின் சிங்கள அரசு, தனது இராணுவம் மற்றும் பொதுத் தேவைகளுக்கென தமிழீழத்தில் சுவீகரித்த காணிகளுக்கான நட்ட ஈட்டுத்தொகையை பொதுமக்களுக்கு பல வருடங்களாகியும் வழங்காதுள்ளது.

யாழ். மாவட்டத்தில், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை அமைப்பதற்கென 1964 ஆம் ஆண்டில், பல கெக்டேயர் நிலத்தை சுவீகரித்தது. இதில், ஒரு சிலருக்கு இதுவரை அதற்கான நட்ட ஈடு வழங்கப்படாத நிலையிலேயே உள்ளது.

இதேபோல் காரைநகரில், கடற்படைத்தள விஸ்தரிப்பிற்கென 1986 ஆம் ஆண்டில், 30 கெக்டேயர் வரையிலான நிலமும் பலாலி இராணுவ முகாம் விஸ்தரிப்பிற்கென 1987 ஆம் ஆண்டில், 275 கெக்டேயருக்கு மேற்பட்ட நிலமும் அரசினால் சுவீகரிக்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை, இவற்றுக்கான நட்ட ஈடு வழங்குவது தொடர்பாக அரசு எவ்வித அக்கறையும் செலுத்தவில்லை எனத் தெரியவந்துள்ளது. இதற்கான நட்ட ஈட்டுத் தொகையை பெற்றுத்தரும்படி காணிகளைப் பறிகொடுத்த பொதுமக்கள் செயலகத்தில் முறையிட்ட பொழுதிலும், கடந்தகால நிர்வாகம் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை. ■

# மட்டு - அம்பாறை மாவட்டங்களில் பிரகடனப்படுத்தப்படாத இராணுவ ஆட்சி

### ■ மட்டு - அம்பாறை அரசியல் பொறுப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பிரகடனப்படுத்தப்படாத இராணுவ ஆட்சி நிலவுவதாக மட்டக்களப்பு, அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழன்பன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக, 'புலிகளின் குரலு' ,க்கு வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த இரு மாவட்டங்களிலும் அரச அதிபர், உதவி அரச அதிபர் ஆகியோர் உள்ளபோதும், பாதுகாப்பு இணைப்பு அதிகாரி பிரிகேடியர் றோகான் குணவர்த்தனாவின் ஆட்சிதான் அங்கு நடக்கின்றது.

சமீபத்தில், அரசினால் நடத்தி முடிக்கப்பட்ட உள்ளூராட்சி, பிரதேச சபைகளுக்கான வேட்பாளர்கள் பலாத்காரமாக நிறுத்தப்பட்டனர். ஆனால் விடுதலைப் புலிகள், குறித்த வேட்பாளர்களைப் போட்டியிட அனுமதித்ததாக சிறீலங்காப் படையினர் பொய்ப் பிரச்சாரம் மேற்கொண்டு மக்களின் ஆதரவைப் பெற முனைந்தனர்" எனக் குறிப்பிட்டார்.

மட்டு - அம்பாறை மக்களின் தொழிலான மீன்பிடி, மற்றும் விவசாயத் தொழிலிலும் அரசு தடைகளைப் போட்டுவருகிறது. அத்துடன், தொழிலாளரும் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். ஆண்களை இழந்த பெண்களுக்குச் சுயதொழில் பயிற்சியை வழங்க எவரும் முன்வரவில்லை.

முகாம்களில் மக்கள் கால்நடைகள் போல் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர். இடம்பெயர்ந்தோர் முகாம்களில், சுகாதார நிலமை மோசமாக உள்ளது. சில இடங்களில் மக்கள் மீளக்குடியமர விரும்பிய போதிலும் சிறீலங்கா அரசு அக்கறை காட்டுவதில்லை. குறிப்பாக எல்லைக் கிராமங்களில், அவர்களைக் குடியமர்த்த அரசு பின் நிற்கின்றது. மாறாக அப்பகுதிகளில், சிங்கள மக்களைக் குடியமர்த்துவதிலேயே அரசு அக்கறை கொண்டுள்ளது என்றார். ■

# அமரர் துரைராசாவிற்கு விஞ்ஞான கலாநிதிப்பட்டம்

### கொழும்பு திறந்த பல்கலைக்கழகம் வழங்கியது

கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தின் ஏழாவது பட்டமளிப்பு விழா, அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

காலஞ்சென்ற யாழ் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தரும், திறந்த பல்கலைக்கழக பொறியியல் தொழில்நுட்ப பீடத்தலைவருமான பேராசிரியர் அ. துரைராசாவுக்கு மரணத்துக்குப் பிந்திய விஞ்ஞானக் கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது. அத்துடன் பிரிட்டனின் திறந்த பல்கலைக்கழக உபவேந்தர் ஜோன்டானியல், கனடா அதபஸ்கா பல்கலைக்கழகத் தலைவர் கலாநிதி ரெரன்ஸ் மொறிஸ் ஆகியோரும் கௌரவப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். ■

# மாமாங்கப் பிள்ளையாரை வழிபட இராணுவத்தினரை வழிபட வேண்டிய அவலநிலை

மட்டக்களப்பின் சரித்திர பிரசித்தி பெற்ற மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம், ஆடி 27 முதல் ஆவணி 7 வரை நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. அதனை பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் தேர்தல் நடவடிக்கைகளுக்காகவும் தடைசெய்வதாக, மட்டக்களப்பு மாவட்ட சிறீலங்கா இணைப்பதிகாரி ஆலய பரிபாலன சபைக்குக் கட்டளையிட்டுள்ளார்.

இதனையடுத்து இராணுவத்தினரிடம் கெஞ்சிக் கூத்தாடிய சிறீலங்காவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், அனுமதியைப் பெற்றுக் கொடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆயினும் பயங்கரவாதிகள் எவ்வகையிலாவது ஆலய உற்சவத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கக் கூடாது என சிறீலங்கா இராணுவம் நிபந்தனை விதித்துள்ளதாம். இந்த நிபந்தனை மூலம் சிறீலங்கா இராணுவம் திருவிழாவில் பங்குபற்றும் மக்களைத் தாக்கிவிட்டு, பயங்கரவாதிகள் காணப்பட்டனர் எனச் சொல்லித் தப்பித்துக் கொள்ளவே இந்த உத்தி கையாளப்படுவதாக மக்களிடையே பலத்த அச்சம் ஏற்பட்டுள்ளது. வருமானத்தைக் கருதியே திருவிழாவை நடாத்தி, மக்களுக்கு உயிராபத்து ஏற்படக் கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளதாக சில பொதுசன பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது இப்படியிருக்க, சிலாபம் முன்னேஸ்வரர் கோவில் திருவிழாவையும் சிறீலங்காப் படைகளின் நிர்ப்பந்தத்தின் பேரில், தேர்தலுக்கு பின்னர் நடாத்த ஆலய பரிபாலன சபை முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது. ■

# முதல் மூன்று மாதத்தில் வெளிநாட்டுப் பணம் 730 கோடி

சிறீலங்காவுக்கு வெளிநாட்டில் வசிப்பவர்களிடம் இருந்து, இவ்வாண்டின் முதல் மூன்று மாதத்தில் 730 கோடியே 60 இலட்சம் ரூபா பணமாக அனுப்பப்பட்டுள்ளது என அறியவருகிறது.

வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் பணம், இதில் கணிசமான அளவு என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சிறீலங்காவின் ஏற்றுமதிகள் இந்த மூன்று மாத காலத்தில் 1.6% ஆல் அதிகரித்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் வாழும் தமிழ் வர்த்தர்கள், நடாத்தும் கடைகள் சிறீலங்காப் பொருட்களை சிறீலங்காவில் இருந்து இறக்குமதி செய்து விற்பனைக்கு விடுவதும் இந்த ஏற்றுமதி அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும். ■

# உள்ளூர் உணவுப்பொருட்களை முழுமையாகப் பயன்படுத்தவேண்டும்

"உள்ளூரிலே போசாக்கு மிக்க உணவு வகைகள் இருக்கும் போது, போசாக்கு உணவு வகைகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படவேண்டும் என எதிர்பார்த்திருப்பது கவலைக்குரியதாகும். உள்ளூரிலே உள்ள போசாக்கு மிக்க உணவுவகைகளை முழுமையாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இங்கு திறந்து வைக்கப்பட்டுள்ள 'சத்துணவுக்கூடம்' இப்பகுதி மக்கள் உள்ளூரில் உள்ள போசாக்கு உணவு வகைகளை முழுமையாகப் பயன்படுத்த வழிவகுக்க வேண்டும் "

மேற்கண்டவாறு, பருத்தித்துறை பிரதேச செயலக போசாக்குக் குழுவும், வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து அமைத்துள்ள சத்துணவுக் கூடத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல் குறிப்பிட்டார். பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி சத்துணவுக் கூட பெயர்ப்பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார். முதலில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வடமராட்சி இணைப்பாளர் திரு. வளவன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து, பிரதேச செயலர் திரு. சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் போல் குறிப்பிட்டதாவது;

இன்று போசாக்குக் குறைவினால் எமது பகுதி மக்கள் பல்வேறு வகைகளிலும் பாதிப்படைந்து சொல்லொணாக் கஸ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இவர்களுக்குப் போசாக்கு நிறைந்த உணவுவகைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். சிறுவர்கள், மாணவர்களின் போசாக்கு நடவடிக்கைகளில் அதிக அக்கறை எடுக்கப்படவேண்டும். இன்று இங்கு திறந்து வைக்கப்பட்ட சத்துணவுக்கூடம் போன்ற கூடங்கள் பல பாடசாலைகளுக்கு அருகாமையிலும் திறக்கப்படவேண்டும். இப்பகுதியின் போசாக்கு நடவடிக்கைகளின் பிரதேச செயலர் திரு. சிவசுவாமி மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டப்படவேண்டியன. " சத்துணவுக்கூடம் " ஒன்று முதன்முதலாகத் திறந்து வைக்கப்பட்டிருப்பது மிக மகிழ்ச்சிக்குரியதாகும். நாம் போசாக்கு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தத் தவறினால், அது எமது சமுதாயத்தைப் பேரழிவுக்கு இட்டுச்செல்லும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. போசாக்கு உள்ள உணவுவகைகளை மக்கள் முழுமையாகப் பயன்படுத்தி இன்று நிலவும் போசாக்கின்மையை நீக்கி, எதிர்காலத்தில் திடகாத்திரமான நாட்டிற்குகந்த மக்களை உருவாக்க முடியும் என்றார். ■

# இரத்த தானம் அளித்தவர்களுக்கு நலன்புரிச் சங்கம் கௌரவம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர், நோயாளிகளுக்கு இரத்த தானம் அளித்த கொடையாளிகளை அண்மையில் நடந்த வைபவம் ஒன்றின் மூலம் பாராட்டியுள்ளனர்.

இவ்வைபவத்தில் இதுவரை இரத்த தானம் அளித்த பலர் கௌரவிக்கப்பட்டதுடன், அவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைமைப் பணியகத்தில், வைத்திய கலாநிதி சிவபாலன் தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலனும் சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி அருளும் கலந்துகொண்டனர்.

இரத்த தானம் அளித்தோர், நோயாளர், நலன்புரிச் சங்கத் தொடண்டர்கள், மற்றும் போதனா வைத்தியசாலை ஊழியர்கள் பலரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேர்தலும் தமிழர் இனப்பிரச்சினையும்

ஆகஸ்ட் 16 ஆம் திகதி சிறீலங்கா நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெறும் என்று, அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துவிட்டது. வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு சிங்கள தேசத்தில் தேர்தல் களைகட்டத் தொடங்கிவிட்டது.

பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் ஒன்றின் மேல் மற்றொன்று குற்றப் பட்டியல்களையும், அதே வேளை மக்களை நோக்கி வாக்குறுதி வார்த்தைகளையும் அள்ளி வீசிக் கொண்டிருக்கின்றன. 1970 தொடக்கம் 1977 வரையான சுதந்திரக் கட்சியின் ஆட்சியில், மக்கள் அனுபவித்த துன்பங்களையும் கஸ்டங்களையும் சிங்கள மக்களுக்கு நினைவூட்டி, அவர்களது வாக்குகளைக் கவர விஜேதுங்காவும் அவரது கட்சியினரும் முயல்கின்றனர்.

இதேபோல கடந்த 17 வருட கால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் தலைவிரித்தாடிய ஊழல், அதிகார துஸ்பிரயோகம், மற்றும் சிங்கள மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் என்பவற்றை எடுத்துச் சொல்லி சிங்கள வாக்காளர்களைத் தம்பக்கம் திசை திருப்ப, சிறிமாவோ அம்மையாரும் அவரது கட்சியினரும் பிரயத்தனப்படுகின்றனர்.

ஆனால் இந்தத் தீவில் இரத்த ஆறை ஓடச் செய்யும் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கை, எந்த ஒரு கட்சியும் -எந்த ஒரு சிங்களத் தலைவனும் -தனது முதன்மையான பணியாக எடுத்துக் கொள்ளவில்லை.

1977 ஆம் ஆண்டுக்கு முந்தைய 7 வருட "கியூ" யுகத்தை நினைவூட்டுவதுதான், இந்த நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய அத்தியாவசியப் பணி என்பதுபோல, ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுகின்றது; "7 வருட சாபம்" என்ற தலைப்பில் அதற்கே ஐ. தே. கட்சி முக்கியத்துவம் கொடுத்துப் பிரச்சாரம் செய்கின்றது.

அதேபோல, ஊழலும் - அதிகாரத் துஸ்பிரயோகமும் -ஜனாதிபதி ஆட்சி முறையும்தான் இந்தத் தீவை சுடுகாடாக்கிக் கொண்டிருக்கும் நெருக்கடிகளுக்குப் பிரதான காரணம் என்பதுபோல, சுதந்திரக் கட்சி நடந்துகொள்கின்றது.

பல்லாயிரக்கணக்கில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கும், ஆயிரக்கணக்கில் சிங்கள இளைஞர்கள் உயிரிழப்பதற்கும், இந்தப் போரால் இரு தேசிய இனங்கள் மத்தியிலும் தலைதூக்கியுள்ள பல்வேறு சமூக -பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் இந்த இரண்டு பிரதான கட்சிகளுமே முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

இனப்பிரச்சினையைப் பொறுத்தளவில் பிரதான கட்சிகள் இரண்டுமே, அதை ஒரு தீண்டத்தகாத விடயத்தைப் போலவே கருதி தூர வைத்துள்ளன.

தமிழினத்தின் உரிமைகளை எவ்வளவுக்கு எவ்வளவு பறித்து, சிங்களப் பேரினவாதத்தை திருப்திப்படுத்த முடியுமோ அவ்விதம் செயற்படுவதும், அதேவேளை தமிழர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நரி மூளையுடன் நசிந்து நசிந்து அறிக்கைகள் விடுவதிலும் இரண்டு கட்சிகளும் தங்களது திறமைகளைக் காட்டுகின்றன.

"இனப்பிரச்சினை இங்கில்லை; இருப்பது பயங்கரவாதப் பிரச்சினைதான். அதை இராணுவ வழி மூலமே தீர்க்க முடியும் -தீர்க்க வேண்டும்." என்று வாய்கிழியக் கத்திக் கொண்டிருந்த டி.-பி. விஜேதுங்கா, இப்போது சுருதியைச் சிறிது மாற்றி, "இது பயங்கரவாதப் பிரச்சினைதான்; ஆனால் அரசியல் வழிமூலம்தான் தீர்க்க வேண்டும்" என்று கூறி, சிங்களப் பேரினவாதத்தையும் 'தாஜா' பண்ணி தமிழரின் வாக்குகளுக்கும் 'உண்டியல்' குலுக்குகின்றார்.

"இதேவேளை இனப்பிரச்சினைக்கான தீர்வு எம்மிடம் தான் உண்டு; மிக விரைவில் அதை வெளியிடுவோம்" என்று 'குடுகுடுப்பைக்காரன்' கூறுவதுபோலச் சொல்லிக் கொண்டு தமிழர்களைத் தம் பக்கம் ஈர்க்க முனையும் சுதந்திரக் கட்சி வடக்கும் கிழக்கும் இணைந்திருக்க விடமாட்டோம் என்றும் வலியுறுத்திக் கூறி, பேரினவாதத்திற்கும் 'சலாம்' போட்டுள்ளது.

".... இவ்வளவு காலமும் எல். ரி. ரி. ஈ. தீர்த்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. ஆனால் அரசு பேச்சு வார்த்தைக்கு தயாராகக் கதவுகளைத் திறந்து வைத்திருக்கின்றது....." என்றும் டி. பி. விஜேதுங்கா இப்போது கூறிக்கொண்டு திரிகின்றார்.

அப்படியாயின், புலிகள் தரப்பிலிருந்து உலகமறிய அரசுக்கு விடுக்கப்பட்ட சமாதான சமிக்ஞைகள், ஏன் டி. பி. யின் திறந்த கதவுகளுக்குச் ஊடாக செல்லாது விட்டன! சமாதானத்தை நிலைநாட்டும் நல்லெண்ணத்துடன் யாழ்ப்பாணம் வந்து, அந்த முயற்சியில் புலிகளின் ஆதரவையும் பெற்று நம்பிக்கையுடன் கொழும்பு திரும்பிய அந்த நல்லெண்ணக் குழுக்கள், ஏன் டி. பி. திறந்து வைத்திருந்த கதவுகளுக்கு ஊடாக உட்செல்ல முடியவில்லை? சமாதானக் கதவுகளை டி. பி. விஜேதுங்கா திறந்து வைத்திருந்து விட்டுக் காத்திருக்கின்றாரா? அல்லது மூடிவிட்டுத் தூங்குகிறாரா? **என்பதல்ல** பிரச்சினை. அந்தக் கதவுகளுக்கு ஊடாகச் செல்ல அவர் எவரையுமே அனுமதிக்கவில்லை என்பதே உண்மையாகும்.

Liberation
Tigers Of
TAMIL EELAM
புலிகளின்
குரல்

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் எதையும் புலிகள் இயக்கம் முன்வைக்கவில்லை என்று, எவரும் புலிகளை குற்றம் சாட்ட முடியாது. ஆயுதப் போராட்டத்துக்கு முன்னர் தமிழர் தரப்பிலிருந்து எத்தனையோ தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன; அவற்றிற்கு என்ன நடந்தது? அதன் விளைவாகத்தான் ஆயுதப் போராட்டமும் தனிநாட்டுக் கோரிக்கையும் எழுந்தன.

இனப்பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டுமாயின், தமிழினம் சுதந்திரமாக -பாதுகாப்பாக -கௌரவமாக வாழவேண்டுமாயின், தனிநாடுதான் -தமிழீழம்தான் -ஒரே ஒரு தீர்வு என்பது புலிகளின் நிலைப்பாடு. இது உலகிற்கே தெரியும்.

தனிநாடு உருவாவதை ஏற்க முடியாது என்று சிங்கள அரசு கருதினால், மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைத்து அதைப் பரிசீலிக்கும்படி புலிகளிடம் கூறவேண்டியதும், அதற்கான பேச்சுக்களைத் தொடங்க வேண்டியதும் அரசின் கடமை.

ஆனாலும் சர்வதேச உலகம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, "சமஸ்டி அமைப்பை அரசு முன்வைத்தால் அதைப் பரிசீலனை செய்ய நாம் தயார்" எனத் தலைவர் அறிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

"17 வருட காலமாக ஆட்சி பீடத்திலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி இனப்பிரச்சினைக்குத் தீர்வாக எந்தவொரு திட்டத்தையும் முன்வைக்கவில்லை" என்று சிறிமாவோ அம்மையார் ஐக்கிய தேசியக் கட்சியைக் குற்றம் சாட்டியுள்ளார் ('சண்டே லீடர்' 19-6-94 ). இதேவேளை, 'இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் ஒன்றை இப்போது சுதந்திரக் கட்சி தயாரித்துக் கொண்டு இருப்பதாக' சந்திரிகா அம்மையார் கூறியுள்ளார் (Sunday Times 25-6-94).

தீர்வுத்திட்டம் சமர்ப்பிக்கின்றோம் என்று கூறிக் கொண்டு தமிழீழத் தேசியத்துக்குக் குந்தகமான அரைகுறைத் திட்டங்களை அறிவித்துவிட்டு அதை ஏற்றுக்கொள்ளும்படி புலிகளை வற்புறுத்துவதில் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

நாடாளுமன்றத் தீர்வுக் குழுவின் பரிந்துரைதான் ஐ. தே. கட்சியின் தீர்வுத் திட்டமாக, அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற இருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை கூறியுள்ளது.

தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்தபடி, சிங்களப் பேரினவாதத்தின் அடிவருடிகளாக இருந்து செயற்படும் தமிழ்க்குழுக்களே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் எலும்புத் துண்டை ஏற்க மறுத்துவிட்ட நிலையில், தமிழீழத் தேசியத்தின் பிரதிநிதிகளான புலிகள் இயக்கம் அதனை எப்படி ஏற்றுக்கொள்ளும்?

இனப்பிரச்சினையின் வேர்களைக் கண்டறிந்து, கள யதார்த்தங்களைக் கருத்தில் எடுத்து, வரலாற்றையும் அனுபவமாகக் கொண்டு தீர்க்கதரிசனப் பார்வையுடன் நிரந்தர சமாதானத்துக்கான திட்டங்களைத் தீட்டுவதுதான், இனப்பிரச்சினையை தீர்க்க இருக்கும் உண்மையான வழி. அதை விட்டுவிட்டு, வாக்குறுதி வேட்டைக்கான தந்திரோபாயமாகத் தீர்வுத் திட்டங்களைக் கருதினால், இனப்பிரச்சினை இன்னும் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டே போகும்; இரத்தம் சிந்தப் படுவதும் தொடர்ந்து கொண்டே இருக்கும். ■

# வெற்றிகரமான கெரில்லாக்களில் புலிகள் இயக்கமும் ஒன்று

**பி.பி.சி. செய்தியாளர் ஜோர்ச் ஆர்னி**

"தமிழீழ விடுதலைப் புலிகள், உலகிலேயே மிக வெற்றிகரமாக இயங்கும் கெரில்லாக் குழுக்களில் ஒன்றாகும். அண்மைய ஆண்டுகளில் தென்னாசிய அரங்கில் அவர்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். தற்கொடைப் போராளிகள் அணி, பெண்கள் அணி, கடற்படை அணி எனப் பல்வேறு அணிகளையும் கொண்ட இவர்களைப் பற்றி அறிய வெளிநாட்டுப் பத்திரிகையாளர் அவாவுறுகின்றனர்."

இவ்வாறு பி. பி. சி. யின் கொழும்பு முகவரான ஜோர்ச் ஆர்னி கூறியுள்ளார். அண்மையில் யாழ்ப்பாணப் பயணம் மேற்கொண்ட இவர், தனது அனுபவம் பற்றி மேலும் குறிப்பிடுகையில், "எனது பயணத்தைச் சுலபமானதாக்குவது அரசின் நோக்கமாக இருக்கவில்லை என்பதை ஆரம்பத்திலேயே தெரிந்துகொண்டேன். பலமான அதிகார வர்க்க அலைக்கழிப்பின் பின்னரே, யாழ்ப்பாணம் செல்ல முடிந்தது" என்றார்.

பலமான வாக்குவாதத்தின் பின், இந்த முறை மட்டுமே யாழ்ப்பாணப் பயணத்துக்கு அனுமதி வழங்குவதாக சிறீலங்காவின் செய்தித்துறை அதிகாரி தனக்குத் தெரிவித்ததாக மேற்படி முகவர் குறிப்பிட்டுள்ளார். ■

# புலிகளுடன் பேச்சுக்கள் நடத்த நிபந்தனை விதிக்கப் போவதில்லை

**சிறீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவிப்பு**

புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டுமென்றோ, தலைவர் பிரபாகரன் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டும் என்றோ, தாம் நிபந்தனைகளை விதிக்கப்போவதில்லை என சிறீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

தாம் ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு நடாத்தப்போவதாகவும், அதிகாரப் பரவலாக்கலை மேலும் விரிவுபடுத்தப் போவதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

மாகாணங்களுக்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்குவதன் மூலமும், மாகாண எல்லைகளை மீள வரைவதன் மூலமும் வடக்கு -கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்குரிய சூழலை உருவாக்க முடியும் எனவும் சுதந்திரக் கட்சியினர் தெரிவிக்கின்றனர். ■

# முக்கிய பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்கத் தவறிவிட்டன

**பி.பி.சி. விமர்சனம்**

**சிறீலங்காவில்** நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது, நாட்டிலுள்ள முக்கிய பிரச்சினை தொடர்பாக உண்மையான தமது நிலையை பிரதான கட்சிகள் முன்வைக்கத் தவறிவிட்டன எனப் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலண்டன் பி. பி. சி. யின் சிங்கள சேவையான 'சந்தேசிய' வானொலியினர் நடாத்திய தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்பீட்டில் கலந்துகொண்டோரில் பெரும்பாலானோர் இக்கருத்தை தெளிவாக வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் பிரச்சினை எங்கோ இருக்கும்போது, அது தொடர்பாக தெளிவானதொரு நிலைப்பாட்டையோ, அன்றி அதன் தீர்வுக்கான திட்டத்தையோ தெரிவிக்காத இக்கட்சிகள் தாம் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதில் மட்டுமே அதிக அக்கறை செலுத்தி வருவதாகவும், தமது நலனில் மட்டுமே இவர்கள் அக்கறை காட்டுவதாகவும் அக்கருத்துக் கணிப்பீட்டில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. ■

## பொ.ஐ.மு. - முஸ்லீம் காங்கிரஸ்

# கூட்டு அறிவிப்பின் பின் முஸ்லீம் வீடுகளுக்குத் தீ வைப்பு

முஸ்லீம் காங்கிரஸ் - பொது மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தல் உடன்பாடு செய்து கொண்டதாக அறிவிக்கப்பட்ட சில மணி நேரத்தில், கற்பிட்டிப் பகுதியில் அமைந்திருந்த முஸ்லீம் மக்களின் வீடுகள் தீப்பற்றிக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற இச் சம்பவத்தில், சுமார் 250க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பலாகியதாகவும், 400க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரம் பேர்வரை அகதிகளாக்கப்பட்டுள்ளனர் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வீடுகள் 90 ஏக்கர் நிலத்தில் அமைந்திருந்ததாகவும், தீயணைப்புப் படையினரோ அன்றி பொலிசாரோ இப்பகுதிகளில் தீ பற்றி எரியும்போது உதவி செய்யவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. ■

# தமிழ் இளைஞர் மீது புளொட் சித்திரவதை அதிகரிப்பு

வவுனியாவில் புளொட் தேசவிரோதிகளால் தமிழரைக் கைது செய்வதும் கடும் சித்திரவதைக்கு உட்படுத்துவதும் அதிகரித்து வருகின்றன. தற்போது புளொட் குழுவினருடைய சிறையில் நூற்றுக்கணக்கானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணம் செய்த இளைஞர் ஒருவர், புளொட் குழுவினரால் கைதுசெய்யப்பட்டு, ஏழு மாதம் அவர்களின் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டார்.

அந்த இளைஞரை நிர்வாணமாக்கி, அவரின் பின்பகுதியில் சூடாக்கிய ரொட்டிக்கல்லு வைத்து தேய்க்கப்பட்டது.

இதேபோன்ற மேலும் பல கொடுமைகள் இடம்பெற்றுவருவதாகவும் வவுனியாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையில் நிலவும் அனைத்து பிரச்சினைகளுக்கும் ஐ.தே.கவே காரணம்

## சிறிமாவோ பண்டாரநாயக்கா பேட்டி

"வடக்கு கிழக்கு இனப்பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை. நாம் ஆட்சிக்கு வந்ததும் தமிழ்த் தலைவர்களுடன் பேசுவோம். முன்னாள் சனாதிபதி பிரேமதாசா போலல்லாது நாம் பகிரங்கமாகப் பேசுவோம். எமது நாடு ஒரே நாடாக இருக்க வேண்டும். இளைஞர்களினதும், விவசாயிகளினதும் பிரச்சினையை நாம் இலகுவில் தீர்ப்போம். அவர்கள் படித்தவர்கள், புத்திசாலிகள். அவர்களுக்குத் தனிநாடு தேவையில்லை. சுதந்திர மக்களாக வாழும் உரிமையே அவர்களுக்குத் தேவை. வடக்கிலும் பெரும்பாலானவர்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றியவர்கள். இப்போதைய பிரச்சினைக்கு ஐ. தே. க. வே காரணம்"

இவ்வாறு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நந்தசேனா சூரியாரச்சி எனும் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

**கேள்வி:** எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நீங்கள் நியமிக்கப்பட்டதற்கு உங்கள் கட்சிக்குள்ளேயே எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதுபற்றி என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:** எனது கணவரின் மறைவைத் தொடர்ந்து நான் கட்சிக்குத் தலைவியானேன். மக்கள் விருப்பப்படியே எனது பொறுப்புக்களை ஏற்றேன். இப்போது எனக்கெதிராகக் கட்சியில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாக வெளியாகும் செய்திகள் முழுப் பொய். எமக்குள் குழப்பம் என்று காட்டச் சில பத்திரிகைகள் முயல்கின்றன. அவை தேசியப் பத்திரிகைகள் அல்ல. அவை அமெரிக்க சி. ஐ. ஏ. யின் பணத்தில் இயங்குபவை. எந்த விளம்பரங்களும் இல்லாத பத்திரிகைகள் அவை. எனக்கும் என் மகளுக்கும் இடையில் பிளவு என்றனர். எனக்கு வயதாகிவிட்டதெனவும், சந்திரிகாவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கும் படியும் கூறுகின்றனர். அவர்கள் எனது அல்லது சந்திரிகாவின் தலைமையை விரும்பவில்லை. ஆனால் அவர்கள் வழமைபோல் விரும்புவது, சர்வாதிகார ஐ. தே. க. வைத்தான்.

**கேள்வி:** ஐ. தே. க. மீள ஆட்சிக்கு வரமாட்டாது என நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** 1977 முதல் ஐ. தே. க. ஆட்சி செலுத்துகிறது. இக்காலப் பகுதியில் மூன்று ஜனாதிபதிகள் பதவி வகித்துள்ளனர். இவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஜே. வி. பி. தலைவர்களை விடுதலை செய்தமை நாட்டுக்குப் பேரழிவைத் தந்தது. மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு எனது குடியுரிமை பறிக்கப்பட்டது. யாழ்ப்பாண மக்களின் நூலகம் மாவட்டசபைத் தேர்தலின்போது குண்டர்களை வைத்துக் கொளுத்தப்பட்டது.

**கேள்வி:** வீதியில் அலையும் குண்டர்களுக்கு நூலகம் பெரிய தோர் விடயமல்ல. எழுச்சிக்கு வேறு ஏதும் காரணங்கள் உண்டா?

**பதில்:** நூலகம் ஒரு தேசிய சொத்து. யாழ்ப்பாண இளைஞர்க்ள் படிப்பறிவுள்ளவர்கள். நாட்டின் உயர் பதவிகளில் அவர்கள் உள்ளனர். அவர்கள் இனவாதிகளல்ல. தமது பிள்ளைகளின் கல்விக்காலாக இருந்த நூலகம் எரிக்கப்பட்டது தமிழ் முத்தோர்களின் கோபத்தைக் கிளறியது.

1977 இல் ஐ. தே. க. அறிமுகப் படுத்திய திறந்த பொருளாதாரம் பல விவசாயிகளைத் தாக்கியது. யாழ்ப்பாணம் உலர் வலயப் பிரதேசம். யாழ் விவசாயிகள் கடின உழைப்பாளிகள். அதிகாலையில் எழுந்து தினமும் தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்துவிடுவர். ஆழ் கிணறுகளில் இருந்து நீரைப் பெற்று விவசாயம் மேற்கொள்பவர்கள். உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் போன்றவை மட்டுமல்ல, குளிர்வலயச் செய்கைகளான திராட்சை, கோவா, பீற்றூட், கிழங்கு போன்ற உலர் வலயத்தில் செய்கை பண்ண முடியாத பயிர்களையும் அவர்கள் பயிரிட்டனர். திறந்த பொருளாதாரம் இவர்களின் பொருளாதாரத்தைப் பாதித்தது. கல்வி, பொருளாதாரப் பாதிப்பு கிளர்ச்சியை யாழ் குடாநாட்டினுள் ஏற்படுத்தியது.

**கேள்வி:** வடக்கு பிரச்சினைக்கு இது தவிர வேறு ஏதும் காரணங்கள் உண்டா?

**பதில்:** நிச்சயமாக தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டன. இதனால் அவர்கள் கிளர்ந்தெழுந்தனர். வடக்கில் இன்றைய நிலைமைக்கு ஐ. தே. க. வே காரணம்.

**கேள்வி:** நீங்கள் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவாகிய பின்னர் உங்களுக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் ஓர் இணக்க நிலை கண்டுள்ளீர்களா? நீங்கள் ஆட்சிக்கு வந்ததும் சந்திரிகாவிடம் பதவியை ஒப்படைத்து விட்டு அரசியலில் இருந்து ஓய்வு பெறுவீர்களா?

**பதில்:** இக்கேள்விக்கு முன்னமே பதிலளித்துவிட்டேன் என எண்ணுகிறேன். சந்திரிகா எனது மகள் என்பது உண்மை. அவருக்குப் பாரியளவு மக்களாதரவும் உண்டு என்பதும்



"நிச்சயமாகத் தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டன."

உண்மை. எனக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் முறுகலை ஏற்படுத்தி ஐ. தே. க. அதன் மூலம் லாபம் ஈட்ட, சில நடவடிக்கைகளில் சிலர் இறங்கியுள்ளனர். ஒருசில சந்தர்ப்பங்களில் இந்தப் பத்திரிகைக்காரர்கள் என்னைச் சந்தித்து பல மணி நேரம் பேட்டி கண்டிருக்கின்றனர். நான் வெளிப்படையாகச் சொன்னவற்றை அவர்கள் தவறாக விளங்கியிருந்திருக்கலாம். பின்னர் சந்திரிகாவுக்காக அவர்கள் பிரச்சாரம் செய்தனர். 30 வருடமாக அரசியலில் இருக்கும் ஒருவருக்கு மக்களை நன்கு புரிந்துகொள்ள முடியும். ஐந்து வருடங்கள் பத்திரிகையாளராக இருக்கும் ஒருவரைவிட சந்திரிகாவுக்கு அதிகம் தெரியும். ஏனெனில் அவர் கற்றவர். அனுபவசாலி. அவர் அரசியல் வாதிகளுடன் பழகியவர் என்பதால் பத்திரிகையாளர்கள் எனக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் பிளவைத் தோற்றுவிக்க முயற்சி செய்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வார்.

**கேள்வி:** கடந்த 17 வருட காலத்தில் நாட்டின் சமூக ஒழுக்கப்பாடுகள் குறித்து பல கருத்துக்கள் கூறப்பட்டன. இது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** பத்திரிகைகள் படித்தால் நாட்டின் நிலை தெரியும். பெற்றோர்களை மதிக்கவோ பராமரிக்கவோ மறுக்கும் பிள்ளைகள் உள்ள சகாப்தம் இது. குடும்ப ஒழுக்கச் சீர்கேடுகள் நிறைந்துள்ளன. தரம் குறைந்த ஏடுகள் நடைபாதையில் போட்டு விற்கப் படுகின்றன. நாடு முழுவதிலும் கொலைக் குழுக்கள் இயங்குகின்றன. பாதாள உலகக் குற்றவாளிகள் மீதான விசாரணைகள் இப்போது நின்றுவிட்டன.

போதிபூஜைகள் என்ற பெயரில் நிறுவனங்கள் பணம் பறிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன. பௌத்த சாசனத்தை அழிக்க வென இந்த தாழ்ந்த மட்டத்திற்கு எமது ஆட்சியாளர்கள் சென்று விட்டார்கள். உயர்மட்டத்தில் உயர்மனநிலை இல்லாத போது, ஏனையவர்களிடம் இதை எப்படி எதிர்பார்க்க முடியும்? ■

# சிறீலங்காவின் ஜனநாயக அரசியலில் தமிழ் மக்களின் அனுபவங்கள்

**இளையவன்**

மக்களை மக்களால் மக்களே ஆளும் ஆட்சி அமைப்புத்தான் ஜனநாயகம் என்று அரசியல் கோட்பாடுகளில் வரையறை செய்வது தெரிந்ததே. ஆனால், சிறீலங்காவின் ஜனநாயக அரசியல் அரங்கில் தமிழ் மக்களின் அனுபவங்கள் வித்தியாசமானவை மட்டுமல்ல விசித்திரமானவையுமாகும். எண்ணிக்கையில் பெரும்பான்மை என்ற பலத்தைக் காட்டி ஒரு தேசிய இனத்தின் தனித்துவத்தைச் சிதைக்கும் முயற்சிகளுக்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்குவதே சிறீலங்கா பாராளுமன்ற ஜனநாயக அரசியலில் தமிழ் மக்களின் அனுபவம் என்பது மிகவும் வெளிப்படையானது.

சிறீலங்காவின் ஒன்பதாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, பத்தாவது பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டு விட வேண்டும் என்ற ஆவலில் பலரும் அலையும் இத்தருணத்தில், தமிழ் மக்களின் இந்த அனுபவங்களை மீட்டுப் பார்ப்பது பொருத்தமானதாக இருக்கலாம். சிறீலங்காவின் ஒற்றையாட்சி, இறைமை, தேசிய ஒருமைப்பாடு என்ற சொற்பதங்கள் யாவும் தமிழ் மக்களை அடிமைகளாகவும், இரண்டாம் தரப்பிரஜைகளாகவும் கருதும் தன்மையையே அடிப்படையாகக் கொண்டவை என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல.

### முதல் அனுபவம்

பிரித்தானியர் விட்டுச் சென்ற பின்னர் கூடிய முதலாவது பாராளுமன்றமே, பத்து இலட்சத்துக்கும் அதிகமான மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமைகளைப் பறித்தது என்பது இலகுவில் மறந்து விடக்கூடியதல்ல. தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை மறுத்த அதே சிறீலங்காப் பாராளுமன்றத்தில் இதன்மூலம் சிங்கள மக்கள் தமது விகிதாசாரத்திற்கு அதிகமான பிரதிநிதிகள் இடம்பெறவும் வழியேற்பட்டது. பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்களை, அரசியல் அநாதைகளை இந்தச் செயல் ஜனநாயக முலாம் பூசி மறைக்கப்பட்டதும், கனவான் தனமாக அரசியல் பேசிய வித்தகர்கள் கைகளைப் பிசைந்துகொண்டு வெளியேற வேண்டி ஏற்பட்டதும் நினைவுகளை விட்டு இலகுவில் துடைத்து விடக் கூடியதல்ல.

### உணர்ச்சிகளைக் கிளறும் களமாகவே

உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு பெரும்பான்மை வாக்குகளைக் குவிப்பதன் மூலம், பாராளுமன்றத்தில்பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று அதிகார பீடம் ஏறிக் கொள்வதற்காக சிறீலங்காவின் ஜனநாயக அரசியல்வாதிகள் பலரும் இனவாதத்தையே தமது ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

பௌத்த சிங்கள பேரினவாதத்தைக் கக்குவதன்மூலம் தமிழர்களை எதிரிகளாகக் காட்டுவதும், தமிழ் மக்களின் சொத்துடைமை, நிலம் என்பவற்றை கபளீகரம் செய்வதுமே பேரினவாதிகளின் இனவெறி இலக்காக இருந்துள்ளது. இதன் ஒரு கட்டம் 1956 தேர்தலின்போது அப்பட்டமாக அம்பலமாகியது. 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்படும் என்ற உறுதி மொழியுடன் விதைக்கப்பட்ட இனவாத வித்து 1958 இல் இனவெறியாகி தமிழ் மக்களைக் குறிவைத்து படுகொலை செய்தது வரலாற்றின் பக்கங்களில் பசுமையாகவே இருக்கிறது.

இவைகள்தான் கடந்தகால சம்பவங்கள் என்று விட்டாலும், அண்மைக்கால அனுபவங்கள் கூட ஒன்றும் விருப்புக்குரியதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. எழுபதுகளில் சுதந்திரக் கட்சி தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி கொண்டு வந்த புதிய அரசியலமைப்புத் திட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைக் காட்டுவதற்காக, எஸ். ஜே. வி. - செல்வநாயகம் தமது பதவியைத் துறந்தபோது சுமார் நான்கு



"போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்"

ஆண்டுகள் வரை காங்கேசன் துறைத் தொகுதிக்கான இடைத் தேர்தல் நடத்தப்படவில்லை. ஆனால் 1975 இல் அப்போதைய பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் நீடிப்பதற்கு எதிராகக் கொழும்பு தெற்குத் தொகுதியின் பாராளு

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காய் வேம்பிராயில் புலிகளின் எழுச்சிப்பாசறை

**நா**னூறு ஆண்டுகளாக அடக்குமுறைக்கு உள்ளாகி வாழ்ந்து வந்த ஓர் சமூகம் இன்று விழிப்படையத் தொடங்கிவிட்டது.

**அடக்கி ஆளப்படும் இனம், தான் அடக்கப்படுவதை உணர்ந்து, அந்த அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடத் தொடங்குமானால், அந்த தாகத்தை எவருமே தடுத்து நிறுத்திவிடமுடியாது என்பதுபோல், கொத்தடிமைகளாக கை கட்டி, வாய்பொத்தி சேவகம் செய்துவந்த ஓர் சமூகமே இன்று விழித்துக்கொண்டது.**

### சமூக அடக்குமுறை

இச்சமூகத்தினர் செருப்பு அணிவதும், ஆண்கள் சேட் அணிவதும், பெண்கள் மேற்சட்டை அணியவும், கிணறுகளில் நீர் அள்ளவும், ஏன் கோவிலுக்கு சென்று வழிபடக்கூட இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இவற்றுக்கெல்லாம் மேலாக பாடசாலைகளுக்குச் சென்று கல்விகற்கக்கூட இந்தச் சமூகத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. சேவகம் செய்யும் போது விடும் ஒரு சிறு தவறுக்காக இவர்கள் மரத்துடன் கட்டிவைக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர். இவர்கள் தமக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு பெயர் வைப்பதற்குக்கூட மற்றவர்களையே நம்பியிருந்த அவலநிலை.

இவை ஐம்பதுகளில் யாழ். குடாநாட்டில் நடைபெற்றவையல்ல; எழுபதுகளின் ஆரம்பம் வரை யாழ். குடாநாட்டின் ஒரு மூலையில் நிகழ்ந்துகொண்டிருந்த கொடுமைகள்.

'வேம்பிராய்' என அழைக்கப்படும் அந்தக் கிராமம் சுன்னாகம் -புத்தூர் வீதியில் புத்தூர் சந்தியிலிருந்து முந்நூறுயார் தொலைவில் தெற்குப்புறமாக அமைந்துள்ளது. புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி மேற்கு கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ள இந்தக் கிராமம்தான் இவ்வாறு அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தது.

பிரதான வீதியையும் இந்தக் கிராமத்தையும் இணைத்து நிற்கிறது நீகன் வீதி. கரடு, முரடான கற்பாறைகள் நிறைந்த, நெளிந்து, வளைந்து, நிமிர்ந்து செல்கிறது அந்த வீதி. இடதுபுறம் ஆளுயரக் குடிசைகளும், வலதுபுறம் சிறு பற்றைக்காணிகளாகவும் காணப்படும் பகுதியூடாகச் செல்லும் அந்த வீதியால் சென்றால், அழகிய சிறுவர்கள் அழுக்குப்படிந்த உடைகளுடன் ஆரவாரமாய்க் காட்சிதந்தார்கள். மேலாடை கீழாடையெல்லாம் ஓராடையாக சாரத்தைத் தோள்வரை போர்த்தியவண்ணம் உலாவரும் சிறுவர்களும் நீலநிறக் காற்சட்டை அவ்வூர் செம்மண்கலராய் தோற்றமளிக்க, நிலத்தில் உருண்டு, பிரண்டு விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர்களையே காணமுடிந்தது.

நிலவுடைமையற்ற கூலி உழைப்பாளர்களான மக்களைக் கொண்ட, மிகவும் பின்தங்கிய இக்கிராமம், சமுதாயத்தின் சகலதுறைகளாலும் புறக்கணிக்கப்பட்டு, சாதி அடக்குமுறையின் கொடூரத்தால் அமுக்கப்பட்டு, நாகரிக மனிதர் என்று தம்மைத்தாமே பாவனைசெய்யும் சிலரின் முகச்சுழிப்பைப் பெற்றுக்கொண்ட இக்கிராமத்திற்கு வேம்பிராய் என்றபெயர் எவ்வாறு வந்ததென்றே எவருக்கும் தெரியாதிருந்தது. ஆங்காங்கே காணப்பட்ட ஓலைக்குடிசைக்குள் இவர்கள் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். இவர்களது வீடுகளைச் சூழ வேலிகள் அடைப்பதற்குக்கூட தடைபோடப்பட்டிருந்தது.

### புதிய திருப்புமுனை

**1972 வரை இவ்வாறே வாழ்ந்துவந்த இந்த இனம் விழிப்படையத் தொடங்கியது. இளைஞர்களது விழிப்பால் அந்தக் கிராமத்தில் புதிய தொரு திருப்புமுனை தோன்றியது. சிந்திக்கத் தொடங்கினார்கள். அடக்கு முறையாளர்களுக்காகச் சிந்திய தமது வியர்வையின் ஒரு பகுதியை தமது கிராமத்தின் வளர்ச்சிக்காகவும் சிந்தத் தொடங்கினர்.**

**அடிமைத்தனத்திலிருந்து விடுபடவேண்டுமானால், சமூக ஒற்றுமை தேவை என்பதை வலியுறுத்தினார் அவ்வூர் பெரியவர் ஒருவர். அதன்படி இளைஞர்களை ஒன்றிணைத்து செயற்படத் தொடங்கியவர். பின் முழுச்சமூகத்தையும் இணைத்துக்கொண்டார்.**

சனசமூக நிலையத்தின் தலைவராகக் கடந்த பதினைந்து வருடகாலமாக இருந்துவரும் செல்வம் என்பவரைச் சந்தித்த போது, "நான்கு பிரிவுகளாக செயற்பட்டுவந்த இந்தக் கிராம மக்களிடம் ஒற்றுமையின் அவசியத்தை விளக்கி, அனைவரையும் இணைத்ததாக நிர்வாக சபையினைத் தெரிவுசெய்தோம். பின், சமுதாய வளர்ச்சிகருதி, சினிமாப்படம் முதல், கசிப்பு ஒழிப்பு, கோவிலில் பலிகொடுத்தல் ஒழிப்பு போன்றனவற்றில் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதித்ததுடன், குடும்பப் பிணக்குகள், வழக்குகள், கொடுக்கல் வாங்கல் பிணக்குகள், களவுகள் போன்றவற்றைத் தீர்த்தோம்.

கிராமவளர்ச்சி, தனிநபர் வளர்ச்சியின் விழிப்புணர்வுடன் எமக்கு ஓர் வீதி தேவை என்பதை உணர்ந்தோம். நிலவுடமையாளர், கிராமசேவையாளர், உதவி அரச அதிபர் ஆகியோருடன் தொடர்புகொண்டு வைத்தியசாலைக்கு ஒரு நோயாளியையோ அன்றி, நிறைமாதக் கர்ப்பிணியையோ கூட்டிச்செல்ல வாகனம்வர பாதை அமைத்துத் தரும்படி, பலதடவை கோரியும் பலனளிக்காததால், பலவந்தமாக ஒரு இரவும் ஒரு பகலும் ஊரார் அனைவரும் பால் வேறுபாடின்றி சேர்ந்து இவ்வீதியை அமைத்துக்கொண்டோம்" என்றார்.

புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி மேற்கு பகுதிகளை உள்ளடக்கியுள்ள இக்கிராமத்தில் வாழும் மக்கள் மீன் வியாபாரம், கூலித் தொழில், சீவல் தொழில்களையே செய்துவருகின்றனர்.

இக்கிராமத்தின் வளர்ச்சிக்கு ஜனசக்தி சனசமூக நிலையம், கலைமதி சனசமூக நிலையம், மாதர் சங்கம், நூல் நிலையம், விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை என்பன அயராது உழைத்து வருகின்றன. இவற்றின் தோற்றத்தைத் தொடர்ந்து, கொத்தடிமை நிலையிலிருந்து விடுபட்டு, இக்கிராமம் விடிவு பெறத்தொடங்கியது.

### புத்தூர் மேற்கு

புத்தூர் மேற்கில் 379 குடும்பங்களைச் சேர்ந்த, 1706 பேர் வாழ்கின்றனர். இவர்களில் 846 ஆண்களும் 860 பெண்களுமுள்ளனர். இவர்களில் 463 பேர் கல்வி அறிவு அற்றவர்களாகவேயுள்ளனர். கல்வி அறிவுடையவர்களில் இருவர் சாதாரண தரமும் ஒருவர் மட்டுமே உயர்தர வகுப்பு வரை கற்றவர்களாகவுள்ளனர். மொழியறிவில் தமிழ் எழுதத்தெரிந்தவர்களாக 293 பேர் காணப்படுவதுடன், ஆங்கிலம் பேசத் தெரிந்தவர் ஒருவரும் உள்ளார். இங்கு 50 வீதத்திற்கு மேற்பட்டோர் தொழில் புரியக்கூடியவர்களாகவுள்ள போதிலும் 28 வீதமானவர்களே தொழில்புரிகின்றனர். ஏனையோர் தங்கிவாழ்பவர்களாகவேயுள்ளனர். இவர்கள் பொதுக்கூலி, கமம், மீன்வியாபாரம், சீவல், விறகு வியாபாரம், சிகை அலங்காரம், சில்லறைக் கடை வியாபாரம், பன்னவேலை, தச்சுவேலை, சைக்கிள் கடை, தையல் வேலை, கொல்லவேலை ஆகியவற்றை தொழிலாகக் கொண்டுள்ளனர். ஒருவர் கூட்டுறவு முகாமையாளராகவும், இருவர் கல்விவளர்ச்சிக் கழகத் தொண்டர் ஆசிரியர்ளாகவும் உள்ளனர்.

### சிறுப்பிட்டி மேற்கு

சிறுப்பிட்டி மேற்கில் 215 குடும்பங்களைச் சேர்ந்த, 403 ஆண்களும், 380 பெண்களும் வாழ்ந்துவருகின்றனர். இவர்களில் 113 பேர் கல்வி அறிவு அற்றவர்களாகவுள்ளனர். ஏனைய கல்வியறிவுடையவர்களில், சாதாரண

**சசிகரன்**

மற்றும் உயர்தரம் வரை ஒவ்வொருவரும், கலைமுதற் தேர்வுவரை இருவரும் கல்விகற்றுள்ளனர். தமிழ் எழுதத்தெரிந்தவர்களாக 214 பேர் உள்ளனர். இங்கும் ஐம்பது வீதத்திற்கும் அதிகமானோர் தொழில்புரியக்கூடியவர்களாக உள்ளபோதிலும், முப்பது வீதமானவர்களே தொழில்புரிபவர்களாகவும், ஏனையோர் இவர்களில் தங்கி வாழ்பவர்களாகவுமே உள்ளனர். இவர்களில் 66 வீதமானோர் கூலித்தொழிலாளர்களாகவும் 18 வீதமானோர் விவசாயம் செய்பவர்களாகவும் இரண்டு வீதமானோர் சீவல் தொழிலாளர்களாகவும் உள்ளனர். இவர்களுடன் எழுதுவினைஞர் ஒருவரும், மருந்து விற்பனையாளர் இருவரும், தொண்டர் ஆசிரியர்களாக மூவரும் பணிபுரிகின்றனர்.

### தோள்கொடுக்க முன்வந்த, தமிழீழ விடுதலைப் புலிகள்

**இவ்வாறான பின்தங்கியநிலையில் இருந்து முற்றுமுழுதாக விடுபட்டு, சொந்தக்காலில் தமது பலத்தில் எழுந்து நிற்கமுடியாது தவித்துக்கொண்டிருந்த இம்மக்களின் வாழ்வை வளம்பெறச்செய்ய, தமிழீழ விடுதலைப் புலிகள் தோள்கொடுக்க முன்வந்தனர்.**

புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி மேற்கு கிராமசேவகர் பிரிவுகளை இணைத்த கிராமியப் பாசறை ஒன்றை நடாத்தி, சமூகத்தினரை முற்றாக இணைத்துக்கொண்டனர். ஐந்து நாட்களாக அங்கு தங்கியிருந்த, யாழ். மாவட்ட அரசியல் துறையினர், அவ்வூர் மக்களின் உதவியுடன் பல அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக மேற்கொண்டுவந்தனர்.

நடந்து செல்லவே முடியாதளவிற்கு கிடங்குகளாகவும், கற்பாறைகளாகவும்; நெளிந்து, வளைந்து, நிமிர்ந்து இக்கிராமத்தை ஊடறுத்துச் சென்றுகொண்டிருந்த நீகன் வீதி துரிதமாக செப்பனிடப்பட்டு, மிக அழகான, அகலமான வீதியாக மாற்றப்பட்டுள்ளது. 75 இற்கும் மேற்பட்ட குடிசைகள் புதிதாக அமைக்கப்படுகின்றன. இவை குடியிருக்க வீடு இல்லாதவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. மேலும் கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, ஐம்பதிற்கு மேற்பட்டோருக்கு தொழில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அங்குள்ளவர்களுக்கு நெசவு, தையல் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

மேலும் விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினர் வீடுவீடாகச் சென்று அவர்களை பரிசோதித்து, சிகிச்சை அளிப்பதுடன், சுகாதார வசதிகளையும் ஏற்படுத்திவருகின்றனர். கிணறுகளுக்கு குளோரினிடல், மருத்துவ சுகாதாரக் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் ஆகியவற்றை மேற்கொண்டுவருகின்றனர்.

### தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர்:

வீதியோரங்களில் மரக்கன்றுகளை நாட்டிப் பராமரித்தல்; கமக்காரர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குதல்; விவசாயப் பயிற்சி வகுப்புக்களை நடாத்துதல்; 'கிராமியவாழ்வு', உழைப்பும் சேமிப்பும் என்பன பற்றிய விரிவுரைகளை மக்களுக்கு வழங்குதல்; கால்நடைகளுக்கு தடுப்பூசிபோடுதல்; செயற்கைமுறைச் சினைப்படுத்தல் போன்ற வேலைத்திட்டங்களை மேற்கொள்வதுடன்; அடைமுட்டைகளையும், கோழிக் குஞ்சுகளையும் வழங்கி, கால்நடை வளர்ப்புப் பற்றிய விளக்கங்களையும், சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்களையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டுவருவதுடன், தமது உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியையும் விற்பனை நிலையத்தையும் அமைத்துள்ளது.

### மகளிர் அமைப்பினர்:

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினர், வலிகாமம் துணைப்பொறுப்பாளர் செல்வி கோமதி தலைமையில் வீடுவீடாகச் சென்று, அனைத்துக் குடியிருப்பாளர்களையும் சந்தித்து, ஒவ்வொரு குடும்பங்களிலும் உள்ள பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றைக்களையும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

**இதுபற்றி செல்வி கோமதி கருத்துத் தெரிவிக்கையில், "இங்குள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் கூலித்தொழிலையே பிரதானமாகக் கொண்டுள்ளனர். வேறு, வேறு அயல் கிராமங்களுக்குச் சென்று, இவர்கள் கூலிவேலையில் ஈடுபடுகின்றனர். நாளாந்தம் 40 முதல் 50 ரூபாவரையுமே கூலியாகப் பெறுகின்றனர். இவர்களுக்கான தையல் பயிற்சி, நெசவுப் பயிற்சி போன்றவற்றை வழங்குவதினூடாக, சுயதொழிலை மேற்கொள்ள முயற்சிக்கிறோம். ஆயினும், பயிற்சியின்போதும் சம்பளம் வழங்கவேண்டியுள்ளது. இல்லையேல் இவர்கள் கூலிவேலைக்கு சென்றுவிடுவார்கள். தினமும் இருவேளையே உணவு உண்கின்றனர். காலையில் பாணும், இரவில் சோறுமே இவர்களது உணவாகிறது. இதனால் போசாக்குக் குறைந்தவர்களாகவே உள்ளனர். திருமணப் பிரச்சினைகளோ, சீதனப் பிரச்சினைகளோ பெரிதாக இருப்பதாகத் தெரியவில்லை. இவர்களது பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணமுடியாதிருப்பதால், தொடர்ந்து இங்கு வேலைத்திட்டங்களை மேற்கொள்ள எண்ணியுள்ளோம்" என்றார்.**

இவர்கள் விதவைகளுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்களையும் மேற்கொள்ளவிருப்பதுடன், 'விடிவெள்ளி', 'உதயதாரகை', 'சகாயசீலம்' உற்பத்திப்பொருள் கண்காட்சி விற்பனை நிலையத்தையும் நிறுவியுள்ளனர்.

மகளிர் அமைப்பின் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் இவ்வூர் மக்களையும் போராளிகளையும் இணைத்து நாடகங்களை மேடையேற்றிவருகின்றனர். இவற்றுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டவர் கருத்துத் தெரிவிக்கையில், "இங்குள்ளவர்கள் கலையார்வம்மிக்கவர்களாக உள்ளனர். எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர். அபிநய நடனம், கிராமிய நடனம் ஆகியவற்றில் ஈடுபாடுள்ளவர்கள். இவர்களுக்கு நாடகப் பயிற்சி அளித்து, இன்று மேடையேற்றவுள்ளோம் - மேடைகளில் நடாத்த இதுவரை இவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காதுபோனது துரதிஸ்டமே. இனிமேல் கலை, பண்பாட்டு ரீதியில் இவர்களை வெளிஉலகத்துடன் இணைத்து நாடகங்களை நடாத்தவுள்ளோம். இவர்களுக்கான பக்கவாத்தியங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளோம். இதன்மூலம் இவர்கள் கலைத்துறையில் ஆர்வம் காட்டுவர் என்றார்.

### விளையாட்டுக் குழுவினர்:

விளையாட்டுக் குழுவினர் வலைப்பந்தாட்டம், தாச்சிப் போட்டி, புதிய முறையில் செட்டப் கரப்பந்தாட்டம் ஆகியவற்றில் இவர்களை ஈடுபடுத்தி, வெளிக்கழகங்களுடன் போட்டிகளை நடாத்திவருகின்றனர். இதன்மூலம் இவர்கள் விளையாட்டுத் துறையில் இன்றுமிகுந்த ஆர்வம் காட்டிவருவதை அவதானிக்க முடிந்தது. இங்கு சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வயது, பால் வேறுபாடின்றி தமது கவலைகளை எல்லாம் மறந்து சங்கீதக் கதிரை விளையாடி மகிழ்ந்தது, மகிழ்வைத் தருகிறது.

### மாணவ அமைப்பினர்:

மாணவர் அமைப்பினர் முதியோர் கல்வித்திட்டத்தை ஆரம்பித்து, அங்குள்ள ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் நடாத்தி

**தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...**

www.tamilarangam.net



# அமைதிக்கு அப்பாலும் ஆழம் பார்க்கும் அமெரிக்க சிந்தனை

சென்ற ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரத்தில், சி. என். என் (CNN), ரைம் நிறுவனங்கள் கூட்டாக மேற்கொண்ட கருத்துக் கணிப்பொன்றின் முடிவுகள் பின்வருமாறு அமைந்திருந்தன. அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கை எவ்வாறு அமைய வேண்டும் என்கிற வினாவுக்கு 66 சதவீத விழுக்காட்டினர், சருவதேச அரசியலில் ஈடுபாட்டைக் குறைத்து அமெரிக்க உள் விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றனர். 29 சதவீத விழுக்காட்டினர் மட்டுமே, அமெரிக்கா தனது தலைமைத்துவ செயற்பாட்டின் மூலம் சருவதேச பிணக்குகளைத் தீர்த்து சனநாயகத்தை ஊக்குவிக்கவேண்டும் என விரும்பினர். அதேநேரம் அமெரிக்கா சருவதேச விவகாரங்களில் தனது செல்வாக்கை இழந்துவிட்டதா என்கிற வினாவுக்கு 58 விழுக்காட்டினர் 'ஆம்' என்று பதிலளித்தனர். 51 விழுக்காட்டினரோ சனாதிபதி கிளின்டன் உறுதியற்ற ஒரு வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகக் கூறினர். பொதுவாகப் பார்க்குமிடத்து சருவதேச விவகாரங்களில் தாம் முதலிடம் வகிக்க விரும்பும் அதேசமயம், தமது உள்நாட்டு நிலைமை பற்றி சுயகவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும், விரும்பும் இப்போக்கு இன்னோர் குழப்பகரமானதான கொள்கையைக் கடைப் பிடிப்பதாக இன்று சருவதேச ரீதியிலும் உள்நாட்டிலும் கிளின்டன் மீது குற்றம் சாட்டப்படுவதிலிருந்து பிரதிபலிப்பதை உய்த்துணர முடிகிறது.

## குற்றம் காணப்படும் கிளின்டனின் ஆட்சி

இன்று கிளின்டனின் வெளிநாட்டுக் கொள்கை, அமெரிக்கர் புகழுக்கு அதன் மேலாண்மைக்கு களங்கம் விளைவிப்பதாகப் பரவலாகக் குற்றம் சாட்டப்படுகிறது. அதுவும் அண்மையில் முன்னாள் சனாதிபதி நிக்சனின் மறைவின் பின் அவரோடு ஒப்பிட்டு கிளின்டன் தாக்கப்படுகிறார். பனிப்போரின் பின்னர், ஒற்றை முனை மேலாதிக்க சக்தியாக பாலைவனப் புயலின் பின்னர், வெற்றிமுகம் நோக்கிய வல்லரசாகக் கருதப்பட்ட அமெரிக்கா, கிளின்டனின் 18 மாத ஆட்சியில் எல்லாவற்றையும் இழக்கும் அபாயம் தோன்றுவதாக அமெரிக்க தரப்பில் இப்போது சங்கு ஊதப்படுகிறது. வெளிநாட்டுத் தலைவர்களின் பேச்சுவார்த்தைகளின் போது தொகுக்கப்பட்ட புலனாய்வு அறிக்கைகள், அமெரிக்க நட்பு நாடுகள் அமெரிக்கக் கொள்கையை ஒழுங்கற்ற வெறும் விந்தையாக நம்பகமற்றதாகக் கருதுவதாகத் தெரிவிக்கின்றன. பத்திரிகையாளர் வினாக்களைத் திசை திருப்ப வீண் வீராப்பு வார்த்தைப் பிரயோகங்களை அவ்வப்போது கிளின்டன் மேற்கொள்வதாக, பின் செயலில் என்று வரும்போது பின்வாங்குவதாக அமெரிக்காவின் நெருங்கிய நாடுகளான யப்பான், யேர்மனி, பிரித்தானியா போன்றவையே குறைப்படுகின்றன.

அண்மையில் அமெரிக்க அரசியல் ஆய்வாளர் ஒருவர், "நீங்கள் சுடப்போவதில்லை என்றால் வீணாக துப்பாக்கியை நீட்டி குறிபார்க்க வேண்டாம்" என கிளின்டனின் போக்குக் குறித்து தனது ஆலோசனையை வழங்கினார் எனப்படுகிறது. பொசுனியா, சோமாலியா, கெயிற்றி, வடகொரியா, சீனா, ஈராக் (இப்போது றுவண்டாவும் இப்பட்டியலில் சேர்க்கப்படலாம்) என கிளின்டனின் தோல்விப் பட்டியல் நீள்கிறது. அதிலும் குறிப்பாக, சோமாலியாவில் தமது இலக்குகளை நிறைவேற்ற முடியாமல் அமெரிக்கப் படைகள் திரும்பியபின், கெயிற்றித் தீவிலுள்ள இராணுவ சர்வாதிகாரிகள், பொசுனிய சேர்பியர்கள், வடகொரிய ஆட்சியாளர் எல்லோருமே அமெரிக்க மிரட்டல்களைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை என முறைப்பாடு கூறப்படுகிறது. எனவே அமெரிக்கத் தரப்பால் உயரிய விழுமியமாக இப்போது உலகின் முன் வைக்கப்பட்டுள்ள புதிய ஒழுங்கின் அடிப்படைகளான, எல்லா நாடுகளும் தடையற்ற வணிக முறைமைகளை -எல்லா நாடுகளும் சனநாயக அரசியல் முறைமைகளை மேற்கொள்ளுகின்ற -சமூக நீதியும் மனித உரிமைகளையும் பேணப்படும் ஒருபுதிய சுதந்திர உலகை உருவாக்குவதில், அப்பணியைத் தலைமை தாங்குவதில் கிளின்டன் தவறிவிட்டார் என்பதே அமெரிக்க நலன் பேண் சிந்தனையாளர் நிலைப்பாடாக இன்று உள்ளது.

## பனிப்போரினால் கற்ற பாடம்

ஆனால் அதேசமயம், கிளின்டனின் தரப்பால் தற்போது உலகில் எடுக்கப்படும் எம்முயற்சியும் அவரின் முன்முயற்சியே என்கிற வாதம் முன்வைக்கப்படுகிறது. அதற்கு ஆதாரமாக இவர்கள் இப்போது, பொசுனிய சேர்பியர் மேல் விமானத் தாக்குதலுக்கான முன்முயற்சி -அது முற்றிலும் பலனளிக்காத நிலையில் பொசுனிய முசுலீம்களுக்கு எதிரான ஆயுதத் தடையை நீக்கல் பற்றிய முன்முயற்சி, கெயிற்றித் தீவுக்கு எதிராக தற்போது முழு அளவிலான பொருண்மியத் தடை விதிக்கப்படல் போன்றவற்றை சுட்டிக் காட்டுகின்றனர். எனினும் இவற்றைவிட அமெரிக்க மக்கள் கூடுதலாக விரும்புகின்ற வலுவான காரணியொன்றும் இப்போது தெரிவிக்கப்படுகின்றது. பனிப்போர் நிலவிய காலத்தில் உலகின் சுமையெல்லாம் எம் தலையைத் தாக்க முற்பட்டதன் காரணமாக தாக்கி. ஈற்றில் பலத்த அமெரிக்க உயிர்ச் சேதத்தையும் பொருண்மிய பின்னடைவையும் சந்தித்ததற்குப் பதிலாக, இப்போது அமெரிக்கப் படையினரின் உயிர்கள் வீணாகப் பறிகொடுக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதோடு, பெருமளவு பணமும் மீதப்படுத்தப்படுவதால் உள்நாட்டில் வேகமாக வீழ்ச்சியடையும் அமெரிக்கரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அதிகரிக்கும் பாரிய குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படவும் முடியும் என்பதே அக்காரணி. அதிலும் குறிப்பாக முன்னெப்போதையும் விட இப்போது மிகக் குறைந்தளவு வெளி ஆபத்தே நிலவுவதாகவும், எனவே வெளிவிவகாரக் கொள்கையால் ஏற்படும் தவறுகளால் முன்னைப் போல் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் வாதிடப்படுகிறது. எனவே பல மற்ற வெளிவிவகாரக் கொள்கையே இப்பொழுது பொருத்தமானது எனக்கூறுவோரும் அங்குள்ளனர். இக்கருத்து அமெரிக்க மக்கட்கு பெருத்த உடன்பாடாக இருந்தாலும் தற்போதைய நிலை தொடர்வதை அமெரிக்க உயர்நிர்வாக பீடம், தொடர்புசாதன முதலாளிகள், பழமைபேண்வாதிகள் விரும்பவில்லை. இவர்கள் இப்போது அமெரிக்காவின் பெருமை கேள்விக் குறியாக்கப்பட்டமை குறித்து அதிக விசனம் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## அமெரிக்கச் சிந்தனையாளராக அடையாளமாக்கப்படும் நிக்சன்


உண்மையிலேயே அமெரிக்க சிந்தனை எனக் கூறக்கூடியது இவர்களினால் தோற்றுவிக்கப்

**பாலகுமாரன்**

படுவதுதான். அது எவ்வாறு இருக்கின்றது? அமெரிக்கச் சிந்தனையின் அடித்தளம் என்ன? என்பதுபோன்ற வினாக்கட்கு விடை காண ஏற்றாற்போல், அண்மையில் மாரடைப்பால் மரணமான முன்னாள் சனாதிபதி நிக்சன் எழுதிய கடைசி நூல் சான்று பகர்கின்றது. எத்தனையோ தோல்விகளை 'வாட்டர்கேற்' எனப்படும் பாரிய ஊழல்களைச் சந்தித்த நிக்சன், இன்று அமெரிக்க சிந்தனையாளர் என அடையாளமாக்கப்படுகிறார். அவரை கிளின்டன் தனது முன்னோடியாகக் கொள்ள வேண்டும் என ஆலோசனை வேறு வழங்கப்படுகிறது. அண்மையில் வெளிவந்த அமெரிக்க ரைம் இதழொன்றில், நிக்சனின் இறுதி நூலாக வெளியிடப்பட்ட 'அமைதிக்கு அப்பால்' (Beyond Peace) என்கிற நூலின் சில முக்கிய பகுதிகள் முன்னதாகவே வெளியிடப்பட்டன.

## அமெரிக்கச் சிந்தனையின் அடித்தளம் என்ன?
### இதற்கு விடைகாண முற்படும் முன்னாள் சனாதிபதி நிக்சனின் இறுதிநூல் ('Beyond Peace')

நிக்சன் இறப்பதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னரே, எழுதி முடிக்கப்பட்ட இந்நூலில் அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது மிக முக்கியமானது. அவரது கடைசி வாக்கு மூலமாக -எதிர்கால அமெரிக்காவின் போக்கு எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான தன் பட்டறிவின் மூலம் பெற்ற பாடமாக இந்நூல் அமைகிறது. அமெரிக்க சிந்தனை என்பது முன்னர் எவ்வாறு இருந்தது? இனியும் எவ்வாறு இருக்கப் போகின்றது என்பதற்கு இதுவே தக்க உதாரணமாகின்றது. அமெரிக்காவின் தற்போதைய போக்கினைக் கடுமையாகக் கண்டிக்கும் அவர், தற்போதைய தணிந்தகால கட்டத்திற்கு அப்பாலும் அமெரிக்க



முன்னாள் அரசுத் தலைவர் நிக்சனுடன், இன்னாள் அரசுத் தலைவர் கிளின்டன்.

நலன்கள் குறித்து சிந்திக்க வேண்டிய -செயற்பட வேண்டிய தேவையை வற்புறுத்தும் முகமாகவே, அமைதிக்கு அப்பாலும் சிந்திக்க வேண்டும் என புதியதொரு பரிமாணத்தை தற்போதைய காலகட்டத்தில் புகுத்துகிறார். முன்னர் கிழக்கிற்கும் மேற்கிற்குமான மோதல்கள் அணுவாயுத மோதல்களாக வெடிக்காமல், சருவாதிகாரத்திற்கு (கம்யூனிசம்) எதிராக சுதந்திரத்திற்கு -நீதிக்காகப் போராடினோம். இப்போது பொதுவுடைமைவாதிகள் பனிப்போரில் தோல்வியைச் சந்தித்துவிட்டார்கள். எனவே சோவியத்தினதும் கிழக்கு ஐரோப்பாவினதும் இன்றைய தோல்வியை முதற்படியாக எடுத்துக் கொண்டு, அடுத்த நூற்றாண்டில் சுதந்திரம் எங்கும் பரவ நாம் முயலவேண்டும். ஆனால் இதற்காக மீண்டும் அமெரிக்கா தனது அடிப்படைக் கோட்பாடுகளில் விசுவாசம் வைத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதை மீண்டும் செயற்படுத்த முயல வேண்டும். இதுவே நிக்சனின் வாதமாகின்றது.

## தலைமை தாங்கும் தகுதி அமெரிக்காவுக்கு உண்டா?

தற்போது கிளின்டன் உள்விவகாரங்களில் சுயகவனம் செலுத்தும் போக்கினை மிகக் கடுமையாக விமர்சிக்கும் அவர், எமக்கொரு உறுதியான வெளிநாட்டுக் கொள்கை இல்லாமல் உறுதியான உள்நாட்டுக் கொள்கை இருக்க முடியாது என்கிறார். உலகம் போர் செய்யும்போது நாம் அமைதியாக இருக்க முடியாது. நோயுற்று சீரழியும் நிலைமையில் உலகப் பொருண்மியம் இருக்கும்போது எமது பொருண்மியத்தை ஆரோக்கியமானதாக வைத்திருக்க முடியாது என்றார். அத்தோடு மாற்றுக் கருத்தாக முன்வைக்கப்படும் சோவியத்தின் வீழ்ச்சியின் பின், அமெரிக்க சருவதேச தலைமை அவசியமற்றது; பனிப்போரின் முழுச் சுமையையும் முன்னர் அமெரிக்காவே தாங்கியது. இப்போது ஏனைய நாடுகளும் சுமையைப் பங்கிட்டும், அமெரிக்க உள்நாட்டு நிலமை மோசமடைகிறது. மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்கிறது. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம், நிதி நெருக்கடி என்பவற்றால் முன்னர் போல் வெளிவிவகாரங்களில் அதிக கவனம் செலுத்த முடியாது என்கிற காரணங்களை நிக்சன் முற்றாக மறுக்கிறார். அமெரிக்காவைத் தவிர வேறு எந்த நாடாலும் தற்போதைய நிலையில் தலைமை தாங்க முடியாது என்கிறார். அதற்கான காரணமாக அவர் கூறுவது, யப்பானும் யேர்மனியும் பொருண்மிய ரீதியில் வளர்ந்திருந்தாலும் இராணுவ ரீதியில் வளரவில்லை. ருஸ்யாவும் சீனாவும் இராணுவ ரீதியில் வளர்ந்திருந்தாலும் பொருண்மிய பலம் உடையன அல்ல என்கிறார். எனவே அரை நூற்றாண்டு தலைமை அனுபவம் வாய்ந்த - ஏனைய நாடுகள் எவற்றின் மீது ஏகாதிபத்திய தலையீடுகள் செய்யாத நேர்மையான தரகராக செயற்படும் தகுதி அமெரிக்காவுக்கே உண்டென்பது அவரது வாதம்.

அதே சமயம் நேட்டோ, ஐ.-நா. போன்ற அமைப்புகள் மூலமாக மேற்கொள்ளப்படும் கூட்டுச் செயற்பாடுகளையும் அவர் நிராகரிக்கின்றார். பலம் வாய்ந்ததாக இருந்தாலும் நேட்டோவினால் பொசுனியாவில் எதைச் சாதிக்க முடிந்தது? ஐ. நா. வின் உறுப்புரிமை உள்ள மூன்றிலொரு பகுதி நாடுகள் அமெரிக்காவின் அர்க்கன்சாஸ் மாநிலத்திலும் சிறியவையே. எனவே இவை என்ன செய்ய முடியும் என்கிறார். அமெரிக்கத் தரப்பின் நலன்கள் பாதிக்கப்படும்போது மட்டுமே, அமெரிக்கா விரைந்து தலையிட வேண்டுமேயன்றி எல்லா விடயங்களிலும் மூக்கை நுழைக்கக் கூடாது என்கிறார். சோமாலியாவில் மனிதாபிமான அடிப்படையில் தலையிட்டு பின் ஐ. நா. வின் சோமாலியா நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் அமெரிக்கா ஈடுபட்டதை தவறு என்கிறார். புஸ் வளைகுடாப் போரில் ஈடுபட்டதுபோல, எமது நலன்கள் பாதிக்கப்படும்போது மட்டுமே தீர்க்கமான முறையில்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சர்வதேச நாட்டி
# நாட்டினத்தை

## தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சர்

சர்வதேச நாட்டினங்கள், தமிழீழ நாட்டினத்தினை உலகின் ஒரு நாட்டினமாக ஏற்றுக் கொண்டு, தமது அன்பையும் ஆதரவையும் தமிழீழ மக்களுக்கும் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தெரிவித்துக்கொண்டன.

இலண்டனில் நடைபெற்ற 1983 ஆம் ஆண்டு ஆடி இனப்படு கொலைகளின் பதினோராவது நினைவு தினப் பேரணியிலும் அப்பேரணியின் முடிவில் நடைபெற்ற கூட்டத்திலுமே இச்சம்பவம் நடைபெற்றது.


கடந்த ஆடி 23 மதியம் 1. 30 மணியளவில், இலண்டன் ரெம்பிள் புகையிரத நிலையத்திற்கு அண்மையிலிருந்து ஆரம்பமான இந்த நினைவுதினப் பேரணி மதியம் 3 மணியளவில், கொல்போன் கொன்வே மண்டபத்தை வந்தடைந்தது. ஊர்வலம் புறப்பட்ட நேரம் முதல், அதில் கலந்துகொண்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் உணர்ச்சி ஆவேசத்துடன், சிறீலங்கா அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு யுத்தக் கொடுமைகள், பொருளாதாரத் தடைகள் என்பவற்றிற்கு எதிராகக் கோசங்களை எழுப்பினார்கள். மேலும் தமிழர் வேண்டுவது சுயநிர்ணய உரிமையே! தமிழரின் ஒரே அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளே! தமிழினத்தின் தேசியத் தலைவர் பிரபாகரன் தான்! எனப் பகிரங்கமாக எடுத்துக்கூறியபடி வந்தனர். சிறீலங்காவுக்கான ஆயுத உதவிகளை நிறுத்தும்படியும், சிறீலங்கா தமிழின அழிப்பில் ஈடுபடுகின்றது எனவும் கோசமிட்டனர்.



ஊர்வலம் கொன்வே மண்டபத்தை வந்தடைந்ததும் நினைவுக் கூட்டம் ஆரம்பமாகியது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், உயிர்த்தியாகம் செய்த அனைவருக்கும் இரு நிமிட மௌனஞ்சலியுடன் ஆரம்பமான இக்கூட்டத்தில், சட்டத்தரணி திரு. நேமிநாதன் பேச்சாளர்களை அறிமுகம் செய்து வைத்தார். சட்டத்தரணி சிறீஸ்கந்தராஜா ஒவ்வொரு பேச்சின் முடிவிலும் அதனைச் சுருக்கமாகத் தமிழில் எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தின் பிரதம விருந்தினராக, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலையின் போது, மயிரிழையில் உயிர்தப்பியவருமான டாக்டர் தர்மலிங்கம் அவர்கள் கலந்துகொண்டார்கள். முதுமை நிலையிலும் அவர் தனது பேச்சில், 1983 இனப்படுகொலையின் கொடுமையினை எடுத்துரைக்கத் தயங்கவில்லை. "அடிபட்டாவது தப்பவேண்டும் எனும் உணர்வு ஏற்பட்டதினாலேயே, சிறைச்சாலைக்குள் இரண்டாவது தடவையாகப் புகுந்த சிங்களக் காடையர்களுடன் நாங்கள் கதிரைக் கால்களைப் பயன்படுத்தி அடிபட்டதாகவும், அந்நேரம் சிங்களக் காடையர்கள் கொண்டுவந்திருந்த இரும்புச் சட்டங்களைப் பறித்து திருப்பித் தாக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தமையினாலேயே எங்களால் உயிர்தப்பக் கூடியதாக இருந்தது" எனவும் குறிப்பிட்டார். சிங்களக் காடையர்களுடன் பேசமுற்பட்ட காந்தியவாதியான டாக்டர் ராஜசுந்தரத்தை அவர்கள் கொன்றனர் எனவும் கூறினார். குட்டிமணி, தங்கத்துரை உட்பட 53 தமிழர்களை ஆடி 25 இல் கொன்ற சிங்களக் காடையர்கள், மீளவும் திரும்ப வருவதாக அன்றைய தினம் கூறிச்சென்றனர் எனவும், அதேபோல் இரண்டு தினங்களின் பின் ஆடி 27 இல், சிறைச் சாலைக்குள் புகுந்தனர் எனவும் கூறினார். முன்வைத்த காலை பின்வைக்காது, கடமை என்ற உணர்வுடன் ஒவ்வொரு தமிழனும் கடமையைத் துணிந்து செய்துவரவேண்டிய நேரம் இது; கவலை, சுய ஆசாபாச உணர்வுகளுக்கு இடம்கொடுக்காமல், சமுதாயக் கடமை இது என்ற எண்ணத்துடன், தமிழர் அனைவரும் கடமைசெய்ய முற்பட்டால், முன்னேற்றம் நிச்சயம் ஏற்படும்" எனவும் தமது உரையில் வலியுறுத்தினார். டாக்டர் தருமலிங்கம் அவர்களின் உரையினை அடுத்து, உலகின் பல்வேறு விடுதலை அமைப்புக்களின் பிரதிநிதிகள் சொற்பொழிவாற்றினர்.

> "அனைத்துத் தமிழரும் எமது தேசிய விடுதலைக்கான கடமையைச் செய்ய முற்பட்டால், விடுதலையில் மேலும் முன்னேற்றம் ஏற்படும்."
>
> **- டாக்டர் தருமலிங்கம்**




'ஸ்கெல்டிக்' அமைப்பு எனப்படும் வேல்ஸ், ஸ்கொட்லண்ட், அயர்லாந்து, கோனிஸ், பிரித்தன் ஆகிய மக்களின் ஒடுக்குமுறைக்கெதிரான அமைப்பைச் சேர்ந்த திரு. றொபேர்ட் ஆர்ப் தோமஸ் தமிழில் வணக்கம் கூறித் தமது உரையை ஆரம்பித்தார். உரோமானியர் வருவதற்கு முன்னர், தனித்தனி மொழி, கலாச்சாரப் பண்புகளுடன் காணப்பட்ட வேல்ஸ், ஸ்கொட்லண்ட், அயர்லாந்து, கோணிஸ், பிரித்தன் மக்கள் ஆங்கில மொழியின் மேலாதிக்கத்திற்கு உள்ளான வரலாற்றைக் கூறிய அவர், பிரித்தானியரின் மேலாதிக்கப் போக்கினால், 1960 ஆம் ஆண்டுகள் வரை வேல்சில் 60 வீத மக்களால் பேசப்பட்டு வந்த வேல்ஸ் மக்களின் மொழியினது முக்கியத்துவம் இன்று 20 வீதமாகக் குறைந்துவிட்டதெனக் கூறினார். ஆயினும் இவ் இன மக்களிடையே தோன்றிய விழிப்புணர்வினால், இன்று இம் மக்களில் பலர், தங்களுடைய இனத்துவ அடையாளங்களைப் பேணக்கூடிய வகையில் போராடிவருவதாகக் குறிப்பிட்டார். தமிழீழ மக்களும் சிங்களவரின் இன அழிப்புக்கு எதிராகப் போராடி , இன்று தமது சுயநிர்ணய உரிமைக்காக போராடுவதைப் பாராட்டிய அவர், தமிழீழ மக்கள் ஒரு நாட்டினம் என்பதையும், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் தாங்கள் ஆதரிப்பதாகவும் எடுத்துரைத்தார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்திய அவர், தமிழீழ மக்கள் விடுதலைபெற வேண்டும் என வாழ்த்துத் தெரிவித்தார்.

அவரை அடுத்து, வட அமெரிக்கப் பழங்குடி மக்களின் உரிமைகளுக்காகப் போராடிவரும் அமைப்பைச் சேர்ந்த ஸ்ஓய் லைக்வூட் எனும் பெண் பேச்சாளர் தமது உரையை ஆரம்பித்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டக் களத்தைத் தாங்கள் நேரடியாக தரிசிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும், தமிழீழ மக்களின் துன்பங்களைத் தங்களால் உணர்ந்துகொள்ளக்கூடியதாக உள்ளது எனக் குறிப்பிட்ட அவர், 502 வருடங்களாக வட அமெரிக்க இந்தியர்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுக்கப் போராடி வருவதாகக் குறிப்பிட்டார். மனிதாயத்திற்கு எதிரான வகையில், வடஅமெரிக்க இந்தியர்களை மலடாக்கக்கூடிய மருத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், பொக்கிளிப்பான், சின்னம்மை போன்ற வைரஸ் கிருமிகளை உள்ளடக்கிய மருந்துகள் செலுத்தப்பட்டு அம்மக்களின் ஆரோக்கியம் சீர்குலைக்கப்படுவதாகவும், இதனால் தற்கொலை மனோபாவத்திற்கு தள்ளப்பட்ட மக்களில் பத்துக்கு ஒருவர், தற்கொலை மூலம் தமது வாழ்வை முடித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டார். உலகில் ஒடுக்கப்படும் மக்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து அமுக்கத்தை ஏற்படுத்துவதன்

> "தமிழ்த்தேசிய விடுதலைக்காக ஆண்களை மட்டும் நம்பியிராது, தமிழீழப் பெண்களும் ஆயுதமேந்திப் போராடுவதையிட்டு நீங்கள் எல்லோரும் பெருமைப்படவேண்டும்".
>
> **- மெடியா (கேடிஸ்தான் தொழிலாளர் அணிப் பிரதிநிதி)**



பேரணியைத் தொடர்ந்து ந
கலந்து கொண்ட மக்கள், த
உயிர்த் தியாகம் செய்த பே
எழுந்து நின்று மௌன



சிறீலங்கா அரசின் தமிழி
சர்வதேச சமூகத்திற்கு எடு
பகு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ...னங்கள் தமிழீழ... அங்கீகரித்தன

## ...தேசப்படுத்தலின் வேகம் அதிகரிக்கின்றது



...பற்ற நினைவுக் கூட்டத்தில்
...விடுதலைப் போராட்டத்தில்
...ளிகளுக்கும் மக்களுக்கும்
...சலி செலுத்தும் காட்சி.

மூலமே, ஒடுக்குமுறைகளை எதிர்த்துப் போராடி வெற்றிபெறலாம் எனவும் கூறினார். தமிழீழ மக்களின் போராட்ட முறைமைகளை வெகுவாகப் பாராட்டிய அவர், விடுதலைப் புலிகள் பெண்ணுரிமைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்திற்கு நன்றி தெரிவித்தார்.

அவரை அடுத்து, இலண்டனின் பிரபல பெண் வழக்கறிஞையான பாரிஸ்டர் செல்வி சிவானி ஜெகராஜா, சிறீலங்கா அரசாங்கம் உள்நாட்டுச் சட்டங்களையும் சர்வதேசச் சட்டங்களையும் வழமைகளையும், யுத்தச் சட்டத் திட்ட விதிமுறைகளையும், எவ்வாறு மீறுகிறது என விளக்கி உரை நிகழ்த்தி, சிறீலங்காவின் மனித உரிமைகளுக்கெதிரான செயற்பாடுகளையும் அரச பயங்கரவாதப் போக்கையும் ஆணித்தரமாக விளக்கினார். அத்துடன் பிரித்தானிய அரசாங்கம், "சட்டபூர்வமான அரசாங்கம் ஒன்று தனது சட்டபூர்வமான படைகளைப் பயன்படுத்தி பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தும் செயற்பாடு" என சிறீலங்காவின் அரச பயங்கரவாதத்தையும் தமிழர்களுக்கெதிரான யுத்தத்தையும் நியாயப்படுத்த முற்படுவதை அவர் வன்மையாகக் கண்டித்தார். மேலும் சட்டபூர்வமான அரசாங்கம் எனக் கூறப்படும் சிறீலங்கா அரசாங்கம், யுத்தச் சட்டதிட்டங்களை மீறும் விதங்களையும் விளக்கினார். எனவே, சிறீலங்கா அரசாங்கத்தின் செயற்பாடுகள் எவ்வளவு தூரத்திற்கு சட்டவிரோதமானவையாக மாறி, தமிழர்களின் இன அழிப்புக்குத் துணையாகிறது என்பதையும் எடுத்துக்கூறிய அவர், பிரித்தானிய அரசாங்கமும் சர்வதேச சமூகமும் சிறீலங்கா தொடர்பான தமது கொள்கைகளை மறுபரிசீலனை செய்வது, உலகின் மனித உரிமையைப் பேணுவதற்கு அவசியமாகும் என்பதையும் வலியுறுத்தினார்.

'கிழக்குத் திமோர் பிரட்லின் விடுதலை அணி'யைச் சேர்ந்த பேச்சாளர் அடுத்து உரைநிகழ்த்தினார். இவர் தமது உரையில், சுயநிர்ணய உரிமையை அடைவது என்பது இன்று தியாகங்களையும் பொறுமையையும் உடைய செயலாகி வருகிறது எனக்குறிப்பிட்டதுடன், தமிழர்களும் கிழக்குத் திமோர் மக்களைப் போல், சுயநிர்ணய உரிமையுள்ள உலகின் இனமே என அடித்துக் கூறினார். எப்போது எப்படிக் கிடைக்கும் என எதிர்பார்க்காது, சுயநிர்ணய உரிமையுடனான விடுதலை என்றோ கிடைத்தே தீரும் என்ற மன உறுதியுடன் விடுதலை அணிகளும் மக்களும் போராட வேண்டுமெனக் கூறிய அவர், கிழக்குத் திமோர் மக்கள் தமிழீழ விடுதலைக்கு முன்னதாக விடுதலை பெறுவார்களேயானால், தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பையும் தமிழீழத் தேசத்தையும் கிழக்குத் திமோர் முன்னின்று அங்கீகரிக்கும் என வாக்குறுதி அளிப்பதாகவும் கூறினார்.

> "எமது அகதி வாழ்வுக்குக் காரணமான, சிறீலங்காவின் அநீதிகளுக்கெதிராக நடைபெறும் விடுதலைப் போராட்டத்திற்குச் சார்பாகக் குரல் கொடுப்பது எமது தார்மீகக் கடமையாகும்".
>
> - செல்வன் யூட். பகீரதன்

ஜனநாயகத்திற்கான பர்மிய ஒற்றுமை முன்னணிப் பேச்சாளர் வின்சோ, கேடிஸ்தான் தொழிலாளர் அணிப் பிரதிநிதி மெடியா ஆகியோர் தங்கள் பேச்சுக்களில், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தினையும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் திறமையான வழிகாட்டலையும், பெண் போராளிகளின் உறுதியினையும் பாராட்டிப் பேசியதுடன், தங்கள் மக்களின் ஆதரவையும் தெரிவித்தனர். சிறீலங்காவின் அரச பயங்கரவாதத்திற்கெதிரான பிரச்சாரக் குழுவின் சார்பாகப் பேசிய பெண் பேச்சாளரான டியூரே மக்னல், "இந்த முக்கியத்துவம் வாய்ந்த ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்துகொள்வதில் பெருமையடைவதாகக் கூறியதுடன், நீதியில்லாத சமாதானத்தால் அமைதியை ஏற்படுத்த ஒருபொழுதும் முடியாது" எனக் குறிப்பிட்டார். "சிறீலங்காவில் தமிழர்களுக்கெதிரான யுத்தத்தை சிறீலங்கா அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது எனவும், பிரித்தானிய குடியேற்ற அரசாங்கம், அன்று தனது பெருந்தோட்டப் பொருளாதார நலன்களைக் கவனத்தில் கொண்டு, தமிழ் மக்களுக்கு எதிரான சிங்கள மேலாதிக்கத்தை அறுவடை செய்தது எனவும் இன்று தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அரசுக்கு உதவிகள் வழங்குவதன் மூலம், பிரித்தானியரும் மற்றும் சிறீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளும் தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு பின்துணையாக மாறிவருகின்றனர் எனவும் எடுத்துரைத்தார்.

> "தமிழ் மக்கள் ஒரு நாட்டினம்: தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நாம் ஆதரிக்கின்றோம்"
>
> - 'ஸ்கெல்டிக் அமைப்பு' பிரதிநிதி றொபேர்ட் ஆர்ப் தோமஸ்.




...ழிப்பை, கோசங்கள் மூலம்
...ரைக்கும் பேரணியினரின் ஒரு
...ினர்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவையும் சுதந்திர வர்த்தக வலயத்தில் முதலிடுபவர்களும் யுத்தத்தினை ஊக்கப்படுத்துகின்றனர். இந்நிலையில், சிறீலங்காவுக்கு எதிரான அழுத்தத்தை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு பிரித்தானிய மக்களினதும் சமாதானம் விரும்பும் அனைத்து மக்களினதும் கடமை. அதேநேரத்தில், விடுதலைக்கு முயற்சிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழ மக்களுக்கும் அவர்களது விடுதலைக்கான முயற்சிகளுக்குப் பக்கதுணையாக நிற்கவேண்டியதும் அவசியமாகும் என்றார். 60, 000 தமிழ் மக்களைப் பலிகொ




ண்டு பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களை சிறைக் கைதிகளாக மாற்றியுள்ள இந்த யுத்தம் பற்றி, சர்வதேச சமூகம் அக்கறை காட்டவேண்டுமெனவும் அமைதியான தமிழ்ப் பெண்கள் மூவாயிரத்திற்கு மேல் யுத்தக்களத்தில் பேராளிகளாக நிற்கின்றார்கள் என்றால், அதற்கு ஒரு காரணம் உண்டு என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்" எனவும் கூறினார். 'விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள்' என்ற நூலை ஒவ்வொருவரும் படித்துப் பார்க்கவேண்டும் எனத் தாம் விதந்துரைப்பதாகக்" கூறிய அவர், தமிழீழ மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமது ஆதரவையும் அன்பையும் வெளிப்படுத்தினார்.

இவரை அடுத்து செல்வன். யூட் பகீரதன் 'புலம்பெயர்ந்து வாழும் நாமும் ஏன் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும்' எனச் சிற்றுரை நிகழ்த்தினார் இச் சிறுவன் தனது உரையில், "சிறீலங்காவின் இனப்படுகொலை, அரச பயங்கரவாதம் ஆகியவற்றினாலேயே நாம் அந்நிய நாடுகளில் அகதிகளானோம்; அதனால் இவ் அநீதிகளுக்கு எதிராக நடைபெறும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குச் சார்பாகக் குரல் கொடுப்பது எமது தார்மீகக் கடமையல்லவா!" எனக் கேட்டுக் கொண்டார்.

தமிழீழம் சென்று திரும்பிய அன்பர் ஒருவர், தமிழீழத்தின் இன்றைய நிலை பற்றியும், தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்திக்கக் கிடைத்த பேறு பற்றியும், வெளிநாட்டில் உள்ள தமிழர்கள் எவ்வாறு போராட்டச் சூழலில் தமிழீழ மக்களுக்கு உதவலாம் எனத் தலைவர் பிரபாகரன் கூறியவை பற்றியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகத்திற்கு எழுதிய கடிதமும் அக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

இவ் வருட, ஆடி 1983 இனப்படுகொலை நினைவுப் பேரணியும் அதனுடன் தொடர்பான கூட்டமும் உலகின் ஏனைய நாட்டினங்கள், தமிழீழ நாட்டினத்துக்குத் தமது அங்கீகாரத்தையும் அன்பையும் ஆதரவையும் வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பமாக அமைந்துவிட்டதனால், இது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சர்வதேசப்படுத்தலின் ஒரு முக்கிய அம்சமாக மாறிநிற்கிறது. ■



www.tamilarangam.net



# ஒற்றையாட்சி அமைப்பில் நடைபெறும் தேர்தல் இலங்கைத்தீவின் இனப்பிரச்சினைக்கு தீர்வாகாது

இன்று பலராலும் பேசப்படும் விடயம், சிறீலங்கா அரசால் அவசர அவசரமாக நடத்தப்பட இருக்கும் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் பற்றியதாகும். இதற்கு முக்கியத்துவம் கொடுத்து பிரச்சார சாதனங்களும் தமது பங்குக்குச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. தமிழீழ மக்களில் பெரும்பான்மையானோர் இதில் ஆர்வம் இன்றி இருப்பதையே காணக்கூடியதாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலையே தமது இலட்சியம் என்று ஆயுதம் தூக்கிச் சுட்டுப் பழகியதோடு நிறுத்திவிட்டு, இந்திய அரசின் கைக்கூலிகளாக மாறிய தமிழ்க் குழுக்களோ இன்று, சிறீலங்காப் பாராளுமன்றக் கதிரைகளைப் பிடிப்பதற்குப் போட்டி போட்டுக்கொண்டு செயற்பட்டு வருகின்றன. ஆனால், இந்தப் போலிக் குழுக்களின் தலைமைகள், தம்மையும் தமது குடும்பங்களையும் சொகுசாக வைத்துக் கொள்ள, பொருள் சேர்ப்பதற்கு, உண்மையான விடுதலை வேட்கைகளுடன் களம் புகுந்த பல இளைஞர்களை திசை திருப்பி, தமது பிழையான வழிகாட்டலால் கூலிகளாக்கி, இன்று இந்த இளைஞர்களின் வாழ்வை 'இரண்டும் கெட்டான் நிலை'க்குத் தள்ளி, தமிழீழ விடுதலைப் போரின் எதிரிகளாக்கி விட்டுள்ளார்கள். இந்த நிலைமையை உணரமுடியாத அவ்விளைஞர்களும் தாம் ஏதோ நல்லதைச் செய்வதாக நினைத்துக் கொண்டு. தமிழீழ விடுதலைப் போரைக் காட்டிக் கொடுக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

### தமிழ்த் துரோகக் குழுக்கள்

அதே நேரத்தில் சர்வதேச உலகத்தையும் ஏமாற்ற, தமிழீழப் பகுதிகளில் குறிப்பாக, சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்பில் உள்ள தமிழீழப் பகுதிகளில் தேர்தலை நடாத்தி, முழுத் தமிழீழத்திற்குமான தேர்தல் நடந்ததாகவும் அதில் தமிழீழ மக்கள் பங்குபற்றியதாகவும் காட்டி, தமிழீழ விடுதலைப் போரையும், போராட்டத்தில் ஈடுபட்டு நிற்கும் தலைமைச் சக்தியையும் அரசியல் ரீதியாகத் தனிமைப்படுத்திவிட்டால், சுலபமாகத் தமது இராணுவ ஆக்கிரமிப்பைத் தமிழீழத்தில் முழுமையாக மேற்கொள்ளலாம் என சிறீலங்கா அரசு கனவு காண்கின்றது. இதற்கு தமிழ்த் துரோகக் குழுக்களும் துணை போகின்றன.

**இராசா**

அதிலும் குறிப்பாகச் சொல்வதாயின், 1977 ஆம் ஆண்டுத் தேர்தலின் போது, "தாம் பங்குகொள்ளும் அடுத்த தேர்தல் சுதந்திர தமிழீழத்தில்தான் என்றும் அப்படியில்லாமல், அதற்கு முன் தாம் தேர்தலில் பங்குபற்றினால் தாம் மனநோயாளர்களாகத் தான் இருப்போம்" என்றும் கூறிய தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்தத் தேர்தலில் இந்திய அரசு கொடுத்துவரும் ஊட்டச்சத்தில் புத்துணர்ச்சி பெற்று, ஆயுதங்களுடன் உலா வரும் தமிழ்க் குழுக்களுடன் சொற்போரில் ஈடுபட்டுக்கொண்டு, தேர்தலில் களம் புகுந்துள்ளது. இந்தத் துரோகக் கூட்டணியின் அண்மைக்காலச் செயற்பாடுகளை அவதானிக்கும்போது இவர்களுக்கு விரைவில், அதாவது ஒருசில மாதங்களில், சிறீலங்காப் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்ற விடயம் தெரிந்திருக்க வேண்டும் என்ற சந்தேகமும் எழத்தான் செய்கின்றது. இதற்கு இந்திய அரசும் உதவி புரிந்திருக்கலாம். அதற்கு நன்றியாகத்தான் வவுனியாவில் நடந்த ஒரு கூட்டத்தில் கூட்டணியின் முக்கிய பிரமுகர் ஒருவர், "தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவால்தான் முடியும்" என்ற கருத்துப்பட பேசியுள்ளார். இதன் மூலம் தாம் இன்றும் இந்திய அரசின் ஏவல் நாய்கள்தான் என்பதை மீண்டும் பகிரங்கப்படுத்தியுள்ளார்கள்.

### தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனம்

இதே கூட்டணியினர், 1948 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து, தொடர்ச்சியாகச் சமஸ்ட்டி என்றும், மாவட்ட சபை என்றும், பிரதேச சபை என்றும் சிறீலங்கா அரசுடன் பேசி, ஒப்பந்தம் செய்து, சகலதும் தோல்வி கண்ட நிலையில் தான், தந்தை செல்வா கூறினார், "தமிழீழம்தான் தமிழீழ மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வாகும்" என்று. தேர்தல்கள் மூலம் இனிமேல் காலத்தைக் கடத்துவது, தமிழீழ மக்களை இலங்கைத் தீவில் சிங்கள இனவெறி காவுகொள்ளக் காலாக அமைந்துவிடும் என்பதை தந்தை செல்வா உணர்ந்து கொண்டிருந்தார். அந்த உணர்வின் அடிப்படையில் இன்னொன்றையும் கூறினார். "தமிழீழ விடுதலை என்பது நெருப்பாறு; இதனைக் கடப்பதற்கு எமது இளம் சந்ததி பல தியாகங்களைச் செய்ய வேண்டும். இது தவிர்க்க முடியாதது" என்றும் கூறினார். ஆனால் கூட்டணியினரோ, தமது சுயநலன்களுக்காக தந்தை செல்வா தீர்க்கதரிசனத்துடன் கூறியவற்றை எல்லாம் மறைத்துவிட்டு, தமது கூட்டங்களிலெல்லாம் தந்தை செல்வாவின் பெயரைச் சொல்லி, வாய்வீச்சு அடித்து, மக்களை மீண்டும் ஏமாற்றலாம் எனக் கனவு காண்கின்றார்கள். இவை எவையுமே தமிழீழ மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையப் போவதில்லை. அதிலும் இலங்கைத் தீவை ஆங்கிலேயர் விட்டுச் சென்றபோது, ஏற்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி அமைப்பில், தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படப் போவதில்லை என்பதை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். 1948 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை, நடந்த எந்தவொரு தேர்தல் மூலமும் தமிழீழ மக்கள் எந்தவொரு நன்மையையும் பெறவில்லை. மாறாக, மாறி மாறி வந்த சிங்கள இனவெறி அரசாங்கங்கள் தமிழ் மக்கள் உயிர்வாழும் உரிமைகளை, பாரம்பரிய நிலத்தை, மொழியைப் பறித்தார்கள். இன்று சொந்த மண்ணிலேயே தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து, அகதிகளாக வாழும் நிலையை உருவாக்கிவிட்டுள்ளார்கள்.



தந்தை செல்வா

"தமிழீழம் தான் தமிழீழ மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வாகும்"

### இந்தியா நடாத்திய மாகாணசபைத் தேர்தல்

இவை அனைத்துக்கும் மேலாக, சிறீலங்காவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, இலங்கைத் தீவில் அமைதி ஏற்படுத்தவந்த பிராந்திய வல்லரசான இந்தியா கூட, ஒரு போலி மாகாணசபைத் தேர்தலை தமிழீழ மண்ணில் நடாத்தி முடித்தது. ஆனால், ஏதாவது ஒரு நன்மையாவது தமிழீழ மக்களுக்கு இதன்மூலம் கிடைத்ததா என்றால்? அதற்கான பதில் "இல்லை" என்பதுதான்.

இவ்வாறு எந்தவகையான தேர்தல் மூலமும் வெல்லப்பட முடியாத ஒன்றாக, 'சிங்கள இனவெறி' வளர்க்கப்பட்டு, இன்று கோரமுகத்துடன் செயற்பட்டு வருகின்றது. இதனை எத்தனை ஆயிரம் தேர்தல், எந்த உருவத்தில் வந்தாலும் வெல்ல முடியாது என்பதற்குக் கடந்த காலச் சம்பவங்கள் சாட்சிகளாக அமைகின்றன. ஆகவே இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்கு தற்போது நடைபெறும் ஒற்றையாட்சி அமைப்புத் தேர்தல், ஒருபோதும் தீர்வாகாது. எனவே தமிழீழ மக்களாகிய நாம், இந்தப் பதவிவெறிபிடித்த இனவெறியரும் இனத் துரோகிகளும் சேர்ந்து, தமது சுயநலங்களுக்காக நடாத்தும் தேர்தல்கள் பற்றி அதிகம் சிந்திக்கத் தேவையில்லை. நாம் உடனடியாகச் செய்யவேண்டியது, நாம் தமிழர் -எமது தேசம் தமிழீழம் எமது தேசத்தைவிட்டு சிங்கள ஆக்கிரமிப்புப் படைகள் துரத்தப்படும் வரை, போராடுவதும் போராட்டத்தில் நேரடியாகப் பங்களிக்க முடியாதவர்கள், தம்மால் முடிந்த சகலவகையான உதவிகளையும் விடுதலைப் போருக்கும் விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் செய்வதுதான். ■

*நன்றி: 'உலகத் தமிழர்'*

## சிறீலங்காவின் ஜனநாயக...

மன்ற உறுப்பினர் பதவியை ஜே. ஆர். ஜெயவர்த்தனா துறந்தபோது உடனடியாகவே இடைத் தேர்தல் நடத்தப்பட்டது. அதாவது சிறீலங்காவின் ஜனநாயக அரசியல் சிங்களவர்களுக்கு சாதகமானதாகவும், தமிழர்களுக்கு எதிரானதாகவும் செயற்படுகிறது என்பதைக் காட்டும் ஒருவகை மாதிரியான உதாரணமாக இதனைக் கூற முடியும்.

### ஜனநாயக ரீதியில் வெளியான வேணவா

இன்னும் 1977 இன் பொதுத் தேர்தலின் முடிவின் மூலம், தமிழ் மக்கள் தமது அபிலாசையை -வேணவாவை மிகவும் துல்லியமாக வெளிப்படுத்தினர். ஆனால் அந்த ஜனநாயக முடிவை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக அப்போது பிரதமராக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா, 'போர் என்றால் போர்' என முழங்கியதுடன் இராணுவ ரீதியாக தமிழ் மக்களை அடக்கிவிட முற்பட்டதன் விளைவுதான் இன்றுவரை நீடிக்கும் யுத்தம். இந்த யுத்தத்தைத் தொடர்ந்து நீடிப்பதற்கும், இந்த யுத்தத்திற்கு சட்பூர்வ அங்கீகாரம் அளிக்கும் நிறுவனமாகவும்தான் சிறீலங்காவின் பாராளுமன்றம் இருக்கின்றது என்பதே யதார்த்தமாகும்.

தேர்தல் முறையையும், சிறீலங்கா பாராளுமன்றத்தையும் ஏற்றுக் கொள்வதில் தயக்கம் இருக்கின்றபோதும் கூட, தமிழ் மக்கள் தமது தனியரசுக்கான வேணவாவை இத்தேர்தல் மூலம் வெளியிட்டதை குறிப்பிட்டுத்தானாக வேண்டும்.

இன்னும் 1977 பொதுத் தேர்தல் முடிவின் மூலம் எதிர்பாராத விதமாக தமிழர்கள் எதிர்க்கட்சி அந்தஸ்த்தைப் பெற்றபோதும் கூட, எதிர்க்கட்சிக்கு உரிய கௌரவமோ அல்லது அந்தஸ்த்தோ அவர்களுக்குக் கிட்டியிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உலகிலேயே எந்தப் பாராளுமன்றத்திலும் இதுவரை நடந்தேறியிராத வகையில் எதிர்க்கட்சித் தலைவர் -அவர் ஒரு தமிழர் என்பதற்காக -நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியதும் சிறீலங்காவின் பாராளுமன்றம்தான். சர்வசன வாக்கெடுப்பு என்ற போலி நாடகத்தின் மூலம் சிறீலங்காப் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் 1982 இல் நீடிக்கப்பட்டது. ஜனநாயக அரசியலில் மற்றுமொரு கேலிக்கூத்தாகும். இவ்வாறு எல்லாம் ஜனநாயகக் கோட்பாடுகளையும் மக்களாட்சித் தத்துவத்தையும் தமக்கு ஏற்ற விதத்தில் எல்லாம் வளைத்தும் நெளித்தும் பயன்படுத்தி தமிழ்மக்களை ஜனநாயக, விரோதிகளாகக் காட்ட விழைவதுதான் மிகவும் விந்தையானது.

### 6வது திருத்தம்

இவையெல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல அமைந்தது 1983 இல் நிறைவேற்றப்பட்ட 1978 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்புக்கான 6வது திருத்தச் சட்டமாகும். தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்திய வேணவாவிற்கு எதிராகப் பிரகடனம் செய்தாலேயே, சிறீலங்காப் பாராளுமன்றத்தில் இடம்பிடிக்க முடியும் என்ற நிலையை ஏற்படுத்திய இச்சட்டம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளை பாராளுமன்றத்தில் இருந்து கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியது.

1989 பொதுத் தேர்தல் முடிவின் மூலமும் கூட, பெரும்பான்மையான தமிழ் மக்களின் வேணவாவும் -அபிலாசையும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. தமக்கென தனியரசு ஒன்றை நிறுவிக் கொள்வதுதான் தமிழ் மக்களின் அடிப்படையான வேணவா என்பது மிகத் துல்லியமான ஜனநாயக ரீதியாக வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் இதனையெல்லாம் ஏறெடுத்தும் பார்க்காத நிலையில் தேர்தலில் போட்டியிடுவது மட்டும்தான் ஜனநாயகம் என்றே சிறீலங்கா சித்தரித்துக் கொள்கிறது. இவ்வாறு சித்தரிப்பதன் மூலம் தமிழ் மக்களை ஜனநாயகத்தின் எதிரிகள் போலக் காட்ட முயற்சிக்கப்படுகிறது. ஆனால் சிங்களப் பேரினவாதிகளின் இந்த இலக்கு நிறைவேறப் போவதில்லை என்பது மட்டும் உறுதி. ■

## ஒடுக்கப்பட்ட மக்களின்...

வருகின்றனர். மேலும் பாலர் பாடசாலையையும் ஆரம்பித்துள்ளனர். இதன் மூலம் இவர்களது கல்வி அறிவைவளர்க்க, முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை கடந்தகாலப் போராட்ட வரலாற்றையும், சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர்களின் கொடூரங்களையும் கொண்ட புகைப்படக்கண்காட்சி ஒன்றும் நடாத்தப்பட்டதுடன், மாவீரர் பணிமனையும் அமைக்கப்பட்டுள்ளது.

**இக்கிராமம் இன்று, விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளால், சகல துறைகளிலும் விருத்தியடைந்து, எதிர்காலத்தில் சகல அடக்குமுறைகளிலிருந்தும் விடுபட்டு, சிறந்ததோர் கிராமமாகத் திகழும் என எதிர்பார்க்கலாம்.**

**சசீகரன்**

நன்றி: 'ஈழநாதம்'

## நல்லெண்ணெய் உற்பத்தி

முல்லை மாவட்டக் கருவேலன் கண்டல் என்னும் இடத்தில், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கைத்தொழில் பகுதி, எண்ணெய்ச் செக்கு அமைத்து, நல்லெண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த எண்ணெய்ச் செக்குக்கு வேண்டிய எள் இந்த மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் ஏராளமாகக் கிடைப்பதனால், இத்திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தடைக் கற்கள்

சிறு கதை

குரும்பசிட்டியூரான்

அவள் என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டாள். அவளின் சின்னக்கருவிழிகள், நல்ல பசுந்தான அவள் முகம், அந்த முத்தான முகத் திற்கு அழகு கூட்ட வெள்ளிப் பிரேம் போட்ட கண்ணாடி, மிடுக்கான ஜீன்ஸ், இடுப்பிலே ஒரு பட்டை, இறுக்கமான சட்டை, 'பாப்' பண்ணிய தலை, தோளிலே தொங்கும் ஒரு ஏ. கே... உண்மையில் பெண்ணென்று நம்ப மறுக்கும் தோற்றம்! ஆரம்பத்திலே சில தடவைகள் நான் ஏமாந்து விட்டேன்.

"அக்கா... அக்கா... வாங்கோ அக்கா"

வீட்டுப் படலையடியில் யாரோ ஒரு பெண்ணின் குரல் கேட்கவே, விடியற்காலையில் உறக்கமும் விழிப்பும் சேர்ந்துவர, 'ஓ கானிக் கெமிஸ்றி'-யுடன் போராடிக்கொண்டிருந்த நான், படலையடிக்கு விரைந்தேன். அவள் தான்! அவளேதான்!! இவ்வளவு நாட்களாக நான் கதைக்க வேணுமெண்டு நான் ஆசைப்பட்டுக்கொண்டிருந்த, பெயர் தெரியாத அந்தப் பெண் போராளிதான், எனக்கெதிரே நின்று முறுவலித்தாள்.

இண்டைக்குக் கொஞ்சம் பூ வேணுமக்கா, படங்களுக்கு வைக்கவேணும். ஆஞ்சிடாமை மரத்திலை விட்டிடுங்கோ, பிறகுவந்து ஆயிறோம்".

நல்ல இனிமையான குரல்... செல்லமான சிணுங்கல். பாவம் இந்தக் கொட்டும் பனியிலும் இராணுவ வேலிகள் வழியே ஊர்ந்துவிட்டு வருகிறாளோ? அவள் ஒரு மெழுகுதிரியாக எரிந்து கொண்டிருக்கிறாள் என்ற உண்மை என் உள்ளத்தைச் சுட்டபோது, அவள் என்னில் உயர்ந்து நின்றாள். என் ஊரவர்களை நினைக்க எரிச்சல் எரிச்சலாக வந்தது. அரசடியிலும், அம்மன் கோவில் வீதியிலும் செம்பாட்டு மண்ணை அளைந்து விளையாடி, ஊர்ப்புழுதியில் குளித்ததெழும்பியவர்களில் பலர், நாடு நாடாக அகதி அந்தஸ்துக்கோரும் நிலையில்... எங்கள் ஊர் மண்ணில் தவழாதவர்கள் -இந்த மண்ணுக்காகத் தங்கள் உதிரத்தைச் சொரிவதற்கும், உயிரைக் கொடுப்பதற்கும் ஓடிவந்துகொண்டிருக்கும் நிலையை நினைக்க, நினைக்க நெஞ்சு வெடித்துவிடும் போல இருந்தது.

'சரக்... சரக்...'என்ற மிலிட்டரி மிடுக்குடன் நடந்து செல்லும் அந்த காவல் தெய்வங்களை பக்தி உணர்வுடன் பார்த்துக்கொண்டிருந்தேன்.

காலையில் தலையில் நாலு வாளி தண்ணீரை வாத்துவிட்டு, பூப்பறிப்பதற்காகக் கூடையுடன் வந்து நிற்கும் என்னுடைய அப்பாவைக்காண எனக்கு எரிச்சலாக இருந்தது. சிவப்பு ரோஜா ஒன்றின் காம்பை, முரட்டுத்தனமாக முறிக்க முற்பட்ட அவரை நான் தடுத்தேன்.

"அப்பா... இண்டைக்குப் பூப்பறிக்காதையுங்கோ".

அப்பா என்னை எரிச்சலுடன் பார்த்தார். சாதாரணமாகவே அவர் பார்வையில் கடுமை இருக்கும்.

"வீரமரணம் அடைந்த போராளிகளின் படங்களுக்குப் பூ வைக்க வேணுமாம்; காம்ப் அக்காமார் பூ வேணுமெண்டு வந்தவை" -வார்த்தைகளை விக்கி விக்கிச் சொன்னேன்.

"என்ரை அப்பன் முருகனுக்கு காலம் புறவிலை பூக்கூடையை நிரப்பாட்டா என்ரை நெஞ்சு நிறையாது" - சொல்லிக்கொண்டே அழகு சொட்டி நின்ற பூக்களை முரட்டுத்தனமாகப் பிடுங்கி எடுக்கத் தொடங்கிவிட்டார்.

என்னுடைய அப்பா ஒரு 'பிரின்சிப்பல்!'

உண்மையான தெய்வங்கள் யார் என்பது அவருக்கு இன்னும் விளங்கவில்லை.

"அப்பா... ஒரு நாலைஞ்சு பூவை யாவது விட்டுவையுங்கோ. சொல்லிப்போட்டுப் போனதுகள் நம்பி வருங்கள். இங்கை பூவுகள் இல்லாவிட்டா, அதுகளின்ரை முகங்களைப் பாக்கேலா... ப்ளீஸ்" -நான் மன்றாடுகிறேன்.

"படிக்கிற உனக்கென்னத்துக்கு அவையளோடை கதை".

அப்பா சீறிச், சினந்து வெடி சட்டுக் கொண்டிருந்தார். அவருடைய ஆக்கிரமிப்பு அதிகளவுக்குப் போய்விட்டது.

என்னுடைய அப்பா ஒரு பிரின்சிப்பல்...! சிரிப்பாக இருந்தது. ஏனென்றால் அப்பாவுக்காகவும் அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

அப்பா கோவிலுக்குப் போனபிறகு, தட்டத்தையும் எடுத்துக்கொண்டு தாரணி வீட்டிற்குச் சென்றேன். 'மலர்ந்திருந்த மலர்களெல்லாம் மரணித்தவர்களுக்காகவே' என்ற உணர்வில், பனியில் நனைந்து மொட்டவிழ்ந்து நின்ற மலர்களை, சிவப்பு ரோஜாக்களைப் பறித்தேன். தட்டுடன் விரைந்து வந்து அவர்களின் வருகைக்காக வீட்டில் காத்து நின்றேன்.

'சரக்... சரக்... சரக்...'

அவர்கள்தான், அவள்தான் முதலில்!

"நாங்க ஆய்வோம் தானே அக்கா, என்னத்துக்கு உங்களுக்கு சிரமம்?"

"நீங்க எங்களுக்காகப் படுகிற சிரமங்களிலும் இது எவ்வளவு எவ்வளவோ மடங்கு சின்னன்..."

பட்டம் பெற்றிருந்தும் எவ்வகையிலும் பொருத்தமில்லாமல், போராட்ட சூழ்நிலையிலிருந்து முற்றும் மாறுபட்ட நிலையில் உள்ள என் தந்தைக்குமாக, இந்த மண்ணுக்காக எந்த நிமிடமும் மரணிக்கத் தயாராக இருக்கின்ற இளம் குருத்துக்களைக் காணக்காண எனக்குக் கண்கள் கூசின.

"என்னக்கா யோசிக்கிறியள்?"

"ஒன்றுமில்லை".

"என்னக்கா படிக்கிறியள்?"

"ஏ. எல்."

"நானும் ஏ. எல். படிச்சு, 'பயோ சயன்சிலை' நாலு சீயும் எடுத்துப் போட்டுத்தான் இயக்கத்துக்கு வந்தனான்".



நான் திகைத்தேன். 'பயோ சயன்சிலை' நாலு 'சீ' எடுத்தவள், ஊண்டிப் படிச்சிருந்தா என்ன மாதிரி வந்திருப்பாள்... அவளில் அன்பு சுரந்தது.

"உங்களுக்கு என்ன பேர்?"

"தேவராணி... இயக்கப் பெயர் பாரதி".

"பாரதி என்ற பெயரிலை எனக்கு நல்ல விருப்பம்".

"எனக்கும் தான். பாரதியாரின் பாட்டுக்களெல்லாம் புரட்சியானவை. தேச விடுதலைக்காகவும், பெண் அடிமை நிலையை ஒழிக்கவும் வீறு கொண்டெழுந்தவர். என்ரை அப்பா தான் இந்த இயக்கப் பெயரை எனக்கு வைச்சவர்..."

எனக்கு அதிசயமாக இருந்தது. பாரதியின் அப்பாவையும் என்னுடைய அப்பாவையும் ஒப்பிட்டுப் பார்த்தேன்.

"பாரதி... நீ அதிர்ஸ்டக்காரி. சுதந்திரத்துக்காகப் போராடப் போறதுக்கு முதல் சுதந்திரமாச் சிந்திக்க மனசு வேணும்... உங்கடை அப்பாவும் அதிர்ஸ்டம் செய்தவர்".

"உண்மைதான். என்ரை அப்பா, அம்மா, அண்ணா எல்லாருமே போராட்டத்துக்கு ஏதோ வகையில் உதவிசெய்யினம். அண்ணா மெடிக்கல் கொலிச்சிலை இருக்கிறார். படிப்பு முடிஞ்சதும் இயக்கத்திலை இணைவார்.

"நீங்க குடும்பமா போராட்டத்திலை இறங்கியிருக்கிறியள். இப்பிடியான நிலை எல்லாம் இடமும் இல்லை".

"எல்லா வீடுகளும் முழுமையா ஆதரிக்கையுக்கைதான் எங்கடை போராட்டம் முழுமைபெறும்".

அவள் விடைபெறும்போது, அந்தச் சிவப்பு ரோஜாக்களின் அழகிலே மெய்மறந்தாள்.

"சிவப்பு ரோஜாக்களெண்டால், எனக்கு நல்லாய்ப் பிடிக்கும்".

ஒவ்வொரு நிமிடமும் மரணத்தை எதிர்நோக்கும் இவள் எப்படி இயல்பாக வாழ்கிறாள்? எனக்கு அவளைப் பார்க்க விசித்திரமாக இருந்தது.

நிறைய அவளிடம் கற்க வேணுமென்றிருந்தது.

என்னுடைய மனம் போர்க்களமாகி விட்டது.

* * *

அப்பா சாப்பிட்டுக்கொண்டிருந்தார். வெளியே சில மாணவர்களின் குரல்கள்போல இருந்தன. அவர் சினத்துக்கொண்டு, கைகளை அவசரமாகக் கழுவிவிட்டு, வெளியே சென்றார்.

வந்திருந்த அண்ணா ஒருவர், அப்பாவைக் கைகூப்பி வணங்கிவிட்டுச் சொன்னார்...

"பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி தொடர்பாக அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்து, பெரிய ஊர்வலமொன்றை மாணவர்கள் ஒன்று சேர்ந்து நடத்தப் போகிறோம். உங்கடை ஸ்கூலிலை உள்ள மாணவர்களையும் இதில் கலந்துகொள்ள அனுப்பவேணும். எங்கடை நோக்கம் வெற்றிபெற உங்கடை ஒத்துழைப்புத் தேவை" அந்த அண்ணா சொல்லி விட்டு, அப்பாவைப் பார்த்தார்.

"எங்கடை உரிமைகளுக்குக் குரல் கொடுக்கத்தான் வேண்டும். இல்லாட்டா அரசாங்கம் எங்களை இளிச்சவாயர்கள் எண்டு நினைச்சிடும். எங்கடை பிள்ளையள் எத்தினை எத்தினையோ மரணிச்சிட்டுதுகள். இவையெல்லாம் என்னத்துக்குச் செத்தினம் எண்டதை நினைச்சுப் பாக்கவேணும். முழு ஆதரவும் ஒத்துழைப்பும் நாங்கள் தருவோம்".

அப்பா இப்படிச் சொன்னதும் மகிழ்ச்சியுடன் அவர்கள் விடைபெற்றுச் சென்றார்கள்.

அவர்கள் சென்றபின் -

"அப்பா! நாளைக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு நானும் போகத்தானே வேணும்"?

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ உட்கட்டுமானம்

**எமது தேசிய விடுதலைப் போராட்டம் அளப்பெரும் தியாகங்களின் மத்தியில் முன்னெடுத்துச் செல்லப்படும் அதேவேளை, ஒரு தனியரசிற்கான பண்புகளுடன், மலர்ந்துவரும் தமிழீழத்தின் சமூக, பொருண்மிய, அரசியல் தேவைகளுக்கேற்ப, அதன் எதிர்கால உட்கட்டுமான அமைப்பை வடிவமைத்தல் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. இதற்கென யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், 8 குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவற்றினால் வழங்கப்படும் ஆலோசனைகள் தீர்மானங்களுக்கேற்ப, செயற்திறன் உடைய பெருந்திட்டம் ஒன்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பெருந்திட்டத்தை உருவாக்குவதற்கு முன்னோடியாக, வடிவமைக்கப்பட்ட தமிழீழ உட்கட்டுமான அமைப்பின், முக்கியமான அம்சங்களே இங்கு வெளியிடப்பட்டுள்ளன.**

சென்ற இதழ் தொடர்ச்சி

## தெருக்கள், புகையிரதப் பாதைகள், விமான நிலையங்கள்


### நோக்கம்:

தமிழீழத்தின் உட்கட்டுமானத்தின் முக்கிய பகுதியாகிய போக்குவரத்துக்குரிய பாதைகளான பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள், விமான நிலையங்கள் போன்றவற்றை நிர்ணயித்தல்.

### திட்டம்:

**1. பெருந்தெருக்கள்:**

அ. யாழ். நகரிலிருந்து பூநகரி, கிளிநொச்சி, மாங்குளம், திருகோணமலை, வாகரை, கரடியனாறு, கொக்கட்டிச்சோலை ஊடாகச் சம்மாந்துறை வரை, ஒரு மிகச்சிறந்த பெருந்தெரு (Super High -way) அமைக்கப்படவேண்டும் என விதந்துரைக்கப்படுகின்றது. இது யாழ்ப்பாணம், மாங்குளம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய முக்கிய நகரங்களுக்கான பயணிகள், பொருட்கள் (Containers) ஆகியவற்றின் போக்குவரத்தைச் சுலபமாக்கும்.




ஆ. மீன்பிடித் துறைமுகங்களுடனான தொடர்பு, பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு புத்தளத்திலிருந்து பூநகரி வரையும் யாழ். குடாநாட்டைச் சுற்றியும் பருத்தித்துறை, வெற்றிலைக்கேணி, கண்டாவளை, முல்லைத்தீவு, புல்மோட்டை, குச்சவெளி, திருகோணமலை, வாகரை, மட்டக்களப்பு, கல்முனை, பொக்குவிலி, குமண வரை கடற்கரைப் பாதை அமைக்கப்படல் வேண்டும் என்றும் விதந்துரைக்கப்பட்டது.

இ. மற்றைய தேவைகட்குத் தற்போது பாவனையில் உள்ள வீதிகளைச் செப்பனிட்டுத் தரமுயர்த்த வேண்டியவைகளைத் தரம் உயர்த்தினாற் போதுமென்று விதந்துரைக்கப்பட்டது.

ஈ. மாங்குளம், மன்னார்த் தொடர்பை ஏற்படுத்துவதற்கு மாங்குளம், வெள்ளாங்குளம் வீதி அமைக்கப்படவேண்டும்.

**2. புகையிரதப் பாதை:**

அ. வடதமிழீழத்தைப் பொறுத்தவரை, தற்போதைய பாதை வடதமிழீழத்திற்கு மத்தியிற் செல்வதால் அதை அப்படியே பாவிக்கமுடியும்.

ஆ. வவுனியாவிலிருந்து பறையனாலம் .குளம் வரை, ஒரு பாதை அமைத்து மன்னாருடன் இணைப்பை உண்டாக்கலாம்.

இ. வடதமிழீழத்தில் இருந்து தென்தமிழீழத்திற்கான இணைப்பை, மாங்குளத்தில் இருந்து மிகப்பெரு வீதி (Super High - way)க்குச் சமாந்தரமாக வாழைச்சேனை மட்டும் அமைத்து, அங்கு தற்போதைய பாதையை மட்டக்களப்பு வரையான பாதையுடன் இணைக்கலாம்.

**3. விமான நிலையங்கள்:**

அ. சர்வதேச விமான நிலையங்கள்:

பலாலி, திருகோணமலை ஆகிய இடங்களில் அமைக்கலாம் என விதைந்துரைக்கப்பட்டன.

ஆ. சிறிய விமான நிலையங்கள்:

மண்டைதீவு, மாங்குளம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் சிறிய விமான நிலையங்கள் அமைக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பு: பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள், விமான நிலையங்கள் குறிக்கப்பட்ட வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது.

## கடற்போக்குவரத்தும் துறைமுகங்களும்

கடற்போக்குவரத்து மூன்று தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன:-

1. பொதுசனப் போக்குவரத்து.
2. பொருட்கள் கொண்டுசெல்லல் -ஏற்றுமதி / இறக்குமதி
3. மீன்பிடி சம்பந்தப்பட்டது.

இவைகளில் பொதுசனப் போக்குவரத்திற்கும் பொருட்கள் கொண்டுசெல்வதற்கும் நெடுஞ்சாலைகளும், புகையிரதமும் பாவிக்கப்படுகின்றபடியால், கடற்போக்குவரத்து இவையிரண்டோடு இணைந்து அல்லது புறம்பாகவும் செயற்படலாம். மீன்பிடித்தொழில் சம்பந்தப்பட்ட போக்குவரத்து கடலிலும், ஆழ்கடலிலும் (சமுத்திரத்திலும்), ஏரியிலும் செய்யப்படுகின்றது.

**1. மீன்பிடித் துறைமுகங்கள்:**

மீன்பிடி இப்பகுதியின் மிகவும் முக்கியமான தொழில்முறை என்றபடியால், மீன்பிடித் துறைமுகங்கள் மிகவும் அத்தியாவசியமாகின்றன. தற்பொழுது மிகவும் கூடியளவு மீன்பிடித்தல் பின்வரும் இடங்களிலேயே மேற்கொள்ளப்படுகின்றன:

1. பண்ணை.
2. ஊர்காவற்றுறை.
3. மயிலிட்டி.
4. வல்வெட்டித்துறை.
5. பருத்தித்துறை.
6. வெற்றிலைக்கேணி.
7. கோகிராய்.
8. முல்லைத்தீவு.
9. திருகோணமலை.
10. வாழைச்சேனை.
11. மட்டக்களப்பு.
12. திருக்கோவில்.
13. வலைப்பாடு.
14. பேசாலை (மன்னார்).
15. கற்பிட்டி (முத்துக்குவிப்பு)

மேற்குறிப்பிட்ட இடங்களில் மீன்பிடித்தொழில் நடப்பதால், இவற்றிற்கு அருகாமையில் சில துறைமுகங்களை அமைப்பது நன்று. இப்படி அமைக்கும் துறைமுகங்களில், மீன்பிடி தொடர்பான தொழிற்சாலைகளையும் நிறுவுவது சிறப்பானது. உதாரணமாக வள்ளம் கட்டுதல், வலை பின்னுதல் போன்ற தொழிற்சாலைகளை அமைக்கலாம். மேலும் பனிக்கட்டி (ஐஸ்) தொழிற்சாலைகளும் குளிர்சாதன அறைகளும் சில துறைமுகங்களில் அமைப்பது அத்தியாவசியமாகின்றது. பனிக்கட்டித் தொழிற்சாலைகளைப் பின்வரும் இடங்களில் நிறுவலாம்:

1. யாழ்ப்பாணம்.
2. பருத்தித்துறை.
3. முல்லைத்தீவு.
4. புல்மோட்டை.
5. திருகோணமலை.
6. மட்டக்களப்பு.
7. களுவாஞ்சிக்குடி.
8. மன்னார்.
9. பொத்துவில்.
10. புத்தளம் / சிலாபம்.

இத்தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்கும் பனிக்கட்டிகளைப் பாவித்து, தற்காலிகமாக மீனைப் பழுதாகாமல், ஏற்றுமதி செய்யும் இடங்களுக்கு கொண்டுசெல்லக்கூடிய வசதிகள் ஏற்படுத்துவது அவசியம்.

குளிர்சாதன அறைகளும், கட்டடங்களும் பின்வரும் இடங்களில் அமைக்கலாம்:

1. திருகோணமலை.
2. முல்லைத்தீவு.
3. யாழ்ப்பாணம்.
4. மன்னார்.
5. புத்தளம்.
6. பொத்துவில்.

இக்குளிர்சாதன அறைகளில், மீன்பிடியில் கிடைக்கும் கடல் உற்பத்திகளைச் சேமித்துக் களஞ்சியப்படுத்தி, பழுதாகாமல் பாதுகாத்து, பதப்படுத்தி, ஏற்றுமதி செய்வதற்குவேண்டிய வசதிகளை ஏற்படுத்தல் வேண்டும்.

முன்கூறிய மீன்பிடி இடங்களில் எல்லாவற்றிலும் துறைமுகங்கள் என்று பெரிதாக ஏற்பாடுகள் செய்யத் தேவையில்லை. அவைகளில் சிலவற்றிலேயே, அதிலும் முக்கியமாக ஆழ்கடலில், சமுத்திரத்தில் மீன்பிடிக்கும் கலன்களை பாவிக்கும் இடங்களிலேயே துறைமுகங்கள் அமைப்பது தேவைப்படுகின்றது. இதன் பிரகாரம் பின்வரும் இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை அமைக்கலாம்:

1. மயிலிட்டி / பருத்தித்துறை.
2. திருகோணமலை.
3. முல்லைத்தீவு.
4. அறுகம்குடா.
5. கல்குடா.
6. மன்னார்.
7. கற்பிட்டி / புத்தளம்.

முல்லைத்தீவுத் துறைமுகம் மீன்பிடித் துறைமுகமாக அமையும் பொழுது, முல்லைத்தீவில் அமைக்கப்படும் யாழ். பல்கலைக்கழகத்தின் மீன்பிடிப்பீடம் பல ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு உதவியாகவும் இருக்கும். ஆகையினால், இத்துறைமுகம் பல வசதிகளைக்கொண்டதாக அமைக்கப்பட வேண்டும்.

**2. பொருட்கள் ஏற்றுமதி / இறக்குமதித் துறைமுகங்கள்:**

நாடு அபிவிருத்தியடையும் பொழுது பல மூலப்பொருட்களை இறக்குமதி செய்யவும், அதன் பின் தயாரிக்கப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் துறைமுகங்கள் இன்றியமையாதவையாகின்றன. மூலப்பொருட்களைத் தொழிற்சாலைக்குக் கொண்டுசெல்லவும், அங்கிருந்து தயாரித்த பொருட்களை வெளியேற்றவும் புகையிரதம், தரைப் போக்குவரத்தைப் பாவித்தாலும் ஈற்றில் இவைகளை துறைமுகங்களுக்கூடாகவே பிறநாடுகளுக்கு அனுப்பமுடியும். துறைமுகத்தில் பொருட்களை பெட்டிகளில் அடைத்துக்கொணர்ந்து, கப்பல்களில் ஏற்றுவது பழங்காலந்தொட்டு செய்யப்பட்டு முறை. ஆனால், இப்பொழுது நவீன முறையில், தயாரிக்கும் பொருட்களை தொழிற்சாலைகளிலேயே பெரிய கொள்கலன்களில் (Containters) அடைத்து, இக்கொள்கலன்கள் தரை மூலமாகவோ, புகையிரத வழியாகவோ துறைமுகங்களுக்கு எடுத்து செல்லப்படுகின்றன. ஆகையினால், துறைமுகங்களிலும் இவைகளைக் கப்பலில் ஏற்றுவதற்குவேண்டிய வசதிகள் இருப்பது அவசியம். இதற்கு நவீன முறையில் செய்யப்பட்ட பாரம்தூக்கிகள் (C-ranes) பாவிக்கப்படுகின்றன. இதன்வழி பொருட்கள் சிந்துப்படாமலும், பழுதடையாமலும், மிகவும் சுலபமாகவும் கப்பலில் ஏற்றப்படுகின்றன.

**2. 1 காங்கேசன்துறை, திருகோணமலைத் துறைமுகங்கள்:**

நாம் துறைமுகங்களை நிர்மாணிக்கும் பொழுது, இப்படிப்பட்ட கொள்கலன்களைப் பாவிக்கக்கூடிய ஒன்று அல்லது இரண்டு துறைமுகங்களையாவது நிர்மாணிக்க வேண்டும். இந்த நோக்கில் இப்பொழுதே ஓரளவுக்குப் பெரிதாக இயங்கிவரும் காங்கேசன்துறை, திருகோணமலைத் துறைமுகங்களை இப்படிப்பட்ட கொள்கலன்களை ஏற்றி இறக்கக்கூடிய வசதிகளுடன் விஸ்தரிப்பது உகந்தது.

தற்பொழுது காங்கேசன்துறை துறைமுகத்தில் 2,500 தொன் எடையுள்ள கப்பல்கள் வரக்கூடியதாக இரண்டு இறங்குதுறை

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ உட்கட்டுமானம்...

கள் இருக்கின்றன. இங்கு கடலில், 18 -22 அடிக்கு அமிழக் கூடிய (Craft) கப்பல்கள் கொண்டுவரலாம். திருகோணமலை இதைவிடப் பெரிய துறைமுகமாகவும் மிகவும் பாதுகாப்பான துறைமுகமாகவும் அமைந்திருக்கின்றது. திருகோணமலை ஓர் இயற்கைத் துறைமுகம். காங்கேசன்துறைத் துறைமுகத்தில் அலைச்சுவர்கள் (Embankment) கட்டித்தான் அதனூடாகத் துறைமுகம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வகைச் சுவர்கள் விரல்கள்போல் கடலில் நீண்டிருப்பதால், அலை மோதாமல் கப்பல்கள் பாதுகாப்பாகத் துறைமுகத்தில் நங்கூரமிடக்கூடியதாக இருக்கின்றது. காங்கேசன்துறையில் கட்டப்பட்ட 1. 75 கி. மீ. நீளமான அலைச்சுவர் இப்பொழுது பழுதடைந்து, 1. 25 கி. மீ. அளவிற்குக் குறைந்த விட்டது. இவ்விடங்களில் நீர் 45 அடி **ஆழமாக** இருக்கின்றது.

காங்கேசன்துறைத் துறைமுகத்தை மேலும் விருத்தியடையச் செய்வதற்கு, கூடிய பாதுகாப்புக் கொடுப்பதற்காகக் கூடியளவில் அலைச்சுவர்கள் கட்டப்பட வேண்டும். மற்றும் கூடிய ஏற்றுமதி / இறக்குமதிக்கு இவ்விரு துறைமுகங்களையும் பாவிப்பதற்குக் களஞ்சியப்படுத்துவதற்கு பலவிதமான கட்டங்களும் தேவைப்படும். இவைகளைவிட பலவிதமான உபவேலைகளுக்கும் வசதிகள் செய்யப்படல் வேண்டும். அவையாவன:

1. கப்பல்களிலிருந்து இறக்கும் துறைகள் (Jetty Quays).
2. கப்பல்கள் பழுதுபார்ப்பதற்கு விசேடமான இடம் (Dry dock)/
3. கப்பல்களின் இயந்திரங்கள், மின் உபகரணங்கள், தொடர்புச் சாதன உபகரணங்கள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள்.
4. துறைமுகத்தில் கப்பல்களைக்கொண்டு வழிகாட்டும் பகுதி.
5. கப்பல் குளிரூட்டும் சாதனங்கள் சம்பந்தமான தொழிற்சாலைகள்.
6. துறைமுக / கப்பல் தொடர்புசாதனப் பகுதி.
7. பொருட்கள், எரிபொருட்கள் களஞ்சியப்படுத்தும் சாலைகள்.
8. துறைமுகம், சூழல் பாதுகாக்கும் பகுதி.
9. குடிதண்ணீர் வசதிகள்.
10. துறைமுகம் ஆழமாக்கும் பகுதி.
11. சுகாதார வசதிகள்.
12. கிருமி தடுப்புப் பகுதிகள்.
13. கப்பலில் ஏற்றி / இறக்குவதற்கு வேண்டிய வள்ளங்கள்.
14. கரையோரப் பாதுகாப்பு.
15. கப்பல் உடைக்கும் தொழிற்சாலை.

### 2. 2 முல்லைத்தீவுத் துறைமுகம்:

கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தில், கப்பல் கட்டும் பாடங்களும், கப்பல் தொடர்பான பொறியியல் பாடங்களும் கற்பிப்பதற்காக ஒழுங்குகள் செய்யப்பட்டு இருப்பதால், இதற்கு முல்லைத்தீவுத் துறைமுகத்தை விருத்திசெய்து அதற்கேற்றவாறு வசதிகள் செய்வது அவசியம். இத்துறைமுகத்தோடு கப்பல் மாலுமிகள் பாடசாலையையும் ஸ்தாபித்து இயக்கவைத்தல் நன்று.

### 2. 3 அறுகம்குடாத் துறைமுகம்:


தற்பொழுது திருகோணமலையில், கடற்படைத்தளம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இத்துறைமுகம் மற்றைய தேவைகளுக்கென விரிவடையச் செய்யும் பொழுது, மேலும் ஒரு புதிய கடற்படைத்தளம் அமைக்கவேண்டிய தேவையேற்படலாம். இதற்கு, அறுகம்குடாத் துறைமுகத்தை உபயோகிக்கலாம். ஏற்கனவே இது மீன்பிடித் துறைமுகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான அலைச்சுவர்கள் போன்றவற்றைக் கட்டி, இக்குடாவை விசேடமான துறைமுகமாக விருத்தி செய்யலாம்.

### 2. 4 மன்னார்:

மன்னார்த் துறைமுகத்தில் ஆழம் மிகக்குறைவு. ஆகையினால், பெருங்கப்பல்கள் செல்லமுடியாது அடியில் கற்பாறைகள் இருக்கின்றன. இதனால்தான் முற்காலத்தில், மிகவும் பிரபல்யமாக இருந்த மாந்தைத் துறைமுகம் பாக்குநீரிணையில் ஆழம் காணாத காரணத்தால், பெருங் கப்பல்களால் பாவிக்கமுடியாது போய்விட்டது. எனினும், மன்னார் மீன்பிடித் துறைமுகமாகவும், மக்கள் போக்குவரத்திற்கு ஏதுவானதாகவும் விருத்தி செய்யப்படல் வேண்டும். பொருட்களை ஏற்றுமதி செய்வதானால், சிறுவள்ளங்களில் ஏற்றிக் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது.

### 2. 5 வெளிச்ச வீடுகள்:

மேற்கூறிய துறைமுகங்களைப் பாவிப்பதற்கு அனுகூலமாக இவைகளுக்கு அண்மையில் வெளிச்சவீடுகள் தேவையாகின்றன. அதிஸ்டவசமாக நாம் ஸ்தாபிக்கும் எல்லாத் துறைமுகங்களுக்கு அருகாமையிலும் தற்பொழுது இவைகள் இருக்கின்றன. இவைகளில் சில பாவிக்கப்படாமல் பழுதடைந்து இருப்பின், மீண்டும் இயக்கவேண்டியதற்குத் தேவையான ஆக்க வேலைகளைச் செய்யவேண்டும்.




### 3. ஏரிப்போக்குவரத்து:

தற்பொழுது கிளாலியினூடாக பொதுமக்கள் பயணஞ்செய்வது தெரிந்ததே. அதேபோல தென் பகுதியிலிருந்து வடபகுதிக்கும், வடபகுதியிலிருந்து தென்பகுதிக்கும் பொருட்களை யாழ். ஏரியினூடாகக் கொண்டுசெல்வது எமக்குத் தெரியும். இப்படிப்பட்ட போக்குவரத்தை நாம் மேலும் விருத்திசெய்யலாம். தென்பகுதியிலிருந்து ஏரியினூடாகக் கச்சாய், சாவகச்சேரி ஊடாகவும், பூநகரி சங்குப்பிட்டி ஏரிவாய் வழியாகவும் தீவுகளுக்கும், யாழ்ப்பாணத்திற்கும் போக்குவரத்தை அமைப்பது பயன்தருவதாக அமையும்.

### 4. கடற்பயணம்:

பொதுமக்கள் பயணம் செய்வதற்கு பல வழிகளில் ஒழுங்குகள் செய்யலாம். அவையாவன:

1. கப்பல் பயணம்.
2. அதிவேகக் கப்பல் (Hovercraft) பயணம்.
3. ஏரியூடாகப் பயணம்.

இதில் ஏரியூடாகச் செயற்படக்கூடிய பயணம் பற்றி முன்னமே கூறப்பட்டது. இப்பயணத்திற்கு வள்ளங்கள், இயந்திரமூட்டிய வள்ளங்கள் அல்லது அதிவேகக் கப்பல் **(Hovercraft)** பாவிக்கலாம்.

### 4. 1 அதிவேகக் கப்பல்:

இவை செயற்கை இறப்பரினால் செய்யப்பட்டவையாகவும், தரையிலும் தண்ணீரிலும் செல்லக் கூடிய தன்மையுள்ளவையாகவும், அமைந்திருக்கின்றன. கடலில் ஆழமில்லாத பிரதேசங்களில் இவைகள் மிகவும் பயன்படும். தற்பொழுது உலகில் பிரான்சுக்கும் இங்கிலாந்திற்கும் இடையிலும், சுமாத்திராவுக்கும் மலேசியாவில் பின்வாங்கிற் இடையிலும் நாளாந்தம் பாவிக்கப்படுகின்றன. இவைகள் டீசல் இயந்திரத்தினால் இயக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட அதிவேகக் கப்பல்களை தீவுப்பகுதிகளுக்கும் மன்னாருக்கும் இடையிலும் (ஆழம் இவ்விடங்களில் மிகவும் குறைவாகவும் தரைக்கற் **பாறைகளாகவும்** இருக்கின்றன.) கிழக்கில் கரையோரமாக பொத்துவில், அறுகம்குடா, கல்குடா, மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர், முல்லைத்தீவு போன்ற இடங்களுக்கும் பாவிக்கலாம். முன்கூறியபடி, யாழ். ஏரியூடாகவும் பயணம் செய்வதற்கு இவற்றைப் பாவிக்கலாம்.

### 4. 2 கப்பல் பிரயாணம்:

இவை ஆழ்கடலில்தான் பாவிக்கக்கூடியதாக இருக்கும். அதைவிட, கப்பல்கள் துறைமுகத்தில் பயணிகளை இறக்குவதற்குவேண்டிய இறங்குதுறை வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆகையினால், திருகோணமலையிலும் காங்கேசன்துறைமுகத்திலிருந்தும் கப்பல் பிரயாணம் செய்யக்கூடியதாக ஒழுங்குகள் செய்யலாம். சிறு கப்பல்கள் எங்களுடைய துறைமுகங்களுக்கு இடையில், அதாவது காங்கேசன்துறை, முல்லைத்தீவு, திருகோணமலை, அறுகம்குடா இடையிலும் சேவை செய்யலாம். காங்கேசன்துறை, திருகோணமலையிலிருந்து வெளிநாடுகளுக்கும் பயணச் சேவைகளை நாம் ஒழுங்கு செய்யலாம். அதற்குவேண்டிய சுங்க இலாகா (Customs) உட்புகு / வெளியேறு இலாகா (Immigration / Emigration) அலுவலகங்கள் இத்துறைமுகங்களில் செயற்படவேண்டும். ■

(தொடரும்...)

# தடைக்கற்கள்...

"ஊர்வலமும் மண்ணாங்கட்டியும்... உவைக்கு வேறை வேலை இல்லையோ?"

"ஆரேன் கத்தித்தர உரிமையை நாங்க அனுபவிக்கவேணும். இதென்ன நியாயமெண்டு நான் கேக்கிறேன்?"

"ஊர்வலத்திலை கொண்டுவந்து குண்டைப் போட்டுவிட்டாங்களெண்டா".

அப்பா ஒரு நச்சுப்பல்லி.

என் மனம் போர்க் களமாகிவிட்டது.

சென்றிப் பக்கமாக வெடிச் சத்தங்கள் கேட்கத் தொடங்கிவிட்டன.

பொழுது துயரத்துடன் விடிந்தது. சோககீதம் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. கண்களைக் கசக்கிக்கொண்டு வெளியே வந்தேன். போராளிகளின் வாகனங்கள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தன. சரக்... சரக்... சரக்... சத்தங்கள் எழுப்ப, பளபளக்கும் ஆயுதங்களுடன் சண்டைக்குப் போட்டு, பெண் போராளிகளும் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களிடையே என் பாரதியைத் தேடினேன். அகப்படவில்லை.

ஒலி பெருக்கியில் அவள் வீரமரணம் பற்றிய செய்தி ஒலிபரப்பப்பட்டபோது, நான் 'ஓ' என்று கதறிவிட்டேன். பாரதியின் வித்துடலைப் பார்க்க வேண்டுமென்ற உள்ளத்துடிப்புடன், காம்புக்குப் போவதற்கு முன் வீட்டிலே பூத்திருந்த சிவப்பு ரோஜாக்களை... அவள் ஆசையோடு நேசித்த அந்த ரோஜாக்களை... இன்றைய விடியலிலே அவளுக்காக மலர்ந்திருந்த அந்தப் பூக்களையெல்லாம் பறித்தேன்.

"நில்... எங்கே போறாய்?" அப்பாவின் சினத்த குரல்.

"அஞ்சலி செலுத்த".

"உனக்கென்ன விசர் பிடிச்சிட்டுதே?"

"விசரில்லை வெறி. ஆக்கிரமிப்புகளுக்கெதிராக நாட்டிலை மாத்திரமல்ல, வீட்டுக்குள்ளேயும் போராட வேணுமெண்ட வெறிதான் எனக்குப் பிடிச்சிருக்கு".

"உளறாதை உள்ளை போ... நான் சொல்லிறதைக் கேள்..."

"எனக்கொண்டும் சொல்ல வேண்டாம். உங்கடை கதையளைக் கேட்கிற நிலையில் நான் இல்லை... உங்களைப் போலை ஆக்கள்தான் போராட்டங்களுக்கெல்லாம் தடைக்கற்கள்... போராட்டத்தைப் பின்னடையச் செய்யிற ஒவ்வொருத்தரும் எதிரிகள்தான்".

"இந்தளவைப் படிச்சுப்போட்டு சோதினை எடுக்கிற நேரத்திலை என்னடி உழறுறாய்?"

"நோட்ஸ் எல்லாம் பத்திரமாக் கிடக்கு. உயிர் இருந்தா திரும்பி வந்து படிப்பேன்...". ■

# பிரேமா காலத்திலிருந்தே ஐ.தே.க.வுக்குள் ஊழல்

☐ பிரித்தானிய பொருளாதார புலனாய்வு சேவை அறிக்கை

கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்ற போதும், நிறுவனங்களை மக்கள் மயப்படுத்துகின்ற போதும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் காலத்திலிருந்தே ஊழல்கள் நிலவி வருவதாகவும், ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா காலத்தில் ஊழல்கள் தொடர்வதாகவும், பிரித்தானிய பொருளாதார விஞ்ஞானிகளின் புலனாய்வு சேவையினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரம் வெளியிடுகையில் அதிகாரிகள் பெரியளவில் இலஞ்சம் பெறுகின்றனர். கொழும்பிலுள்ள யேர்மன் தூதுவராலயத்திலும், கனடிய, அவுஸ்திரேலிய அரச மட்டங்களிலும் சிறீலங்கா அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகள் கவலையைத் தோற்றுவித்துள்ளன என கூறப்படுகின்றது. ■

# "பெரும்பான்மையினரிடம் இனவாதம் இருக்கும்வரை இனப்பிரச்சினை தீராது"

☐ அமைச்சர் தயாரட்ணா தெரிவிப்பு

"உணவு முத்திரை பெறுபவர்களிற்கு நானூறு கோடி ரூபாவைச் செலவிடும் அரசு, வடக்கு -கிழக்கு யுத்தத்திற்கு மட்டும் 2,-000 கோடி ரூபாவைச் செலவிடுகின்றது. எந்தவொரு அரசும் இவ்வளவு பெரிய தொகையை யுத்தத்திற்காகச் செலவிட விரும்புவதில்லை. எனினும், பெரும்பான்மை இனத்தவரிடம் இருக்கும் இனவாதம் மாறாதவரை, இந்நாட்டின் இனப்பிரச்சினை தீரப்போவதில்லை" இவ்வாறு புனர்வாழ்வு, புனர்நிர்மாண, சமூக சேவைகள் அமைச்சர் பி. தயாரட்ணா தெரிவித்தார்.

இரத்தினபுரி நகர மணிக்கூட்டுக் கோபுரத்தருகே நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய அவர், மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கு - கிழக்கு யுத்தத்தால், பெரும்பாலும் கிழக்கு மாகாண மக்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்தத்தின் கோரத்தன்மையை, கிழக்கு மாகாண மக்களைவிட வேறு எவருமே அறிந்திருக்க முடியாது. யுத்தத்தால் அந்த மாகாண மக்கள் அனுபவித்து வரும் வேதனையை -துயரத்தை தென்மாகாண மக்கள் அறிந்திருக்க முடியாது. தென் மாகாண மக்களுக்கோ அல்லது உங்களுக்கோ அது தொடர்பான கரிசனையோ, அக்கறையோ கிடையாது" எனவும் தெரிவித்தார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# நாங்கள் என்ன செய்ய?

மலருமுன் சருகாகும் கறுப்பு மலரே!
மரணத்தின் வாசலில் நீ தள்ளாடுகின்றாய்.
மனுக்குலத்தின் மனச்சாட்சி
உன்முன் ஊமையாகிவிட்டது.
குனிந்து மண்ணில் என்ன செய்கின்றாய்.
அட; தாயகத்துக்கு கடைசி முத்தமா?
திரும்பிப் பார்.
உன் இறுதி மூச்சை எதிர்பார்த்து
பின்னால் ஒரு பிணம் தின்னி.
'வளர்ந்து வரும் நாடும்' 'வல்லரசும்'
நல்ல குறியீடு.
உன்னை எடுத்துப் புதைக்கக்கூட
எவருமே இல்லையா?

தின்னக் கழுகுதானே காத்திருக்கிறது.
உன் தாயகத்துக்கு ஏன் இப்படி ஆச்சு?
நாங்களும்தான் போராடுகின்றோம்.
நலியவில்லையே.
பட்டினிக்குப் பணியவில்லையே.
என்ன செய்வது.
கறுப்பு நாட்டில்
ஒரு பிரபாகரன் பிறக்கவில்லையே
சின்ன மலரே!
நாங்கள் என்ன செய்ய?

- புதுவை இரத்தினதுரை
நன்றி: 'விடுதலைப் புலிகள்'



பட்டினியால் இறக்குந்தறுவாயில் ஒரு சூடானியக் குழந்தை


தமிழர் கலை பண்பாட்டுக் கழக யேர்மன்கிளை
நடாத்தும்
## திலீபன் நினைவுப் போட்டிகள்

உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் நீர்கூட அருந்தாது அகிம்சை வழிப் போர் செய்து உயிர் துறந்த முதல் மனிதனான தியாகி திலீபனை நினைவுகூருமுகமாக:-

கவிதை - கட்டுரை
பேச்சுப் போட்டிகளை
தமிழர் பண்பாட்டுக் கழக யேர்மன் கிளையினர் நடாத்த உள்ளனர்.

போட்டிகளுக்கான விபரங்கள் - விதிமுறைகள் - விண்ணப்பப் படிவங்கள் தொடர்பான தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலை பேசி இல:

**05523 / 8608**

விண்ணப்பம் செய்வதற்கான இறுதித் திகதி:

**01-09-1994.**


# செஞ்சோலைக் கலைமாலை

தமிழீழ 'செஞ்சோலை' குழந்தைகளுக்கு உதவும் முகமாக, பலெர்மோ -இத்தாலியில் 24-7-94 ஞாயிற்றுக் கிழமையன்று, 'தியேட்டர் டாந்தே' அரங்கத்தில் செஞ்சோலைக் கலைமாலை நடைபெற்றது. இத்தினத்தில் கறுப்பு யூலை 23 திகதியும் நினைவுகூரப்பட்டது. மேற்படி கலைமாலையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

மாலை 6.15 மணிக்கு மங்கள விளக்கேற்றல் திலீபன் கல்வி நிலைய மாணவிகளின் வணக்க நடனத்துடன் ஆரம்பித்தது. இத்தாலியில் தற்போது வளர்ந்து வரும் இசைக்குழுவினரான 'யூனியேர்ஸ்' இசைக் குழுவினரின் தளிர் இசைத் தாலாட்டில் தமிழீழத்தின் புரட்சித் தெரிவுப் பாடல்களை தத்ரூபமாக இசைத்து மக்களின் பாராட்டுக்களைப் பெற்றனர்.



'சின்னச் சின்ன ரோஜாக்கள்' என்ற பாடலுக்கு அபிநயம்

நாட்டிய ஆசிரியை திருமதி. பாலசிறீ அவர்களின் பயிற்சியில் 2வது லெப். மாலதி கலைப்பள்ளி மாணவிகளும், திலீபன் கல்வி நிலைய மாணவிகளும் இணைந்து புரட்சிப் பாடல்களுக்கான அபிநயம் வழங்கினர். தமிழீழத்தில் 75 தடவைக்கு மேலாக மேடையேறிய 'வீழ்ந்தவர்கள் அல்ல -விதைக்கப்பட்டவர்கள்' எனும் நாட்டிய நாடகமும் இவர்களால் நடத்தப்பட்டது. குழந்தைகளும் பெரியவர்களுமாக இதில் கலந்து நடித்தனர். பார்வையாளர்களின் பலத்த கரகோசத்தைப் பெற்று எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தனர்.




'குற்றவாளி' என்ற நாடகத்தில் நீதிமன்றக் காட்சி ஒன்று

'வீழ்ந்தவர்கள் அல்ல விதைக்கப்பட்டவர்கள்' என்ற நாட்டிய நாடகத்தையும், அபிநய நடனத்தையும் பயிற்றுவித்தமைக்காக நாட்டிய ஆசிரியை திருமதி. பாலசிறி அவர்களுக்கு விடுதலைப் புலிகளின் இத்தாலிக் கிளைப் பொறுப்பாளர் பரிசு கொடுத்துக் கௌரவித்தார். அத்துடன் இலண்டன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கலந்துகொண்ட வீரர்கள் பரிசு கொடுத்து கௌரவிக்கப்பட்டனர்.

இறுதியாக குருநகர் 'பாடுமீன்' விளையாட்டுக் கழகத்தினரின் 'குற்றவாளிகள்' என்ற நாடகம் நடைபெற்றது. உலக நீதிமன்றத்துக்கு முன்னால் தமிழீழத் தாயின் வழக்குத் தாக்கல். குற்றவாளிகளாக போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் இந்தியரும் சிறீலங்காவினரும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டனர். விடுதலைப் புலிப் போராளிகள் தமிழீழத் தாயின் துயர் துடைக்கப் புறப்பட்டு விட்டோம்; தமிழீழம் காண்போம்; தமிழ்த் தாயின் கண்ணீரைத் துடைக்க தம்மால் முடியும் என்பதை உலக நீதிமன்றத்துக்கு உணர்த்தினர்.

இக்கலைமாலையில் கலந்துகொண்ட குழந்தைகள் பெரியவர்கள் அனைவரும் இரவு நீண்டநேரமாகியும் இறுதிவரை இருந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. ■



'செஞ்சோலைக் கலைமாலை' காணவந்த மக்களில் ஒருபகுதியினர்.

# சுவிசில் நடைபெற்ற ஊர்வலம்

சுவிசில் தஞ்சமடைந்துள்ள தமிழ் அகதிகளை நாடுகடத்தும் சுவிஸ் அரசின் முயற்சிக்கு எதிராக, 14. 07. 1994 அன்று **Fluh** என்னும் இடத்தில் இருந்து **Mariastein** தேவாலயம் வரை நடாத்தப்பட்ட ஊர்வலத்தில் பல நூற்றுக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். ■




கண்டன ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமலையில் 10 இலட்சம் பேரைக் குடியேற்ற ஐ.தே.கட்சி திட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியினர் திருகோணமலை மாவட்டத்தில் பத்து இலட்சம் பேரைக் குடியேற்றுவதற்கான திட்டமொன்றை வகுத்து வருகின்றனர். இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சருள் ஒருவரான காமினி திசநாயக்கா அண்மையில் வெளியிட்டுள்ளார்.

திருமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் சனத்தொகை விகிதாசாரத்தை சிறீலங்கா அரசாங்கம் மாற்றியமைத்து வருவதை அனைவரும் அறிவர். 1948 இல் முழுத்தமிழ்த் தொகுதியாக இருந்த திருமலை மாவட்டத்தில், சேருவாவல என்ற சிங்களத் தொகுதி ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதுடன் திருமலை நகரத்தொகுதியிலும் அரைவாசியாக சிங்களவரின் சனத்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. ■

# சிறீலங்காவின்...

யும், அதிகாரப் பரவலாக்கல் கோசங்களையும் எழுப்பி வருகின்றது.

ஆயினும் இம்முறை சிறீலங்காத் தேர்தல் களத்தில், 'தமிழர் தாயகம்' என்ற பேச்சு கடுமையாக விமர்சிக்கப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

## இறுதித் தேர்தல்

சிறீலங்கா அரசாங்கம் தமிழீழப் பிரதேசத்தில் தனது இறைமையை இழந்துவிட்ட உண்மையை, சிறீலங்கா அரசாங்கத்தின் தேர்தல் களத்துப் 'பேச்சுக்கள் மூலம் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

சிங்களக் கட்சிகளுள் ஒன்றான மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான தினேஸ் குணவர்த்தனா, "சிறீலங்காவில் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் நடைபெறும் இறுதித் தேர்தல் இதுவே" எனப் பகிரங்கமாகக் கூறியுள்ளார். அத்துடன், "மக்கள் ஐக்கிய முன்னணியைத் தெரிவு செய்தால் மட்டுமே, ஐக்கிய இலங்கை தொடரும் என்று கூறி" பச்சை வகுப்புவாதத்தையும் கக்கியுள்ளார்.

"மாகாணங்களின் எல்லைகள் மீளமைக்கப்படுவதன் மூலம், வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காண முயல்வோம்" என்கின்ற பொதுசன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனக் கருத்தின் மூலம், பொருத்தமற்ற எல்லைப் பிரிப்பே தமிழீழப் பிரச்சினையின் மூலவேர் என்ற உண்மை வெளியிடப்பட்டுள்ளது.

காலனித்துவ பிரித்தானிய அரசாங்கம், 1833 இல் கோல்புறூக்-கமரன் சீர்திருத்தத்தின் மூலம், தமிழருடைய அரசுக்களின் எல்லைகளையும் சிங்கள அரசுக்களின் எல்லைகளையும் ஒன்றாக்கியமையே பிரச்சினையின் மூலவேர் ஆகும். எனவே, சிறீலங்காவில் சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் பிரச்சினைதான் உள்ளது என்ற மாயைநிலை மாறி, இப்பொழுது எல்லைப் பிரச்சினைதான் உண்டு என்பது ஏற்கப்பட்டுள்ளது.

எனவே இதற்கு உண்மையாகவே தீர்வு காண்பதானால், ஒற்றையாட்சி அமைப்பு முறைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டே ஆகவேண்டும் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

எவ்வகையில் பார்த்தாலும் தினேஸ் குணவர்த்தனா கூறுவதுபோல், ஐக்கிய இலங்கையின் கீழ் நடக்கும் இறுதித் தேர்தல் இதுவே என சிங்களக் கட்சிகளும் அரசியல் விமர்சகர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். இதனை உறுதி செய்யுமாற்போல், தமிழீழத்திற்கு வெளியே வாழும் இடம்பெயர்ந்த தமிழர்களும் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்க மறுத்து, தமிழர்கள் புலிகளின் ஆயுதக் கட்டுப்பாட்டால் அல்ல, சுயவிழிப்புணர்வுடனேயே தேர்தலைப் புறக்கணிக்கின்றனர் என்பதை உறுதி செய்துள்ளார்.

19,000 இடம் பெயர்ந்தோர் வாக்களிக்க அனுமதி கோரியிருப்பதாக சிறீலங்கா அரசு அறிவித்தபோதிலும், இவர்களில் கணிசமானோர் முஸ்லீம்கள் எனவும் கூறியுள்ளது. அத்துடன், சிங்கள அரசின் அடிவருடிகளாக சிறீலங்கா இராணுவத்துடன் பவனிவரும் தமிழ்க்குழுக்களைச் சேர்ந்தோரையும் சிறீலங்கா, இடம்பெயர்ந்தோர் தொகைக்குள்ளேயே அடக்கியுள்ளது. இவைகளை எல்லாம் எடுத்து நோக்குகையில், இடம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு வீதமானோர்கூட தேர்தலில் அக்கறை காட்டவில்லை என்ற உண்மை புலனாகின்றது. அதேநேரத்தில், ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தால், சிறீலங்கா இராணுவத்தினருக்கு காணிகள், வீடுகள் என்பன வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. இவ்வாக்குறுதி ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. நீண்ட கால யுத்தத்தில் சிறீலங்கா அரசாங்கத்தால் பலவந்தமாக ஈடுபடுத்தப்பட்டு, பெரும் அழிவுகளைச் சந்தித்துவரும் சிறீலங்கா பாதுகாப்புப் படைகளின் நெருங்கிய உறவினர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள மனச்சலிப்பை சமாளிப்பதற்காகவே, இத்தகைய வாக்குறுதிகளை ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக் கொண்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

வழமை போலவே பௌத்த அமுக்கக் குழுக்களின் சர்வாதிகார நடவடிக்கைகளை சிறீலங்காவின் அரசியலில் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. கட்சி உடன்பாடுகளைச் செய்வதில்கூட, நேரடியாகத் தலையிடும் பௌத்த மகா சங்கத்தினரை கட்சித் தலைவர்கள் சந்தித்து, விளக்கமளித்து 'சாந்தி' செய்யவேண்டிய பரிதாப நிலை தென்னிலங்கை அரசியலை ஆட்டிப்படைக்கின்றது.

பொதுசன ஐக்கிய முன்னணியுடன் தேர்தல் உடன்பாடு செய்துகொண்ட முஸ்லீம் காங்கிரஸ், தாம் என்ன உடன்பாடு செய்தனர் என அஸ்கிரிய மகா நாயக்க தேரோவைச் சந்தித்து விளக்கமளித்துள்ளதுடன், மகா சங்கத்திற்கும் பௌத்தத்திற்கும் எதிராக நடக்க மாட்டோம் எனவும்; நாட்டைப் பிளவுபடுத்த முயல மாட்டோம் எனவும்; அஸ்கிரிய மகா நாயக்க தேரோவுக்கு உறுதிமொழியும் அளித்துள்ளனர்.

சிங்களவர்கள் மட்டுமல்ல, தற்பொழுது முஸ்லீம்களும் மகா சங்கத்தினரின் காலில் விழுந்து அனுமதி பெற்றே அரசியல் நடாத்தவேண்டிய அவல நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இச்சம்பவமானது, எவ்வளவு தூரத்திற்கு பௌத்த அமுக்கக், குழுக்கள் சிறீலங்காவின் அரசியலைத் தமது மத வெறிக்கு ஏற்ற ஊடகமாக பயன்படுத்துகின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன், "பிறமதக் கோவில்கள், ஆலயங்கள், பள்ளிவாசல்கள் போன்றவற்றை சிங்களப் பகுதிகளில் கட்டுவதை தடை செய்யும்படியும்; மிசனரிமாரை அனுமதிக்கக் கூடாது எனவும் பௌத்த சங்கங்கள் சிறீலங்கா ஜனாதிபதி விஜேதுங்காவிடம் வற்புறுத்திக் கேட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. ■

# போர்த்துக்கல்லில்...

நகருக்கு ஐரோப்பிய சமூக உதவி வழங்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட என வந்திருந்த சிறீலங்காவின் வெளிநாட்டமைச்சர் ஏ. சி. எஸ். கமீட், போர்த்துக்கல் வெளிநாட்டமைச்சருடன் வரலாற்று ஆவணங்களை மீளப் பெறுவது குறித்து பேச்சு வார்த்தை நடத்தியதாகத் தெரிய வருகிறது.

சிறீலங்காப் பாராளுமன்றத்தில் வைத்து, தன்னை முஸ்லீம் என்பதற்காக இனஒதுக்கல் செய்வதாக வர்ணித்த ஏ. சி. எஸ். கமீட், இந்த விஜயத்தின்போது தான் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் விடுத்த அறிக்கைக்கு முற்றிலும் முரணான வகையில், சிறீலங்கா சார்பாக சிறீலங்கா அரசாங்கம் நடாத்திவரும் தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு வக்காலத்து வாங்கியதாகவும் தெரிய வருகிறது.

ஐரோப்பிய சமூக அமைச்சரவையின் தற்போதைய தலைவரான யேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் கௌவுஸ்தின், பிரித்தானியாவின் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் கார்ட், ஸ்பெயினின் வெளிவிவகார அமைச்சர் ஜாலியா செலானா டொரிக், நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் கொய்ஜ்மன்ஸ் ஆகியவர்களுடன் இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்குப் பிரச்சினை பற்றி கமீட் எடுத்து விளக்கியுள்ளதாக அறியப்படுகிறது. அத்துடன் ஐரோப்பிய சமூக ஆணைக்குழுவின் அரசியல் வெளிவிவகார உறவுக்கான ஆணையாளர் கான்ஸ் வான்டென் டிரேக்குடன், கமீட் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

இதுஒருபுறம் இருக்க சிறீலங்கா அரசாங்கம் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களினூடாக, வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் தமிழீழத்தில் சிறீலங்காவால் இனஅழிப்புக்கு உள்ளாக்கப்படும் தம் சகோதரர்களுக்கு குரல் கொடுப்பதை நசுக்கும் சதி முயற்சிகளில் ஈடுபட்டு வருவது அம்பலத்துக்கு வந்துள்ளது.

வெளிநாடுகளில் உள்ள சிறீலங்கா வழக்கறிஞர் சங்கம், ஐக்கிய இராச்சியத்திலுள்ள சிறீலங்கா மக்களின் சங்கம், சிறீலங்கா நலன்புரிச் சங்கம், தென் கிழக்கு இலண்டன் சிறீலங்கா மக்கள் சங்கம், இலண்டன் கலாச்சார வட்டம், வடமேற்கு ஐக்கிய இராச்சிய சிறீலங்கா மக்கள் சங்கம், சிறீலங்கா புலம்பெயர்ந்தோர் சங்கம், சத்சரண பவுண்டேசன், சிறீலங்காவின் கிராமியச் சுற்றாடல் பாதுகாப்பு நம்பிக்கை நிதியம், சிங்கள பாதுகாப்புப் பேரவை போன்ற அமைப்புக்களின் பேரில், இலண்டனில் புலம் பெயர்ந்த தமிழர்கள் நடாத்த முற்பட்ட ஜனநாயக ரீதியிலான பல எதிர்ப்புக் கூட்டங்களை, பல பொய்யான தகவல்களை இதில் கலந்து கொள்ளும் பாராளுமன்ற மற்றும் முக்கிய ஐரோப்பிய பேச்சாளர்களுக்கு அனுப்புவதன் மூலம் தடுத்து நிறுத்தியுள்ளது.

ஆயினும் சிறீலங்காவின் வெளிநாட்டு அமைச்சரும், சிறீலங்காவின் தூதரகங்களும் எத்தனை முயற்சிகள் எடுத்தபோதிலும், சர்வதேச ரீதியில் தமிழீழ மக்களுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு பெருகி வருவதைக் காணக்கூடியதாகவே உள்ளது. ■

# பண்டத்தரிப்பில்...

வவுனியா, மன்னார் காட்டுப் பகுதியிலும் இராணுவத்தினர் தரைநகர்வு முயற்சிகளில் இறங்கி, விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலுக்கு எதிர்நிற்க முடியாது பின்வாங்கியுள்ளதாக வவுனியாவில் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சிறீலங்காவின் தேர்தலைக் கண்காணிக்கவென, சர்வதேச பார்வையாளர்கள் சிலரைத் தருவிக்க இருப்பதாகவும், ஆனால் இவர்கள் யாழ். குடாநாட்டுக்குச் செல்ல சிறீலங்கா அனுமதிக்காது என அறிவித்துள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த சர்வதேச பார்வையாளர்களுக்கு குடாநாட்டில் பதற்றம் நிலவுகிறது எனக் காட்டுவதற்காகவே, சிறீலங்கா வேண்டுமென்று அமைதியுடன் உள்ள விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட பிரதேசங்கள் மீது, தாக்குதல்களை பரவலாக நடத்தத் தொடங்கியுள்ளதாக அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் எனக் கூறப்படும் மீட்கப்பட்ட பிரதேசங்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளும் சிறீலங்கா, விடுதலைப் புலிகளை பதில் தாக்குதலில் ஈடுபடுமாறு நிர்ப்பந்தத்தை உருவாக்கிவிட்டு, பின்னர் விடுதலைப் புலிகள் சிறீலங்காவின் தேர்தலை ஒட்டி, குழப்பமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கின்றனர் என உலகிற்கு பிரச்சாரம் செய்வதும், இத்தாக்குதல் முஸ்தீபுகளின் மற்றொரு நோக்கு எனவும் சிறீலங்கா விடயங்களை அவதானிக்கும் அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். ■

# தமிழீழத்தின்...

நிர்வாகம் உள்ளதா இல்லையா என்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு இந்த நீதிமன்றத்துக்கு இல்லை. வேண்டுமானால் வெளிநாட்டில் போய்ப் பேசலாம்" எனக் கூறியுள்ளார்.

இதன் மூலம் சிறீலங்கா நீதிபதி குலதுங்க, தமிழீழப் பிரதேசத்தை சிறீலங்காவின் நீதிபரிபாலனதுக்கு அப்பாற்பட்ட பிரதேசமாக அதாவது, பிறிதொரு நாடாகக் கருதி அந்நாட்டின் பிரச்சினையை வெளிநாடுகளில் அதாவது, சர்வதேச நீதிமன்றங்களிலேயே தீர்க்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்காது நிராகரித்ததன் மூலம், சிறீலங்கா உயர்நீதிமன்றம் தனக்கு தமிழீழ மக்களைப் பற்றிய விடயங்களை விசாரிக்கக் கூடிய நியாயாதிக்கத்துவம் இல்லை என்பதையும் வெளிப்படுத்திக் கொண்டதுடன், 'வெளிநாடுகளில் பேசலாம்' என்பதன் மூலம் தமிழர் பிரச்சினை (Tamils Question) யை சிறீலங்கா நீதிமன்றம் சர்வதேச நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்திவிட்டது. இதன் மூலம் உருவாகிவிட்ட தமிழீழம், சர்வதேச அங்கீகாரத்தையே நாடி நிற்கிறது என்ற அரசியல் யதார்த்தம் சிறீலங்கா நீதிமன்றத்தாலும் தெளிவுபடுத்தப்பட்டு விட்டது. ■

# அமைதிக்கு...

தலையிட வேண்டும் என்கிறார். அவரது வார்த்தையில் கூறுவதானால், அமெரிக்க சிந்தனை என்பது பின்வருமாறுதான் அமைகிறது: "அமெரிக்கர்கட்கு எப்போதும் இரண்டாவது இடத்தில் இருக்கவோ அல்லது சமமானவரிடையே முதலாவது இடத்தை வகிப்பதோ முடியாது, தெரியாது. இரண்டாவது உலகப் போரின் பின் உலகின் சுதந்திர நாடுகளின் தலைவனாகச் செயற்பட்டு திமிருடன் இருந்த அமெரிக்காவுக்கு வேறு எந்தத் தெரிவும் பொருத்தமற்றது. இரண்டாம் இடம் என்பதற்கு இடமேயில்லை. தொடர்ந்தும் அமெரிக்கா தலைமை தாங்க வேண்டுமானால் அத்தகைய முடிவுக்கு மீண்டும் வரவேண்டும். வந்த பின் அதற்கு ஏற்ப தீர்க்கமான முடிவுகளை எடுத்து அவற்றை நடைமுறையில் இட வேண்டும்." இதுவே தனது மரணப்படுக்கையில் இருந்து அமெரிக்க ஆட்சியாளர்களுக்கு நிக்சன் கூறிய அறிவுரையாகும்.

### சீனாவின் உறவும் அமெரிக்காவுக்கு முக்கியமானது

1968 - 1974 இடையில் **சனாதிபதியாக** பதவி வகித்த நிக்சன் தனது காலத்தின் பதிவுகளை அடியொற்றி சில அரசியல் பாடங்களை முன் வைக்கிறார். தனது பதவிக் காலத்திலேயே சீனாவுடனான புதிய உறவினை ஆரம்பித்த நிக்சன், **சீனாவுடனான** உறவே மிகப் பிரதானம் என்கிறார். தற்போது கிளின்டன் இவ்வுறவினைச் சரியாகக் கையாளவில்லை என்றும் எதிர்காலத்தில் சீனாவைப் புறக்கணித்தால் விளைவுகள் அமெரிக்காவுக்கே பெரும் பாதகம் என்றும், அடுத்த நூற்றாண்டின் மிகப் பெரிய முதலாளியமாக சீனாவே விளங்கும் என்கிறார். சீனத் தலைவர் மாவோ உடனான தனது உறவுகளை நினைகூரும் அவர், "1976 மாசியில் மாவோவைக் கடைசியாக சந்தித்தபோது இருநாடுகளும் உலக அமைதிக்காக ஒன்றுபட்டு முயலவேண்டும் என்றபோது, நான் எதிர்பாராத வகையில் அமைதி மட்டும்தானா உமது இலக்கு எனக் கேட்டு தன்னை திக்குமுக்காடச் செய்தார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ருஸ்ய உறவுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் அவர், யெல்சினின் போக்கை ஆதரித்தாலும் மேற்குலகம் யெல்சினோடு மட்டும் நின்றுவிடாது ருஸ்யாவில் உருவாகும் புதிய தலைமையைக் கவனத்தில் எடுத்து அவர்களோடும் தொடர்புகளைப் பேண வேண்டும் என்கிறார். ஏனென்றால் மறுபடியும் ருஸ்யா வலிமையுடன் மேலெழும் என அவர் கருதுகிறார். அத்தோடு இசுலாமிய உலகம் பற்றியும் நிக்சன் கருத்து வெளியிடுகிறார். பொசுனிய முஸ்லீம்கள் விடயத்தை சரிவரக் கையாளாவிட்டால், ஒரு பண்பாட்டு மோதலுக்கு மேற்குலகம் இசுலாமிய உலகோடு மோத வழிவகுத்துவிடும் என்றும், பாதிக்கப்பட்ட இசுலாமிய நாடுகள் குறித்து கவனமாகச் செயற்பட வேண்டும் என்றும் பொசுனிய முசுலீம்கள் சேர்பிய கிறிஸ்தவர் மோதல்கள் -முசுலீம் அசர்பையான் -கிறிஸ்தவ ஆர்மீனிய மோதல்கள், லெபனான் மோதல்கள், தஜிகித்தான் மோதல்களைச் சுட்டிக்காட்டி, இவற்றினை சரிவரக் கையாளாவிட்டால் ஏற்படும் விளைவுகள் பாதகமாகும், முன்னர்போல இருபாண்பாட்டுக் குழும மோதலாகிவிடும் என எச்சரிக்கிறார்.

நிக்சனின் இப்புதிய கூற்றானது, நிச்சயமாக பலத்த விவாதத்தை உலகெங்கும் கிளப்பப் போகிறது. அமெரிக்க மேலாண்மை அதனால் பனிப்போர் காலத்தில் விளைந்த தீர்வுகள், வியட்நாம் போர் பற்றியெல்லாம் பழைய வரலாறுகள் மீண்டும் கிளறப்படலாம். அமெரிக்க ஆளும் வர்க்கமோ தமது முன்னைய பொற்காலம் குறித்தும் இனி அது மீண்டும் வருவது குறித்தும் சிந்திக்கத் தலைப்படலாம். ஆனால், அமைதிக்கு அப்பாலும் அமெரிக்கர் சிந்திக்கும்போது, அமைதியே காணாது அடக்குமுறைக்கு உள்ளாகிபோகும் மக்கள், அமைதியே அன்றி வேறு எதைப் பற்றிச் சிந்திக்க முடியும்? ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலண்டனில் நடைபெற்ற...

எமக்கு என்று ஒரு தாயகம் ! அதற்கு என்று ஒரு தேசிய பாதுகாப்பு ! நமக்கு இவை தேவை என உணர்த்திய

# ஆடி 83 இனப்படுகொலைகளின் பதினெறாவது நினைவுப் பேரணியில்----







தாவீடும் புலியும்
தலைவனின் முகமும்
தாங்கிய மக்கள்
கூவிய கோசங்கள் —
தமிழீழத்தின்
சோகங்கள்
சொன்னன.



களமாடும்
பெண்ணையும்
நிலமாளும் தமிழையும்
பலவாய் போற்றி
பல்லின
விடுதலைக்காய்
டங்காற்றும்
நண்பர்கள் — கீழே



ஜனநாயகத்திற்கான பர்மிய ஒற்றுமை முன்னணியைச் சேர்ந்த பிரதிநிதி.



'கிழக்குத் திமோர் பிரட்லின் விடுதலை அணி'யைச் சேர்ந்த பிரதிநிதி.

U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்